விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 19 புதன்கிழமை (02.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 045

ராம்கோ RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

### தமிழகத்தைப் பகைத்தால் எமக்கு ஆபத்து

# 1983 ஜூலை கலவரத்திற்காக வருத்தம் தெரிவிக்க வேண்டும்

## ஆணைக்குழு முன் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா



(கொழும்பு)

புலிகள் பலமடைவதற்கு 1983ஆம் ஆண்டு நடைபெற்ற கறுப்பு ஜூலை சம்பவமே பிரதான காரணமாகும். கறுப்பு ஜூலை சம்பவம் தொடர்பில் நாங்கள் வருத்தம் தெரிவித்தாக வேண்டும். இவ்வாறு நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் சமூகசேவை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார். இந்தியாவை நாம் எமது சகோதரனாகவும், தமிழகத்தை உறவினராகவும் பார்க்க வேண்டும். இந்தியாவை எமது பாதுகாவலனாக வைத்துக் கொள்வதுடன் அந்நாட்டை மீறி எந்த நடவடிக்கையிலும் நாம் ஈடுபடக் கூடாது என்றும் தெரிவித்தார். (19ஆம்பக்கம் பார்க்க)

## புதிய கட்சியை ஆரம்பிக்கிறார் கே.பி அதன் பின்னணியிலேயே யாழ்.வந்தார்

(கொழும்பு)

கே.பி.என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் பின்னணியிலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வந்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை அவர் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலரும் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விஜயத்தின்போது யாழ்ப்பாணத்திலுள்ள படைத்துறை உயர் அதிகாரிகளையும் சந்தித்த கே.பி, யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்ததுடன் யாழ்.மக்களுக்குத் தேவையான அவசியமான விடயங்களை நிறைவேற்றி வைப்பதாக அவர் உறுதிமொழி வழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அமெரிக்காவிலிருந்து கொழும்பு சென்றுள்ள புலம்பெயர் தமிழர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலேயே புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை கே.பி. மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை வடக்கின் அரசியல் மற்றும் களநிலைமைகள் குறித்து படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கே.பி. நேற்று முன்தினம் விளக்கம் அளித்துள்ளார். இச் சந்திப்பு படைத்துறை அமைச்சின் செயலகத்தில் நடை பெற்றுள்ளதாக படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-5)

# விடுதலைப் புலிகளை வெற்றி கொள்வதற்கு கொடுக்கப்பட்ட விலை மிக அதிகமானது

## அமெரிக்க இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் தெரிவிப்பு

(நியூயோர்க்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் பொய்ப்பித்த போதிலும் அதற்காக கொடுக்கப்பட்ட விலை மிக அதிகம் என அமெரிக்காவின் தெற்காசிய இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றிக்காக அதிகளவு பொதுமக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டது. இதற்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நியூயோர்க் வானொலி நிகழ்ச்சி ஒன்றுக்காக பிரபல தொகுப்பாளர் கிராண்ட் ரியருக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். இதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புலிகளை (19ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாயவுக்கு எம்.பி.பதவி கிடைக்கும்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பதவி விலக்கி அவரின் இடத்துக்குப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீவிர கவனம் செலுத்தி வருவதாக தெரிய வருகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்ற உறுப் (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக மீனவர் மீதான தாக்குதல் இலங்கையை இந்தியா அதட்டியுள்ளது

## அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறினார்

(சென்னை)

மீனவர்கள்மீதான தாக்குதலுக்கு இந்தியா தனது கடுமையான கண்டனத்தை இலங்கை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

புதுடில்லி சென்றுள்ள தமிழக முதலமைச்சர் கருணாநிதியை வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று சந்தித்துப் பேசிவிட்டு செய்தியாளர்களுக்கு கருத்துக் கூறும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்த கடலோரப் பாதுகாப்புப் படை மூலம் கூடுதல் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா, தமிழக முதலமைச்சர் கருணாநிதியிடம் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை நிறுத்துவதற்கு மத்திய அரசு மேற்கொண்டுள்ள நட (19ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகம் மீது தாக்குதல் அமெரிக்கா கவலை

(கொழும்பு)

லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தாக்கப்பட்டமைக்கு அமெரிக்கா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக விரைவானதும் முறையானதுமான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பிலுள்ள லங்கா ஈ நியூஸ் அலுவ (19ஆம் பக்கம் பார்க்க)

## 400 கிராம் பால்மாவின் விலையை 33ரூபாயால் அதிகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

400 கிராம் பால்மாவின் விலையை 33 ரூபாயினாலும் ஒருகிலோகிராம் பால்மாவின் விலையை 82.50 ரூபாயினாலும் அதிகரிப்பதற்கு அனுமதிக்குமாறு கோரி அரசுடன் பேசி வருவதாக அங்கர் பால்மாவை விநியோகிக்கும் பொன்டெரா நிறுவனத்தின் வர்த்தக குறியீட்டு முகாமையாளர் றொஷான் குலசூரிய தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நாம் வர்த்தக அமைச்சரை சந்திக்கவுள்ளோம். அதனையடுத்து முடிவுகள் தெரிந்துவிடும் என அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாம் கேட்டுள்ள விலை அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இறக்குமதி தீர்வை நீக்கப்பட்டதால் கிடைத்த நிவாரணம் மிக சொற்பமானது என அமைச்ச (19ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் விபத்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை- நெல்லியடி பிரதான வீதி தெருமூடி மடத்தடியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பஸ்தர் கனரக வாகனம் ஒன்றுடன் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் தம்பசிட்டி வீதி, புலோலியைச் சேர்ந்த செல்லையா தெய்வேந்திரன் (வயது -49) என்ற (20ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ள அனர்த்தத்தினால்

## வவுனியா, திருமலை மாவட்டங்களில் 2050 குடும்பங்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் வவுனியாவில் குழந்தையொன்று நீரில் மூழ்கி இறந்துள்ளதுடன் திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் சுமார் 2ஆயிரத்து 50குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் நிரம்பி வழிந்த நீர்ப்பாசனக் குளங்களால் தாழ்நிலப் பகுதிகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளன.பதுளை மாவட்டத்தின் பதுல்சிறிகம் பகுதியில் மண் சரிவு அபாயம் காரணமாக 15 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

கந்தளாய்க் குளத்தின் நீர்மட்டம் அதிகரித் (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## எகிப்தில் உள்ள இலங்கையர் தாயகம் திரும்ப ஏற்பாடு

எகிப்திலுள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்புவதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் என்.கே.றுகுணகே நேற்று தெரிவித்தார்.

எகிப்தில் தற்போது நிலவும் பதற்றம் காரணமாக இலங்கையர்கள் எகிப்துக்கு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்வதை தடுப்பதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரோ தீர்மானித்திருப்பதாகவும் றுகுணகே கூறினார்.

கடந்த வருடம் 280இலங்கையர்கள் தொழில் புரிவதற்காக எகிப்துக்குச் சென்றனர். அவர்களில் பெரும்பாலானோர் ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்கள். எகிப்திய நிலைமைகளை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அவதானித்து வருகிறது. அங்கு பணியாற்றுபவர்களின் குடும்பத்தினர் அச்சமடைய வேண்டாம் எனவும் றுகுணகே கூறினார்.

அதேவேளை எகிப்துக்கு தொழில் வாய்ப்பிற்காக செல்வதற்கான தடை தற்காலிகமானது எனவும் நிலைமை சீரடைந்தபின் அது மாற்றப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# எம் தமிழ் சொந்தங்கள் சிந்திய இரத்தத்திற்கு இலங்கை பதில் கூறும் காலம் நெருங்குகிறது

## முத்துக்குமாரின் நினைவுக் கூட்டத்தில் சீமான் முழக்கம்



ஈழத்தின் தமிழ்ச் சொந்தங்களும், தமிழக மீனவர்களும் சிந்திய கண்ணீருக்கும், இரத்தத்திற்கும் இலங்கை பதில் சொல்லும் காலம் நெருங்கிக் கொண்டிருப்பதாக நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் சார்பில் நாகையில் நடைபெற்ற ஈழத்தமிழர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க கோரி தீக்குளித்து தற்கொடை செய்து கொண்ட முத்துக்குமாருக்கு வீரவணக்கம் செலுத்தும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைவரும், திரைப்பட இயக்குனருமான சீமான் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போராடியே வாழ வேண்டிய நிர்பந்தத்திற்கு தமிழ் இனம் தள்ளப்பட்டுள்ளது. அடக்குமுறைகளால் இங்குள்ள ஆட்சியாளர்கள் நம்மை அடக்கிவிட முயற்சிக்கின்றனர்.

அடக்குமுறை அதன் வாசலை பெரிதாக்குமே தவிர அடைத்து விடாது. எல்லா துன்ப பூட்டுக்களுக்குமான திறவுகோல் ஆட்சி அதிகாரம் என்று அம்பேத்கார் கூறியுள்ளார்.

அந்த ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது தவிர நம் இன விடுதலைக்கு வேறு வாய்ப்பு இல்லை. ஈழச்சொந்தங்கள் மாண்டு மடிந்த போது இங்குள்ளவர்கள் யாராவது கண்ணீர் வடித்ததுண்டா? இந்தியா விரும்பிய போரைத் தான் இலங்கை அரசாங்கம் நடத்தி முடித்திருக்கிறது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

இதற்கு இங்கு மறுமொழி ஏதாவது உண்டா? தமிழ் இனத்திற்கு சீமான் உண்மையாக இருக்கிறான் என்பதால் என் எதிரிகள் என்னைக் கொல்லத் துடிக்கின்றனர். நான் இருந்தால் ஒரு சீமான், செத்தால் இந்த மண்ணில் ஒரு இலட்சம் சீமான் உருவாகுவார்கள் என்பதை என் எதிரிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தில் நம் தமிழ்ச் சொந்தங்களும், இங்கே மீனவ மக்களும் சிந்திய கண்ணீருக்கும் ,இரத்தத்திற்கும் இலங்கை பதில் சொல்லும் காலம் நெருங்கி கொண்டிருக்கிறது. சீமான் என்னென்ன வித்தைகள் காட்ட போகிறேன் என்பதை ஐந்து வருடம் பொறுத்திருந்து பாருங்கள்.

எந்த இலட்சியத்திற்காக முத்துக்குமார் தன் உடலில் நெருப்பை பற்ற வைத்துக் கொண்டானோ அந்த இலட்சியத்தை நிறைவேற்றும் வரை நான் ஓயப்போவதில்லை.

அ.தி.மு.கவை சீமான் ஆதரிப்பதாக பதறித் துடிக்கிறார்கள். அ.தி.மு.கவை ஆதரிப்பதாக நான் சொல்லவில்லை. ஈழத்தமிழர் விடுதலைக்காக பேராடிய பிரபாகரனை தூக்கில் போட சொன்ன ஜெயலலிதாவை நான் ஆதரிக்கவில்லை.

என் இனத்தை கொன்று குவிக்கக் காரணமாக அமைந்த காங்கிரஸ் கட்சியை நான் எதிர்க்கிறேன். தந்தை பெரியார், அம்பேத்கார், முத்துராமலிங்க தேவர் உள்ளிட்டவர்கள் எந்த காங்கிரஸ் கட்சியை ஒழிக்க நினைத்தார்களோ, என் தமிழ் இனத்தின் விடுதலையை வீழ்த்திய அந்த காங்கிரஸ் கட்சியை ஒழிப்பது தான் என் இரத்தத்தில் ஊறிய யுத்தமும், நாம் தமிழர் கட்சியின் கொள்கை முடிபும் ஆகும்.

ஆந்திராவில் தனி தெலுங்கான கோரி போராடும் சந்திரசேகரராவ் போல் தமிழகத்தில் தன்மான தமிழர்கள் அப்போது இருந்திருந்தால் நம்மிடம் இருந்து கச்சதீவு பறி போயிருக்காது. இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பது மட்டுமே நம் மீனவ சொந்தங்களை பாதுகாப்பதற்கான வழி. இதற்காக தமிழர்கள் ஒன்று திரண்டு போராட வேண்டும். நாம் அளிக்கும் வாக்கு நம்மை ஆளவா? நம்மை நாமே ஆளவா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சட்டமன்ற தேர்தல் மக்களின் அறிவாயுதம். வாக்கு அதற்கான கருவி. எனவே தேர்தலின் போது விழிப்போடு இருக்க வேண்டும். 2011இலிருந்து 2016 வரை நாம் தமிழர் கட்சி பதுங்கும் புலியாக இருக்கும்.

இடையில் இடைத்தேர்தல் நடைபெறும் சூழல் உண்டாகும் பட்சத்தில் நாம் தமிழர் கட்சி அப்போது களம் காணும்.

அதுவரை பொறுத்திருக்கும். 2016இல் தி.மு.க, அ.தி.மு.கவிற்கு மாற்றுச் சக்தியாக நாம் தமிழர் கட்சி தமிழகத்தில் அசைக்க முடியாத அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் என அவர் தனதுரையில் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ந-5)

**கண்ணீர் அஞ்சலி**



எமது முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதல் ஆசிரியராகப் பணிபுரிந்து முன்பள்ளியின் சிறப்பான செயற்பாட்டிற்கு உதவிய

**அமரர் நிறைவாசன் சுகந்தினி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்,
அருள்நந்தி முன்பள்ளி,
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.
(3622)

**வேலை ஆட்கள் தேவை**

மணலாறு கச்சான் அல்வா, வலம்புரி மிக்சர், தேன் சுவை குளுக்கோரச இனிப்பு வகை மற்றும் உணவு பொருட்கள் தயாரிப்பு விற்பனைத் துறையில் இயங்கும் பாரதி இன்டஸ்றீஸ் நிறுவனத்திற்கு தொழில் பழகியோரும், பயிற்சி பெற்று தொடர்ந்து பணியாற்ற விரும்புவோரும் தேவை. நேரில் வரவும்.

முகவரி: **பாரதி இன்டஸ்றீஸ்**
இல.19, சம்பியன் லேன், கொக்குவில்.
தொ.பே.இல. 021 492 1822

**வெல்டிங், தச்சுத்தொழிலாளர்கள் தேவை**

கொக்குவில் பாரதி கிரியேசன்ஸ் நிறுவனத்தில் வெல்டிங் மற்றும் மரக்கடைச்சல் தச்சுவேலை துறைகளில் திறமையும் அனுபவமும் உள்ள ஆட்கள் தேவை. பயிற்சியாளர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
வயதெல்லை: 18 வயதிற்கு மேற்பட்டோர்.

**பாரதி கிரியேசன்ஸ்**
இல.19, சம்பியன் லேன், கொக்குவில்.
தொ.பே. இல .021 492 1822
(3621)

### சாரதி அனுமதிப்பத்திர பரீட்சைக்கு திகதி வழங்கல்

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் இவ்வாண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன் சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு இன்று புதன்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 1.30மணிவரை எழுத்துப் பரீட்சைக்கான திகதிகள் வழங்கப்படவுள்ளது.

எனவே இதுவரை சாரதி அனுமதிப்பத்திர பரீட்சைக்குத் தோற்றாத மேற்படி விண்ணப்பதாரிகள் தமக்குரிய பரீட்சைத் திகதிகளை இன்று நேரில் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ-2)

### நூல் அறிமுக விழா

பேரறிஞர் க.பாலசுப்பிரமணியம் எழுதிய 'சிங்கை அரசர்களின் அறுவை மருத்துவம்' நூல் அறிமுக விழா இன்று பிற்பகல் 3மணிக்கு சுன்னாகம் சிவன் கோவில் திருமண மண்டபத்தில் கலாநிதி பொன்.இராமநாதன் தலைமையில் நடைபெறும்.

**யாழ்ப்பாணம் மாநகரசபை**

**வெற்றுக்காணி பொறுப்பேற்றல் சம்பந்தமான அறிவித்தல்**
**ஆதன இல:567, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி வட்டாரம் 14இல் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்குப்பக்கமாக ஆதன இலக்கம் 567 இற்குரிய ஆதனம் பராமரிப்பின்றி பற்றைகள் வளர்ந்து சுகாதாரத்திற்கு கேடு விளைவித்தும், நுளம்புப் பெருக்கத்திற்கு ஏற்றவகையிலும் இருப்பதனால், இதனை யாழ்ப்பாணம் மாநகரசபை 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடைச் சட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளது.

இவ்வாதனத்தின் மீது எவராவது உரிமை கொண்டாட இருப்பின் 15.02.2011ஆந் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். தவறின் ஆதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு பரிபாலிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

திருமதி யோ.பற்குணராசா
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.
(சி-2327)

# இன்று ஒரு தகவல்

## பங்கிடும் பண்பு

வயதான ஒருத்தர் நிலத்தை உழுது கொண்டிருந்தார். கிழிந்த துண்டொன்றை இடுப்பில் கட்டியிருந்தார்.

தலையில் ஒரு கந்தலை சுற்றியிருந்தார். உடம்பு முழுவதும் சேறாக இருந்தது.

இருந்தாலும் அந்த ஆள் மிகவும் உற்சாகமாக பாட்டுப்பாடிக் கொண்டிருந்தார்.

உடம்பில்தான் அவர் ஏழையே தவிர மனதில் ஏழையாகத் தெரியவில்லை. அந்தச் சமயத்தில் அந்த நாட்டுராஜா வேட்டைக்குப் போய்விட்டு பரிவாரங்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

அவர் இந்த விவசாயியைக் கண்டார்.

"இந்த ஆள் மிகவும் ஏழை என்பது அவரைப் பார்த்தாலே பளிச் சென்று தெரிகிறது. கட்டிக் கொள்வதற்கு நல்ல துணியில்லை. உடம்பு இளைத்துவிட்டது. வயிறு ஒட்டியிருந்தது. கண் குழி விழுந்து போயிருந்தது.

ஆனாலும் முகத்தைப் பார்த்தால் சந்தோஷமாக உற்சாகமாக இருப்பது மாதிரியே இருக்கிறது. இவ்வளவு உற்சாகமாக பாடிக் கொண்டிருக்கிறாரே என்று ஆச்சரியமாகப் பார்த்தார்" அந்த ராஜா. சரி அவரிடமே பேசிப்பார்க்கலாம் என்று முடிவு செய்தார்.

"ஐயா பெரியவரே கொஞ்சம் இப்படி வரமுடியுமா?" என்றார்.

"பொழுதாவதற்குள் இந்த வயல் முழுவதும் உழவேண்டும். அதனால் பேசுவதற்கு நேரமில்லை" என்றார் அந்தப் பெரியவர்.

"என்ன அவ்வளவு அவசரமா? மீதியிருந்தால் நாளைக்கு உழக் கூடாதா? அதுசரி... உனக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது?" என்று விசாரித்தார் ராஜா.

"எனக்கு சொந்தமாக உள்ளங்கையளவு நிலம் கூட இல்லை. இது என் எஜமானனின் நிலம். இது முழுவதையும் உழுது முடித்தால்தான் அவர் கூலி கொடுப்பார். நான் கூலிக்கு உழுது கொண்டிருக்கிறேன். உங்களிடம் பேசிக் கொண்டிருந்தால் அவருக்கு துரோகம் பண்ணியது போலாகும்" என்றார்.

ராஜா குதிரையை விட்டு இறங்கி வரப்பில் நடந்து கொண்டே அந்தப் பெரியவரிடம் பேச ஆரம்பித்தார்.

"ஒரு நாள் முழுவதும் உழுதால் உனக்கு எவ்வளவு கூலி?" என்று கேட்டார். "எட்டணா கூலி கிடைக்கும்" என்றார் அவர்.

"இவ்வளவுதானா? இதை வைத்துக்கொண்டு நீ எப்படிக் காலம் தள்ளுகிறாய்?" என்றார்.

"எதற்கும் கவலை இல்லை" என்றார் அவர்.

ராஜாவுக்கு மிகவும் ஆச்சரியமாகிவிட்டது.

"எட்டணா கூலி வாங்குமிவர் கவலையில்லாமல் இருக்கிறார். ஏராளமான வசதியுடன் இருக்கிற நான் கவலையில்லாமல் வாழ முடியவில்லையே" என்று நினைத்தார்.

"அது சரி... எட்டணாவில் எப்படிக் குடும்பம் நடத்துகின்றாய்?" என்று கேட்டார்.

எனக்குக் கிடைக்கும் எட்டணாவில் இரண்டணா குடும்பத்துக்கு செலவழிக்கின்றேன்.

இரண்டணா பழைய கடனுக்குக் கொடுக் கிறேன். இரண்டணா தருமம் செய்கிறேன். இரண்டணா வட்டிக்குக் கொடுக்கிறேன். ஒரு குறையும் இல்லை" என்றார்.

"ஒன்றும் புரியவில்லையே" என்றார் ராஜா.

"ஐயா எனக்கும் என்மனைவிக்கும் இரண்டணா செலவாகிறது. வயதான அம்மா, அப்பா இருக்கிறார்கள். சின்னவயதில் என்னைக் காப்பாற்றியவர்கள். அந்தக் கடனுக்கு இரண்டணா செலவாகிறது. அதுவுமழையகடன்.

என் தங்கச்சி ஒருத்தி ஆதரவில்லாத நிலையில் தன் மகனோடு என் வீட்டில் இருக்கிறாள்.

அவளுக்கும் மகனுக்கும் இரண்டணா செலவழிக்கிறேன்.

அது தருமம். எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டணா செலவழிக்கிறேன். அது வட்டிக்குக் கொடுப்பது மாதிரி பிற்காலத்தில் அவர்களே என்னைக் காப்பாற்றுவார்கள்.

"அந்த வகையில் நான் திருப்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்றார். ராஜாவுக்கு அர்த்தம் புரிந்தது. அந்த நிலத்தை விலைகொடுத்து வாங்கி அந்தப் பெரியவருக்கே தானமாகக் கொடுத்துவிட்டார்.

உழுதவருக்கே நிலம் சொந்தமாகிவிட்டது.

அன்றிலிருந்து அரசனுக்கும் ஆறுதல் கிடைத்தது.

எட்டணா வருமானத்தை வைத்துக் கொண்டு எப்படி காலந்தள்ளுவது என்று சொல்வதற்காக இந்தக் கதையைச் சொல்வதாக யாரும் தப்பாக நினைக்கக்கூடாது.

கிடைப்பதை எப்படிப் பங்கு போடுகிறார். எப்படி திருப்தியாக வாழ்கிறார் என்பதை கவனிக்க வேண்டும்.

ஒரு ஆள் நின்மதியாக மகிழ்ச்சியாக இருந்தான்.

"உங்களுடைய மகிழ்ச்சிக்கும் நின்மதிக்கும் என்ன காரணம்?" என்று கேட்டார் இன்னொருத்தர்.

"என்னிடம் இருந்தது முழுவதையும் என்பிள்ளைகளுக்கு சமமாகப் பங்குபோட்டுக் கொடுத்து விட்டேன். எனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளவில்லை.

அதுதான் நிம்மதிக்குக் காரணம்" என்றான்.

"உன்னிடம் எவ்வளவு இருந்தது?" என்று கேட்டார்.

"மொத்தமாக 50 ஆயிரம் ரூபா இருக்கும்" என்றான்.

"அவ்வளவும் பணமாகவே இருந்ததா?" என்றான்?

"இல்லை அவ்வளவும் கடன். அதைத்தான் பிரித்துக் கொடுத்தேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்கான அடையாளச் சின்னம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



அம்பாந்தோட்டையில் 2018 இல் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிக்கான அடையாளச்சின்னம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இது தொடர்பான நிகழ்வில் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே அந்தச் சின்னத்தை கையளித்தார்.

அமைச்சர் டிலான் பெரேரா, பொதுநலவாயநாடுகளின் விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாட்டுக்குழுவின் இணைத் தலைவரும் மத்தியவங்கியின் ஆளுநருமான அஜித் நிவாட்கப்ரால், பொதுநல வாய நாடுகளின் விளை யாட்டு நிறுவனம் மற்றும் தேசிய ஒலிம்பிக் குழு ஆகியவற்றின் தலைவருமான ஹேமசிறி பெர்ணாண்டோ, இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் .

(ஸ்ரீ-2)

# க.பொ.த உயர்தர மீள்பரீட்சைக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலிருந்து இவ்வருடம் க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்ற விரும்பும் மாணவிகளை நாளை வியாழக்கிழமை அல்லது அதற்கு முன்னர் தமது பெயர்களை பாடசாலை அலுவலகத்தில் பதிவு மேற்கொள்ளுமாறும் பதிவு செய்யத்தவறும் பட்சத்தில் விண்ணப்பம் அனுப்பப்படமாட்டாது என்றும் அதிபர் திருமதி வி.பேரின்பநாதன் அறிவித்துள்ளார் (ஸ்ரீ-2)

# சைவ சமய அறிவுப்போட்டிகள்

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு வருடாந்தம் நடாத்தி வரும் சைவசமய அறிவுப்பரீட்சை மற்றும் கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நாளை வியாழக்கிழமை ஆகும்.

இவற்றிற்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து சைவ சமய அறிவகம், இல.82, நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சை செயலர் சு.சிறிகாந்தன் கேட்டுள்ளார். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 45-50 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 320 | 400 | 400 | 300 |
| தக்காளி | 80 | 80 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 55 | 40 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 110 | 100 | 140 | 110 |
| பூசணி | 30-35 | 50 | 50 | 35 |
| புடோல் | 70 | 110 | 120 | 100 |
| வாழைக்காய் | 35-40 | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 250-270 | 360 | 280 | 220 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 150 | 160 | 130 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 140 | 90 |
| கருணைக் கிழங்கு | - | 50 | 70 | 50 |
| பயற்றங்காய் | 200 | 220 | 200 | 180 |
| லீக்ஸ் | 110 | 120 | 160 | 120 |
| பீற்றூட் | - | 150 | 140 | 140 |
| கறிமிளகாய் | - | 250 | 250 | 270 |
| போஞ்சி | 100-120 | 150 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | - | 140 | 180 | 130 |
| கீரை - 1 பிடி | 5-15 | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 30-40 | 40 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40 | 60-70 | 50 |

# இராசி பலன்

*02.02.2011*

*(தை 19, புதன்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*

*சதுர்த்தசி காலை 7.10 மணிவரை*

*உத்தராடம் பி.ப 1.20 மணிவரை*

*இராகு காலம் 12.36-2.06 மணிவரை*

*சுப நேரம் 5.06-6.36 மணிவரை*

*அமாவாசை விரதம்*

**மேடம்** யோகமான நாள், திட்டமிடாமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், தொழில்ரீதியாக அபிவிருத்தியை மேற்கொள்ளுவீர்கள், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**இடபம்** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** வரவைக்காட்டிலும் செலவு அதிகரிக்கும், அதிகாரிகள் உங்கள் செயற்பாடுகளில் குறைகூறலாம், வேலைச்சுமை கூடும்,கூட்டாளிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**கடகம்** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிடைக்கலாம், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், மங்கல நிகழ்வில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், தொழில் வளர்ச்சி சம்பந்தமான சில முக்கிய முடிவு எடுப்பீர்கள், போட்டியாக இருந்தவர்கள் அனுசரணையாக நடப்பர்.

**கன்னி** மன நிறைவான நாள், கடிதம் கனிந்த தகவலை கொண்டு வந்து தரும், பிள்ளைகளால் பெருமைகள்வந்து சேரும், சொந்தங்களால் நன்மையுண்டு.

**துலாம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், வாகனத்தைப் பழுதுபார்க்கும் எண்ணம் மேலோங்கும், சுப காரியத் தேவைக்காக செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், பொருள் சேர்க்கையுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியை கண்டு கொள்வீர்கள்.


**தனுசு** நாவன்மையால் நற்பெயர் எடுக்கும் நாள்,மாலையில் மங்கள நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.


**மகரம்** குடும்பப் பொறுப்புக்களால் மனச்சுமை அதிகரிக்கும்,பெரியோரின் ஒத்துழைப்பால் ஆச்சரியப் படத்தக்க செயலொன்றைச் செய்து முடிப்பீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்** ஓய்வில்லாமல் வேலை செய்யும் சூழ்நிலை உருவாகும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மீனம்** பணவரவு இருமடங்காகும், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பெருமையான நாள்,

வளவன்





யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலவரங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான உதவிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். ஆயர் இல்லத்தில் இடம் பெற்றது. இதில் பிரித்தானிய உயர் அதிகாரிகள் குழு மற்றும் யாழ். சமூக பிரதிநிதிகள் கலந்துரையாடல் மேற்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள் :- எஸ்.கரன்)

## விளையாட்டுப் போட்டிகள்

(அல்வாய்)

அல்வாய் அம்பாள் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ம.மகேஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-19)

❖❖❖

(அல்வாய்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் செ.பாலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வக்குமரன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)




## கலந்துரையாடல்

(கரவெட்டி)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இவ்வாண்டுக்கான பிரதேச விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை 3.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பதிவுசெய்த விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.லக்ஸ்மன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-24)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

(கரவெட்டி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கிற்கு உட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வந்த உதைபந்தாட்ட போட்டிகளில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் வல்வை பி அணியை எதிர்த்து மோதிய சக்கோட்டை சென்சேவியர் அணி 5:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் வதிரி பொம்மேஸ் அணியை எதிர்த்து மோதிய வதிரி டயமன்ஸ் அணி 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தெரிவாகியுள்ளது. இறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்சேவியர் அணி மோதவுள்ளது. (ஸ்ரீ-3-24)

# பொலிஸ் பாதுகாப்பு சாவடி அமைக்கக் கோரிக்கை

(அல்வாய்)

மந்திகை இராணுவ முகாமிற்கு அருகில் பொலிஸாரின் பாதுகாப்பு சாவடி ஒன்றினை அமைத்துத் தருமாறு புலோலி தெற்கு மக்கள் சார்பாக கிராம அலுவலர் எஸ். குமரகுருநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பகுதியில் அதிகரித்து வரும் கொலை, கொள்ளை , விபத்துக்கள் ஆகியவற்றை உடனுக்குடன் பொலிஸாருக்கு அறிவித்து மக்கள் நலன் காப்பதற்கு உதவியாக மந்திகை இராணுவ முகாமிற்கு அருகில் இப் பொலிஸ் பாதுகாப்புச் சாவடியை அமைத்து தருமாறு அப்பகுதி கிராம அலுவலரும் மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-19)

## கரப்பந்தாட்ட பயிற்றுநர்களுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வளவியலாளர்களினால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளது.

எனவே மேற்படி பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விரும்பும் கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள் தங்கள் பெயரினை எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக இல. 186/26, பருத்தித்துறை வீதி , யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க செயலாளரின் இல்லத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

# 50 இலட்சம் ரூபா செலவில் 5 வீதிகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினால் 50 இலட்சம் ரூபா செலவில் 5 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் இமையாணன் வீரகத்தி விநாயகர் வீதி 12 இலட்சம் ரூபா செலவிலும் கரணவாய் கிழக்கு ஜனசக்தி சனசமூக நிலைய வீதி 12 இலட்சம் ரூபா செலவிலும் துன்னாலை தெற்கு வனந்தில் வீதி 10 இலட்சம் ரூபா செலவிலும் கரணவாய் வடக்கு புலனைப்பிள்ளையார் விதி 13 இலட்சம் ரூபா செலவிலும் உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவு சங்க வீதி 4 இலட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபைச் செயலாளர் தி. அன்னலிங்கம் மேற்கொண்டு வருகின்றார். (ஸ்ரீ-3-10)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளவிருப்பதால் இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கே சன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின் விநியோகம் வழங்கப்படலாமென இலங்கை மிக்சாரசபையின் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அபிராமிப்பட்டர் திருவிழா

(பொலிகண்டி)

அபிராமிபட்டர் திருவிழா இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் பிரதமகுரு சிவ ஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பூஜைகள் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)



சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் நோர்வே இந்து கலாசார அமைப்பின் அனுசரணையுடன் 75 பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இவ்வமைப்பின் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் இவ் உதவியை வழங்குவதை படத்தில் காணலாம்.

## விபத்தில் முதியவர் படுகாயம்

(கரவெட்டி)

உழவியந்திரம்– துவிச்சக்கர வண்டி விபத்தில் கழுத்திலும் தலையிலும் பலத்த காயமடைந்த வயோதிபர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொற்றாவத்தை சமரபாபு கிராமத்திலிருந்து நேற்று முன்தினம் காலை உடுப்பிட்டி நோக்கி துவிச்சக்கர வண்டியில் வயோதிபர் சென்ற வேளை அப்பகுதியால் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு கீழே விழுந்துள்ளார்.

அச்சமயம் பின்னால் வந்த உழவியந்திரம் வயோதிபரின் கழுத்தின் மேல் ஏறியதால் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் சமரபாபு கிராமத்தைச் சேர்ந்த அம்பலவன் திருப்பதி (வயது -70) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்கை பெற்று வருகிறார். (ஸ்ரீ-3-24)

## கோழிகள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தொழில் பேட்டையிலுள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் உள்ள பண்ணையில் 2 மாத சேவல் குஞ்சுகள் ஒரு கிலோ 250 ரூபாவிற்கும் 18 மாதம் கழிக்கப்பட்ட சேவல் பேட்டுக் கோழிகள் ஒரு கிலோ 350 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவை கொல்லைப்புற (கலப்பின) கோழிகள் என்பதால் இறைச்சிக்குப் பயன்படுத்த முடியும். சேவல் குஞ்சுகளை வெளியில் திறந்து விட்டு வளர்க்கவும் முடியும்.

இவற்றை வாங்க விரும்புவோர் அச்சுவேலி தொழில் பேட்டைக்கு அலுவலக நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை சென்று பெற்றுக் கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0213211366 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என இத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ. அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா

(கொழும்புத்துறை)

வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் கத்தோலிக்க மக்களின் யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றானதுமான குருநகர் புதுமை மாதா ஆலயத்திருவிழா திருப்பலி நாளை வியாழக்கிழமை காலை 5.15 மணிக்கும் கூட்டுத் திருப்பலி காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இவ்விழாவிற்கான நற்கருணை ஆராதனை இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

மேற்படி திருநாளன்று மாலை 5.30 மணிக்கு அன்னையின் திருச்சொரூப பவனி குருநகர் வீதிகள் வழியாக எடுத்துவரப்படவுள்ளது. (ஸ்ரீ-3-51-39)

# இந்தியாவிலிருந்து இறக்குமதியான முட்டைகள் விநியோகிக்கப்படவில்லை

## கோழியிறைச்சி வியாபாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 5 மில்லியனுக்கும் அதிகமான முட்டைகள் ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் சந்தையில் விநியோகிக்கப்படாமல் உள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அவை கடற்றொழில் திணைக்களத்தில் உள்ள குளிரூட்டியில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முட்டையின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இம் முட்டைகள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

இதற்கு மாறாக முட்டைத்தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலை அதிகரிப்புக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை கோழி இறைச்சி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் டி.டி வணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். (ஸ்ரீ-9)

# சகல துறைகளிலும் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்த திட்டம்

(கொழும்பு)

இவ்வருடத்தில் நாட்டின் சகல துறைகளிலும் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளதாக பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 15.9 மில்லியன் ரூபாவும் பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 31.9 மில்லியன் ரூபாவும் தேசிய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 21.4 மில்லியன் ரூபாவும் செலவிடப்படவுள்ளது.

அத்துடன் சகல மாகாணங்களையும் சமநிலையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம் பெறுவதை நிச்சயிக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 1.12 மில்லியன் ரூபாவை அமைச்சு ஒதுக்கியுள்ளது.

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் அதிக எண்ணிக்கையான சுற்றுலாப்பயணிகளை பெறுவது அரசாங்கத்தின் நோக்கம் என்று அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-9)

# பாதுகாப்பு அங்கிகளின்றி மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதியில்லை

## கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் தெரிவிப்பு

உயிர் பாதுகாப்பு அங்கிகள் உள்ளிட்ட உபகர ணங்கள் இன்றி மீனவர்கள் கடலுக்கு செல்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது என கரையோர பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மீனவர்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கடற்தொழில் அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்காலத்தில் பாதுகாப்பு உபகரணங்கள் இன்றி கடலுக்கு செல்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அத்துடன் உயர்பாதுகாப்பு அங்கி உள்ளிட்ட உபகரணங்கள் இன்றி சுற்றுலாப் பயணிகளுடன் படகுகள் கடலில் பயணிக்க இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். அவ்வாறான படகுகளுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டிள்ளார். (ஸ்ரீ-9)

# சுதந்திர தினவிழாவை ஐ.தே.க.புறக்கணிக்கும்

## பொதுச்செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திர தின விழாவை ஐ.தே.க புறக்கணிக்கும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.



பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை விடுவித்த யுத்த நாயகன் சிறையில் அடைக்கப் பட்டுள்ள நிலையில் கொண்டாடுவதற்கு எதுவும் இல்லை என நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களின் உரிமைகள் உட்பட பல உரிமைகள் அடக்கு முறைக் குள்ளாக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் பங்கு பற்றிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி விஜேசேகர கருத்துத் தெரிவிக்கையில்,

சரத்பொன்சேகாவின் விடுதலைக்காக சுதந்திர தினத்தன்று ஐ.தே.க. மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தும் எனக் கூறினார்.

பல்வேறு அமைப்புகள் இப்போராட்டத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கும் தமிழியல் விருது-2010

(கொழும்பு)

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்தமிழ் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்படும் 2010க்கான தமிழியல் விருது பெறும் மூத்த படைப்பாளிகளினதும் சிறந்த நூல்களினதும் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய எழுத்தாளர் ஊக்குவிப்பு மையஸ்தாபகர் ஓ.கே.பாக்கியநாதன் தமிழியல் விருது, மூத்த படைப்பாளியும் மூதறிஞருமான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பிக்கு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

தமிழியல் வித்தகர் பட்டமும் தலா 15 ஆயிரம் ரூபா பொற்கிளியுடன் வவுனியா இராமகிருஷ்ணா- தமிழியல் விருதும் தமிழ் இலக்கிய மேம்பாட்டிற்கு உரமாய் நின்று உழைத்த மூத்த படைப்பாளிகளான டொமினிக் ஜீவா , அநுவை நாகராஜன் , சா.இ.கமலநாதன், ந.பாலேஸ்வரி, அருணா செல்லத்துரை, ஆரையூர் நவம் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

அத்துடன் 2009ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் இருந்து சிறந்த நூல்களாக தெரிவு செய்யப்பட்ட தமிழியல் விருதுக்கான நூல்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் குழந்தை இலக்கிய நூலுக்கான விருது வசந்தி தயாபரன் எழுதிய "குடை.... நடை.... கடை...." என்ற நூலிற்கும் , விடலை இலக்கிய நூலுக்கான விருது கோகிலா மகேந்திரன் எழுதிய "உள்ளம் பெருங்கோயில்" என்ற நூலிற்கும் , கவிதை நூலுக்கான விருது மு.பொன்னம்பலம் எழுதிய "கவிதையில் துடிக்கும் காலம்" என்ற நூலிற்கும் காவிய நூலுக்கான விருது நிலா தமிழின் தாசன் எழுதிய "நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள்" என்ற நூலிற்கும் சிறுகதை நூலிற்கான விருது சுதாராஜ் எழுதிய "மனைவி மகாத்மியம்" என்ற நூலிற்கும் கிடைக்கவுள்ளது.

மேலும் நாவலுக்கான விருதுகள் எஸ். ஏ.உதயன் எழுதிய "தெம்மாடுகள்",வி.ஜீவகுமாரன் எழுதிய "மக்கள்.... மக்களால் .... மக்களுக்காக " (டென்மார்க்), ஓ.கே. குணநாதன் எழுதிய "குறும்புக்கார ஆமை யார்" (சிறுவர் நாவல்) ஆகிய நூல்களிற்கும் நாடக நூலிற்கான விருது அகளங்கன் எழுதிய "கங்கையின் மைந்தன்" என்ற நூலிற்கும் நாட்டுக்கூத்து நூலிற்கான விருது கலையார்வன் கு.இராயப்பு எழுதிய "கூத்துக்கள் -5" என்ற நூலிற்கும், மொழி பெயர்ப்பு நூலிற்கான விருது கெகிராவ ஸுலைஹா எழுதிய "பட்டுப்பூச்சியின் பின்னுகைபோலும்" என்ற நூலிற்கும் , வரலாறு நூலிற்கான விருது அ.மு. ஷரிப்புத்தீன் எழுதிய "மருதமுனையின் வரலாறு" என்ற நூலிற்கும் கிடைக்கப் பெறவுள்ளது. அத்துடன் ஆய்வியல் விருதுகள் இ.ஜீவகாருண்யம் எழுதிய "தேடலும் விமர்சனங்களும்", வே.குணரத்தினம் எழுதிய "அரசறிவியல்" ஆகிய நூல்களிற்கும் , அறிவியல் விருது பொ.ஐங்கரநேசன் எழுதிய "ஏழாவது ஊழி" என்ற நூலிற்கும் பழம் தமிழ் இலக்கிய விருது த. கனகரத்தினம் எழுதிய "செந்தமிழ் வளம்பெற வழிகள்" என்ற நூலிற்கும் இன நல்லுறவு இலக்கிய விருது 10இற்கும் மேற்பட்ட இன நல்லுறவு நூல்களை எழுதிய "சிட்னி மார்க்கஸ் டயஸ்" என்ற நூலிற்கும் குறும்பட (இறுவட்டு) விருது "கிழக்கு வானம்", "பள்ளிக்கூடம்" என்ற குறுந்திரைப்படத்திற்கும், ஓவியம்/வடி வமைப்பு விருது சுசிமன் நிர்மலவாசன் வரைந்த ஓவியத்திற்கும் ,பதிப்பக விருது போர்க்கால சூழலில் கோடு போட்ட அப் பியா சக் கொப்பியில் 25 இக்கும் மேற்பட்ட நூல்களை வெளி யிட்டு சாதனைபடைத்த யாழ்ப் பாணம் மீராப் பதிப்பக உரிமை யாளர் டேவிட்லி கோரிக்கும்வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# செயற்கை பெற்றோல் தயாரிப்பு

(கொழும்பு)

தற்போது இயற்கையாக கிடைக்கும் கச்சா எண்ணெயில் இருந்து தயாரிக்கப்படும் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தநிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் செயற்கை பெற்றோலை தயாரித்துள்ளனர். ஹைட்ரனை மைய மாக வைத்து புதிய மூலக்கூறுகளுடன் அது தயாரிக்கப்படுகிறது.

இந்தப் பெற்றோல் மூலம் கார்கள் மற்றும் என்ஜின்களை இயக்க முடியுமெனவும் இதில் இருந்து வெளியாகும் புகையால் காற்றில் மாசு ஏற்படாது என்றும் அத்துடன் சுற்றுச்சூழல் மாசடையாது எனவும் கூறப்படுகிறது. வெளியாகும் வாயு கார்பனை போன்று மக்களின் உடல் நலத்துக்கு தீங்கு இழைக்காது.

செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட இந்த பெற்றோல் ஒரு லீற்றர் 14 ரூபாய்க்கு விற்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த பெற்றோல் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனையாக இன்னும் 3 ஆண்டுகளாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்டீபன் பென்னிங்டன் தலைமையிலான விஞ்ஞானிகள் இந்த செயற்கை பெற்றோலை கண்டுபிடித்துள்ளனர். இது சாதாரண பெற்றோலை விட 3 மடங்கு சக்தி வாய்ந்த வாகனங்களில் அடைக்கப்பட்டு அடுத்த ஆண்டு சோதனை நடத்தப்படும். பின்னர் அது பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படும் என குறிப்பிடப்படுகின்றது. (ஸ்ரீ-2)

2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 05 1967

இறப்பு 02 02 2009

அமரர் யோசேப் சிவகுமார் (முவி)

திதி-சப்தமி

அன்பு மொழி பேசி அரவணைக்கும் தெய்வமானீர்
மின்னும் ஒளியதைப் போல் சிரித்து
நெஞ்சில் இடம்பிடித்தீர்
எங்கே சென்றீர் எமைவிட்டு
தவிக்கின்றோம் உன் முகம் காண....

இல.912, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

உம் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

(3613)

# செவிவழிக் கதைகளின் அடிப்படையில் வெளிநாடுகள் செயற்படுகின்றன

## பாதுகாப்பு செயலர் குற்றச்சாட்டு

ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற வல்லரசு நாடுகள் செவிவழிக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே இலங்கை தொடர்பில் தமது கொள்கைத் தீர்மானங்களை எடுத்திருப்பதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்துக்களில் பெரும்பாலானவை இலங்கையில் இராஜதந்திர மட்டத்தில் கருத்தாடல்களுக்கு உட்பட்டவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் ஊடாக அண்மையில் பகிரங்கப்படுத்தப்பட்ட இலங்கை தொடர்பான விடயங்களை ஆராயும் போது இது புலப்படுவதாக பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் மணிலா ரைம்ஸ் செய்தித்தாளுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெருங்கிய முக்கியஸ்தர்கள் தற்போது அரசாங்கத்துடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்படுவதாக தெரிவித்தார்.

அவர்களில் இருவர் அரசாங்கத்தில் பதவிகளை வகிப்பதுடன் மற்றையவர் அரசசார்பற்ற அமைப்பு மட்டத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கிறார். நிலைமை இவ்வாறு இருக்கையில், வெளிநாடுகளில் வாழும் சில தமிழ்க் குழுக்கள் தொடர்ச்சியாக இலங்கைக்கு எதிராக செயற்படுவது துரதிர்ஷ்டவசமான விடயம் என பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து வெளியாகும் அனுகூலமான செய்திகள் அவர்களுக்கு அதிருப்தி அளிக்கும் செய்திகளாக இருக்கின்றன. அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரே இனமாக சுமுகமான விதத்தில் வாழ்வதற்கான சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்றார்.

நாட்டின் எல்லா பிரதேசங்களும் எல்லா பிரஜைகளாலும் சென்று வரக்கூடிய விதத்தில் தற்போது இருப்பதாகவும் இதுவே தம்மால் மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டிய செய்தியாக இருப்பதாகவும் பாதுகாப்பு செயலாளர் சுட்டிக்காட்டினார்.

அதனை ஒருபோதும் பின்னடிப்பதற்கும் பாதிப்படைவதற்கும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பத்திரகாளி கீதங்கள் இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் மீது பாடப்பட்ட பத்திரகாளி கீதங்கள் ஆலய இலட்சார்ச்சனை பெருவிழாவின் போது இறுவெட்டாக் வெளியிடப்பட்டது.

இதற்கான பாடல்களை ஆசிரியர் துரை கணேசமூர்த்தி எழுத சப்தமி கலையக இயக்குநர் சத்தியன் இசையமைத்துள்ளார்.

பாடல்களை யாழ். பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி நா.வி.மு. நவரத்தினம் , விரிவுரையாளர்கள் த.றொபேட், ந.சொரூபி, எஸ்.குமாரசாமி, ஏ.நுசந்தா மேரின் யோசப் ஆகியோர் பாடியுள்ளார்கள். (ஸ்ரீ-2)

# புலிகள் தொடர்பான சஞ்சிகைகளை வைத்திருந்த இருவர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான சஞ்சிகைகளை வைத்திருந்த இருவர் குருநாகல் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான சஞ்சிகைகள் மற்றும் பிரபாகரனின் புகைப்படங்கள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

கொபிகேன பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவரும் மாவத்த கமவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர் விஸ்வமடு பிரதேச இராணுவ முகாமில் கடமையாற்றி வருவதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பேருந்தில் வைத்து இந்த சஞ்சிகைகளை பார்வையிட்ட போது பொலிஸாருக்கு பேருந்தில் பயணித்தவர்கள் தகவல் வழங்கியதாக் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இளைஞர் மற்றும் யுவதியிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கையில் ஊடக அலுவலக தாக்குதல் குறித்து ஐ.நா. சபை அறியவில்லை

## இன்னர் சிற்றி பிரஸ் விமர்சனம்

லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தாக்கப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செய்தியாளர் சந்திப்பின் போது கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இன்னர் சிற்றி பிறஸ் செய்தியாளர்களால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்ட போதும், பேச்சாளர் மாட்சின் சினர்ஸ்கீ இதற்கான பதிலை முன்வைக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தீ மூட்டப்பட்டுள்ள நிலையில், அது இலங்கையின் ஊடக சுதந்திரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமையாதா? அது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் அல்லது ஐக்கிய நாடுகள் சபை எந்த கருத்தையும் முன்வைக்கவில்லையே என கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் இது தொடர்பில் பான் கீ மூன் இன்னும் அறியவில்லை எனவும் தேடி அறிந்த பின்னர் பதில் கூறுவதாகவும் மார்டின் நெசர்க்கி பதில் வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் உலகமே அறிந்துள்ள நிலையில், பொறுப்புள்ள பொதுச்செயலாளர் அறியாதிருப்பது ஏன் என இன்னர் சிற்றி பிறஸ் விமர்சித்துள்ளது.

இதேவேளை கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் காணாமல் போன ஊடகவியலாளர் எக்னெலிகொட தொடர்பில் அவருடைய மனைவி ஐக்கிய நாடுகள் சபைக்கு கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளமை குறித்து இன்னர் சிற்றி பிறஸ் நேற்று முன்தினம் சந்திப்பின் போது கேள்வி எழுப்பியது.

எனினும் அதற்குப் பதில் வழங்கிய பேச்சாளர் நெசர்க்கி இந்த கோரிக்கை மனு கையளிக்கப்பட்டமை குறித்து தமக்குத் தெரியவரவில்லை எனக் குறிப்பிட்டார்.

எனவே அது தொடர்பில் அறிந்த பின்னர் கருத்துக்கூறுவதாக நெசர்க்கி தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர் எக்னெலிகொடவின் மனைவி கோரிக்கையை முன்வைத்தமையானது சர்வதேச ஊடகங்களிலும் வெளிவந்த செய்தியாக உள்ளபோது அந்தக் கோரிக்கை மனுவை பெற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபைக்கு அது தெரியாமல் இருப்பது புதுமையானதென இன்னர் சிற்றி பிறஸ் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**பெருமருந்து/ ஈச்சுரமூலி**

**Botanical Name - Aristolochia indica.**
**Family - Aristolochiaceae**
**Engl- Indian birth wort**
**Sinh- Sapsanda.**

இதுநீண்டமெல்லியவளைந்தபல்லாண்டு காலம் வாழக்கூடிய ஏறு கொடித்தாவரமாகும்; வரம்புகளையுடைய(ridged) சாம்பல் கலந்த பச்சை நிற தண்டுகளையுடையது; இலைகள் தனியிலை ஒன்று விட்ட இலையமைப்புடையது. 4 தொடக்கம் 8.5 செ.மீ. நீளமும் , ஒன்று தொடக்கம் 4.5 செ.மீ அகலமுடையதுமாகும்.

இலைகளின் அடிப்பக்கம் தட்டையாகவும் நுனிப்பக்கம் கூராகவும் காணப்படும்.

இலையின் மேற்பக்கம் பிரகாசமான பச்சை நிறமாகவும் கீழ்ப்பக்கம் வெளிறிய நிறத்திலும் காணப்படும். இலைக்காம்பு 0.6- 1.8 செ.மீ. நீளமுடையது. பூக்கள் ஒழுங்கற்றவை, இருபாலானவை.


ஊதா கலந்த மண்ணிறமானவை. பூக்களின் வெளிப்பக்கம் பச்சை கலந்த வெண்ணிறமானவை. இதன் பழங்கள் 6 சோணைகளை யுடையது; தட்டையான இறக்கையுடைய விதைகள் காணப்படும். பூக்களை புரட்டாதி முதல் தை மாதம் வரை காணலாம்.

**இன விருத்தியும் , பரம்பலும்**

யாழ். மாவட்டத்தில் ஈரலிப்பான மண்ணுள்ள பிரதேசங்களில் இதனை செழிப்பாக அவதானிக்கலாம். விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம். இதன் இலைகள் மிகவும் வாசனையுடையவை.

**மருத்துவப் பயன்கள்:**

✦ இதன் வேர், இலை ஆகியன மருத்துவ குணங்கள் மிக்கவை. இதன் வேர் அதிக



கசப்பாக இருக்கும்.

✦ 40 கிராம வேரை பஞ்சுபோல் தட்டி ஒரு குடுவையில் போட்டு 500 மில்லி நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்சசி 30 தொடக்கம் 60 மில்லி காலை, மாலை தேள்கடி, பாம்புக்கடிக்கு கொடுக்கலாம்.

✦ இதன் வேரை தேன்விட்டு அரைத்து 4 கிராம் அளவு உட்கொண்டு வர உடல் வீக்கம் தணியும்.

✦ இதன் இலைச்சாறு 5 துளி (5 rops) தேன் ஒரு தேக்கரண்டியில் கலந்து கொடுக்க குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுப் போக்கு குணமாகும்.

✦ பெருமருந்து இலைகளை றம்பைக்கு பதிலாக அசைவ உணவு (இறைச்சி வகை) சமைக்கும் போது சிறுகசிறுக அரிந்து சேர்த்தால் இறைச்சி வகை மென்மையாவதோடு, நன்கு ஜீரணம் அடையும். றம்பை இலைகளை தொடர்ச்சியாக பயன் படுத்துவதால் குடலில் நமைச்சலை ஏற்படுத்தலாம். எனவே கறிவேப்பிலை போன்று பெருமருந்து கொடிகளையும் வீடுகள் தோறும் வேலிகளில் ஏறவிட்டு வளர்த்து பயன்பெறலாம். மேலும் இதன் இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை கொடுக்க பசியின்மை, சமிபாடின்மை, சிரங்கு, சொறி முதலியன நீங்கும்.

✦ இதன் வேர்களை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 2 கிராம் அளவு வெந்நீரில் காலை, மாலை கொடுக்க வாதநோய்கள், உடம்புவலி முதலியன நீங்கும். இதன் இலைச்சாறு 30 தொடக்கம் 60 மில்லி அளவு உட்கொண்டாலும் நச்சுக்கடி தீரும்.

✦ பெருமருந்து வேர், நொச்சியிலை, வாதநாராயணன் இலை, முடக்கொத்தான் இலை சம அளவில் நிழலில் உலர்த்தி மர உலக்கையால் இடித்து அரித்து காலை, மாலை ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வர எத்தகைய நாட்பட்ட வாதரோகமாயினும் குணமாகும்.

✦ புங்கம் வேர், தும்பைவேர், பெருமருந்து வேர் ஆகிய மூன்றையும் சம அளவாக எடுத்து சிறுசிறு துண்டுகளாக நறுக்கி கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து ஒரு தேக்கரண்டி அளவு தேள்கடி, பூரான்கடிக்கு காலை, மாலை வெந்நீரில் உட்கொள்ளலாம்.

✦ பெருமருந்து இலை 35 கிராம், பெருஞ்சீரகம்10 கிராம், அதிமதுரம் 10 கிராம், கொத்தமல்லி 20 கிராம், சுக்கு 20 கிராம் ஆகியவற்றை ஒரு லீற்றர் தண்ணீரில் போட்டு 1/4 லீற்றராக குடிநீர் செய்து 30 தொடக்கம் 60 மில்லி தினசரி இருவேளை குடிக்க அஜீரணக் கோளாறுகள் நீங்கி குடல் வலிமை பெறும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# தேர்தல் காலங்களில் அரச வாகனங்களை பயன்படுத்தத்தடை

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அரச வாகனங்களை தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகளோ சுயேட்சைக் குழுக்களோ பயன்படுத்தக்கூடாது .

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் கூட்டங்கள்,கலந்துரையாடல்கள் நடத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

திணைக்களங்களில் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்திலேயே ஆணையாளர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச மற்றும் அரச கூட்டுத்தாபன ஆதனங்களை ,வாகனங்களை தேர்தல் கால எல்லைக்குள் அரசியல் கட்சிகளோ, சுயேட்சைக்குழுக்களோ பயன்படுத்துவது தவிர்க்கப்படவேண்டும்.

அரசுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள்,ஜீப் வண்டிகள் ஹெலிகொப்டர்கள் போன்ற வானூர்திகள் கடந்த தேர்தல்களின் போது பாவிக்கப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஆகவே,அரச வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் அவ்வாகனங்கள் ஏதேனும் ஓர் அரசியல் கட்சியில் சுயேட்சைக்குழுவின் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாத விதத்தில் தேர்தல்கள் காலக்கெடுவுக்குள் வாகனக்குழாத் தினரை பேணுதல் முனைப்பான கவனத் தோடு மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான வாகனங்கள் என்பனவும் இதில் அடங்கும்.

வாகன ஓட்ட அட்டவணைகள் முறையாக பேணப்படவேண்டும் என்பதுடன் பதிவு நிலை அலுவலரினால் அன்றாடம் இவை பரிசீலிக்கப்பட்டு அவ்வாகனங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதில்லை என திருப்தி காணுதல் வேண்டும்.

அரச அலுவலகக் கட்டடங்கள், பாடசாலைகள் அரசிற்குசொந்தமான வேறு கட்டடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியனவும் அரச வளங்களாகும்.

ஆதலால், அக்கட்டடங்களில் கூட்டங்கள், கலந்துரையாடல் என்பவற்றிற்கு பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது. தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படஎதிர்பார்க்கின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்துஅரசாங்கஅலுவலர்களினதும் இடமாற்றங்களை 2011ஜனவரி17ஆம் திகதி முதல் தேர்தல்முடிவடைந்து2 வாரங்கள் வரை இடை நிறுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் செங்கமலம்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் செங்கமலம் நேற்று முன்தினம் (31.01.2011) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி விசாலாட்சி, விக்கினராசா ஆகியோரின் சகோதரியும், திருமதி சிதம்பரநாதன் ஸ்ரீமனோகரி, சுப்பிரமணியம், ஸ்ரீபவன் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இராஜேஸ்வரி ஆகியோரின் தாயாரும், திருஞானகரன், ஜீவாகரன், பாஸ்கரன், சிவசக்தி, ஞானசக்தி ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மல்லாகம் இந்து மயானத்தில் நேற்று( 01.02.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி.சிதம்பரநாதன்
ஸ்ரீ மனோகரி(மகள்),
சுப்பிரமணியம் ஸ்ரீபவன்(மகன்).
தொ.பே: 0775283375

அலவத்தை,
அளவெட்டி.

(சி-1076)

## இராசையா சிறிஸ்கந்தராசா

(மாயப்பா)

நுணாவில் மேற்கு வீரபத்திரர் கோயிலடியை பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாளை வசிப்பிடாகவும் டென்மார்க்கில் தற்போது வசித்தவருமான இராசையா சிறிஸ்கந்தராசா 30.01.2011 இல் டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா (பிஸ்கால்)-மனோன்மணி(நுணாவில்) தம்பதிகளின் மூத்த புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னையா- சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், வாசுகி (டென்மார்க்), தேவகி(லண்டன்) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், சுதர்ஜனனின் (லண்டன்) அன்பு மாமனாரும், சிறிஇரங்கநாயகி, காலஞ்சென்ற சிறிராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் மகேஸ்வரன், சுதாமணி(டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சரண்ஜன், அபிநயன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தொ.பே:
0776292684,
004528148153(டென்மார்க்).

தகவல்:
திருமதி.சிறிஇரங்கநாயகி
(தங்கை)

(சி-1075)

# புலிகளை சந்தித்த காணொளிகளை காண்பித்து அமைச்சர் பீலிக்ஸ் சாட்சியம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா 1986 ஆம் ஆண்டு நடிகர் விஜய குமாரதுங்கவுடன் யாழ்ப்பாணம் சென்று புலிகளை சந்தித்த வீடியோக் காட்சிகளை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு திரையிட்டு காண்பித்தார்.

அந்த வீடியோக் காட்சியானது தான் 1986 ஆம் ஆண்டு விஜய குமாரதுங்கவுடன் யாழ்ப்பாணம் சென்று புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர்களை விடுவிக்கும் நோக்கில் புலிகளைச் சந்தித்து பேசிய போது எடுக்கப்பட்டதாக கூறினார்.

இவ் வீடியோக்கட்சியில் இருவர் யாழ்ப்பாணத்துக்கு சென்று முதலில் இராணுவ அதிகாரியை சந்திக்கின் றனர். பின்னர் புலிகளின் பிரதிநிதிகளை சந்தித்து பேசுகின்றனர்.

அத்துடன் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர்களைச் சந்தித்து கலந்துரையாடுகின்றமை போன்ற காட்சிகள் இருந்தன. (ஸ்ரீ-2)

# புலிகள் சர்வதேச மட்டத்தில் இயங்குவதால் அவசர காலச்சட்டத்தை நீக்கக் கூடாது

## சரத்வீரசேகர எம்.பி. சாட்சியம்

(கொழும்பு)

புலிகள் அமைப்பு உள்நாட்டில் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் அவ் அமைப்பு சர்வதேச மட்டத்தில் இன்னும் இயங்குகின்றது.

சர்வதேச மட்டத்தில் புலிகளின் செயற்பாடுகளை தோற்கடிக்கும் வகையிலும் இலங்கையிலும் பயங்கரவாத தடுப்புச்சட்டம் மற்றும் அவசர கால சட்ட விதிகளை நீக்கக்கூடாது என்று அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்தார்.

நாட்டில் பெரும்பான்மையாக சிங்களம் பேசும் மக்களே இருக்கின்ற நிலையில், தமிழ்பேசும் மக்கள் சிங்கள மொழியை கற்க வேண்டியது அவசியமாக இருக்க வேண்டும்.

ஆனால் சிங்களவர்கள் விரும்பினால் தமிழ் மொழியைக் கற்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சரத்வீரசேகர எம்.பி. அங்கு மேலும் கூறியதாவது,

தேசிய மட்டத்திலான உபாயம் இன்றியும் முப்படைத்தளபதிகளுடன் ஆலோசனை நடத்தாமலும் அன்று போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதனால் ,புலிகள் பொருளாதார ,சமூக மற்றும் அரசியல் ரீதியில் பாரியளவில் பலமடைந்தனர்.

அக்காலத்தில் நான் வடக்கில் கடற்படையின் தலைமையதிகாரியாக இருந்தேன். அப்போது போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் என்னிடம் எவ்விதமான ஆலோசனையும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த உடன்படிக்கையின் ஊடாக புலிகள் எங்கும் சுதந்திரமாக செல்லலாம். ஆனால், எங்களால் அவர்கள் பகுதிக்குச் செல்ல முடியாது.

அத்துடன்,அந்நாட்களில் நாள் ஒன்றுக்கு மில்லியன் கணக்கில் புலிகள் நிதியைப் பெற்றனர். போர் நிறுத்த உடன்படிக்கையினால் புலிகள் சாதாரண சட்டத்தையும் மீறினர்.

சமாதானப்பேச்சுவார்த்தைகள் வெளிநாடுகளில் நடத்தப்பட்டமையின் தவறாகும். அதனால், புலிகள் வெளிநாடுகளில் சிறந்த முறையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். அத்துடன் ,போர்நிறுத்த உடன்படிக்கை காலத்தில் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு நிதி தொடர்பில் எந்தக்கண்காணிப்பு இருக்கவில்லை. தமிழர்புனர்வாழ்வுக்கழகம் என்ற பெய ரில் புலிகள் பாரிய நிதியை பெற்றுக் கொண் டிருந்தனர்.

அமெரிக்காவில் இரட்டைக்கோபுரத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் ,முழு உலகமும் பங்கரவாதத்திற்கு எதிராக இருந்தது. அந்த நேரத்தில்,புலிகளை தோற்கடித்திருக்கலாம். ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தை அப்போதைய அரசாங்கம் தவற விட்டது.

எவ்வறொனினும் ,தேசிய மட்டத் தலைவர் ஒருவர் எமக்கு கிடைத்தமையினால் நாம் யுத்தத்தை வெற்றி கொண்டோம்.

பூச்சியமட்ட மதிப்பு என்ற எண்ணக்கரு பின் பற்றப்பட்டது. எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இன்றி மனிதாபிமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஸ்ரீஅம்மா பகவான் ஆன்மீக பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் ஆன்மீகப் பிரார்த்தனை நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக மையத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ அம்மா பகவானிடம் திருமணப்பேறு வேண்டிய பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறவுள்ளதால் பங்குகொள்ள விரும்பும் பக்தர்களை 0777651719 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பிரார்த்தனையில் பங்குகொள்ளுமாறு மையத்தினர் அழைக்கின்றனர். (ஸ்ரீ-3)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

காரைநகர் யா/வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் திரு.திருமதி நல்லதம்பி பரமசிவம் , சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் , காரை.தென்மேற்கு கிராம சேவையாளர் செல்வி சி.திருமகள் ,இலங்கை வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் இ.சிவகுமாரன் , காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அ.கெங்காதரன் ,கல்வந்தாழ்வு சனசமூக நிலையத் தலைவர் அ.முரளிதரன், காரைநகர் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.தயாபரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

# பெப்ரவரி ௨ உலக ஈரநில தினம்



இன்று உலக ஈரநில தினமாகும் (World Wetland day). உலகளாவிய ரீதியில் பரந்துள்ள ஈரநிலங்களானவை சூழலில் கொண்டுள்ள முக்கியத்துவம் கருதி பெப்ரவரி இரண்டாந் திகதி உலக ஈரநில தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையானது சூழலிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் காடுகளைப் பேணுதல் எனும் தொனிப்பொருளில்; (International year of forest - 2011) இவ்வருடத்தினை பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இவ்வாண்டுக்கான ஈரநில தினத்திற்கான பிரதான கருப்பொருளாக "ஈரநிலமும் காடுகளும்" (Wetland and forest) என்பதனை முக்கியத்துவப் படுத்தியுள்ளது. பொருளாதார, சமூக, சூழலியல் அடிப்படையில் இவை கொண்டுள்ள முக்கியத்துவத்தை உணராமல் ஈரநிலங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல், பாதிப்புகளில் இருந்து பாதுக்காக்கும் நோக்கில் சர்வதேசரீதியில் முன்னெடுக்கப்பட்ட ஓர்



செயற்திட்டமாக ரம்ஸா பிரகடனம் (Ramsar Convention) விளங்குகின்றது. இப்பிரகடனம் 1971இல் ஈரான் நாட்டு ரம்ஸா நகரில் உருவாக்கப்பட்டு இவ்வருடம் நாற்பதாவது ஆண்டினை பூர்த்தி செய்கிறது. இலங்கையும் இப்பிரகடனத்தில் ஒப்பமிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஈரநிலங்கள் என்பதற்கு சதுப்பு நிலப் பிரதேசங்கள், இயற்கையாகவோ அல்லது மனிதனாலோ உருவாக்கப்பட்ட, நிலந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ உவர் நீரையோ அல்லது நன்னீரையோ கொண்ட பிரதேசங்களையும், ஆழங்குறைந்த கடற்கரையோரங்களையும் உள்ளடக்கியது என வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றது. மத்தியகோட்டை அண்டி பருவக்காற்று காலநிலையை அனுபவிக்கும் நாடுகள் அதிக உயிர்பல்வகைமையைக் கொண்டவை அவ்வகையில் இலங்கையின் அமைவிடமும் அதன் தரைத்தோற்ற அம்சங்களும் பல்வேறு வகையான ஈரநிலங்களை கொண்டிருப்பதற்கு சாதகமாய் அமைந்துள்ளது. உதாரணமாக பவளப்பாறைகளை உள்ளடக்கிய அழகிய கடற்கரைஓரங்கள், கடற்புற்கள், கடல் நீரேரிகள், கழிமுகப்பிரதேசங்கள், சுற்றுலாப்பயணிகளைக் கவரும் நீர்வீழ்ச்சிகள், ஆறுகள், நீரோடைகள், பறவையினங்களும், மீன்களும் செறிவடைந்து வாழ்வதற்குரிய கண்டற் காட்டுப்பிரதேசங்கள், அரியதாவர விலங்கினங்களைக்கொண்ட அடர்ந்த ஈரநில காட்டுப்பிரதேசங்கள், வரலாற்றுக் காலங்களில் மன்னர்களால் உருவாக்கப்பட்ட பாரிய நீர்பாசனக் குளங்கள் போன்ற பல வகைப்பட்ட ஈரநிலங்களை எமது நாட்டில் காணக் கூடியதாக உள்ளன. இப்பிரதேசங்களானவை அதிகம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதேசங்களாக காணப்படுகின்றன.

ஆசியப் பிராந்தியத்தின் பிரதான ஈரநிலங்களை அடையாளப்படுத்திய பதிவேட்டில் (A Directory of Asian Wetlands) இலங்கையில் 41 ஈரநிலப் பகுதிகள் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்றவையாக குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் 7 பிரதேசங்கள் யாழ்மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஈரநிலங்களானவை ரம்ஸா பிரகடன வரைவிலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு 3 பிரதான பிரிவுகளாகவும் அவைமேலும் பல உபபிரிவுகளாகவும் வகைப்படுத் தப்படுகின்றன. இவை நேரடியான, மறைமுகமான பல நன்மைகளை வழங்கி வருகின்றன. நேரடியான நன்மை என்பது பொருளாதார பெறுமதிமிக்கவையாக கணிப்பிடக்கூடியதாக (Economic value) காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்து விவசாயம், நீர்ப்பாசனம், நீர்ப்போக்குவரத்து. நீர்



விநியோகம், மருத்துவகுணம் கொண்ட மூலிகைகளை பெற்றுக் கொள்ளல், கைவினைப்பொருள் உற்பத்திக்காக மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளல், நீர்மின் உற்பத்தி, மீன்பிடி, உப்பு உற்பத்தி போன்றவற்றுடன் உல்லாசப் பயணக்கைத்தொழிலிலும் முக்கியம் பெற்றதாகவுள்ளது.

மறைமுக நன்மை எனும்போது அதற்கான பொருளாதார பெறுமதியைக் கணிக்க முடியாவிட்டாலும் சூலியலில் மிகவும் முக்கியம் பெற்றவையாக காணப்படும். அவ்வகையில் வெள்ள அனர்த்த பாதிப்புக்களை குறைத்தல், புயல், கடல்அரிப்பு போன்றவற்றிலிருந்து கரையோரங்களைப் பாதுகாத்தல், படிவுகளைத்தேக்கிவைத்தல், நீரினை தூய்மைபப்டுத்தல், பறவைகள், மீன்களுக்கான உணவு, வாழ்விடங்களை வழங்கல், உயிர்ப்பல்வகைமையைக் கொண்டிருத்தல், போன்றவற்றைக் குறிப்பிடலாம். உதாரணமக பருவநிலை வேறுபடும் காலங்களில் இலங்கைக்கு இடம்பெயரும் பறவைகளில் ஐம்பது வீதத்திற்கு மேற்பட்டவை உணவிற்காகவும், வாழ்விடங்களுக்காகவும் ஈர நிலங்களையே நாடிவருகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டை நோக்கும்போது வேறுபட்ட பண்புகளைக் கொண்ட கடற்கரைப் பிரதேசங்கள், தொண்டைமானாறு, உப்பாறு கடல் நீரேரி, சுண்டிக்குளம், யாழ்ப்பாணக் கடல்நீரேரி போன்றன முக்கியமானவை. இவ் ஈரநிலங்களானவை இயற்கையான வடிகாற் பிரதேசங்களாக அமைந்து வெள்ள அனர்த்தப் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்கும், மீன்பிடித்தொழிலுக்கும், தரைகீழ் நீர் மட்டத்தைப் பேணுவதற்கும் சாதகமாக அமைகின்றது. யாழ்.நகரை அண்டிய ஈரநிலப்பிரதேசங்கள் திண்மக்கழிவுகள் கொட்டப்பட்டு நிலமீட்சிக்கு உட்படுத்தப்படும் பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. சிறந்த உயிர்ப் பல்வகைமை கொண்ட பிரதேசங்களாக விளங்கும் கண்டற்காடுகள் உவர்நீர் ஏரிகளை அண்டி சிதறிய பரப்பில் பரம்பிக் காணப்படுகின்றன. இத்தாவரங்களானவை யுத்த நெருக்கடி காலங்க்ளில் விறகுத் தேவைக்காகவும் பாதுக்ப்புத் தேவைகளுக்காகவும் பெருமளவில் அழிக்கப்பட்டன. பருவ மாறுதல்களினால் கண்டம் விட்டுக் கண்டம் நகரும் பறவையினங்கள் யாழ்நகரில் ஈரநிலங்களையண்டி தங்கிச்செல்லுகின்றன. சுண்டிக்குளம் ஓர் பறவைகள் சரணாலயமாக அடையாளப்படுத்தப்பட்ட போதும் அது நீண்டகால யுத் தத்தின் விளைவாக மிகவும் பாதிக் கப்பட்டு அங்கு செல்லமுடியாத நிலைமை காணப்படுவதுடன் எந்த வித சூழல் பாதுகாப்பு முகாமைத்துவ சட்டங்களும் நடைமுறைப்படுத் தப்படாத நிலைஙம காணப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஈரநில பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறுபட்ட முகாமைத்துவ செயற்றிட்டங்கள் சர்வதேச நாடுகள், நிறுவனங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

இதில் ஈரநிலம் தொடர்பான ஆய்வுகளுக்கு நெதர்லான்ட் அரசு கூடுதலான உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. தற்போது சர்வதேச சூழல் நிறுவனங்களான. சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் (IWMI), சர்வதேச இயற்கை பாதுகாப்புச் சங்கம் (IUCN) போன்றன ஈரநிலங்கள் தொடர்பான ஆய்வுகள், வெளியீடுகள் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறான செயற்றிட்டங்கள் வடக்கு, கிழக்கில் இதுவரை முன்னெடுக்கப்படாமை கவலைக்குரிய விடயமாகும். தற்போதைய யுத்தம் ஓய்ந்துள்ள நிலையில் யாழ் குடாநாட்டில் துரித கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில் சூழற்பேணுகை தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதும் காலத்தின் தேவையாக உள்ளது. தற்போது யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில் திட்டமிட்ட அடிப்படையில் ஈரநிலப் பிரதேசங்கள் தெரிவுசெய்யப்பட்டு சூழல் முகாமைத்துவ செயற்பாடுகளினூடாக சூழலியல்சார் சுற்றுலா மையங்களை (Eco Tourism Centre) விருத்தி செய்யும் போது சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியதாகவும் இருக்கும்.

**பருவ மாறுதல்களினால் கண்டம் விட்டுக் கண்டம் நகரும் பறவையினங்கள் யாழ்நகரில் ஈரநிலங்களையண்டி தங்கிச்செல்கின்றன. சுண்டிக்குளம் ஓர் பறவைகள் சரணாலயமாக அடையாளப்படுத்தப்பட்ட போதும் அது நீண்டகால யுத்தத்தின் விளைவாக மிகவும் பாதிக்கப்பட்டு அங்கு செல்லமுடியாத நிலைமை காணப்படுவதுடன் எந்தவித சூழல் பாதுகாப்பு முகாமைத்துவ சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது.**

திருமதி.பிரதீபா விபுலன்
விரிவுரையாளர்
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

# கள்ளிக்காட்டு இதிகாசம் 30



கவிப்பேரரசு வைரமுத்து

குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்த ஆட்டை ஒத்தை ஆளாய்த் தூக்கி, ஏதோ துவைத்துப்பிழிந்த வேட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு போகிறவன் போல் போனான் அவன். எனக்கொரு பங்கில்லையா என்று பார்த்தது உச்சிவானத்தில் பறந்து கொண்டிருந்த-கழுத்தில் வெள்ளை விழுந்த-கழுகொன்று. வேட்டையாடின மிருகத்தை ஒரு முறைதான் திங்குமாம் சிங்கம். சேத்து வச்சுத் திங்கிற பழக்கமெல்லாம் சிங்கத்துக்கில்ல. சின்னு சிங்கம் இல்லையே! மனுஷந்தானே!...

ஆடுமேய்க்கிற பயகள அரட்டி உருட்டி பலசரக்கு வாங்கியாரச் சொல்லி அவனே சமைக்க ஆரம்பிச்சான்.

உப்புக்கறி-குடல்குழம்பு-சுட்டகறி-மண்ணீரல்-தலைக்கறி-நெஞ்செலும்புச் சாறு-தொடைக்கறிப் பெரட்டல்-ஆட்டுக்கால் சூப்பு-அவிச்சகறி-என்று மூன்று நேரமும் மூக்குவழி கறிவரத் தின்றுவிட்டு மிச்சத்தை உப்புக்கண்டம் போட்டு ஆபத்துக்குதவும் என்று சேமித்து வைத்திருந்தான்: நாலே நாளில் முழு ஆட்டையும் ஒருத்தனே தின்று செமித்தபிறகு அவன் பசி தீர்க்க ஊர்வன நகர்வன பறப்பன எதுவும் சிக்காமல் போக, இனி கோழி களவாணுவது என்ற முடிவோடு கரட்டுக்கு மறுபுறம் இருக்கும் சல்லிபட்டிக்கு இறங்கினான்.

கோழிபுடிக்கக் கொஞ்சம் அரிசி இருந்தால் நல்லது. அதுக்கு எங்க போறது? சல்லிபட்டி முனையில ஒரு பலசரக்குக்கடை வச்சிருந்தாரு ஒரு தேவாங்கச் செட்டியாரு. ஆளு வயசான ஆளு; ஆனா அப்பாவி. அஞ்சாறு சாக்குல வகைக்கு ஒரு அரிசி வச்சிருப்பாரு. செட்டியாரு கடைக்கு வந்த சின்னு ஒரு தோரணையா நின்னு "அய்யா! நான் அசலூரு. எந்த ஊர்ல அரிசி வாங்குனாலும் வாயிலபோட்டா வதக்குவதற்குங்குது. செட்டியாரு கடை அரிசி மாதிரி சீமையில இல்லேன்னு கேள்விப்பட்டுத்தான் இங்க வந்திருக்கேன். எனக்கு ஒவ்வொரு அரிசியிலேயும் வகைக்கு நாலு மரக்கா வேணும். எம்பொண்டாட்டி ஒரு பொசகெட்டவ. தின்னுபாத்து மென்னு பாத்து பல்ல ஒடைச்சாத்தான் நல்ல அரிசிம்பா. என்னொண்ணுக்கும் அவகிட்டக் காட்டிட்டு வந்திடறேன். வகைக்கொரு அரிசியாப் பொட்டலம்கட்டிக் குடுங்க. இந்தா போயிட்டு அந்தா வந்திடறேன்" என்று பேச்சுத் தொனியில் உண்மைகுழைத்துப் பேசினான். அவன் பேச்சிலிருக்கும் ஏத்த-இறக்கம். நெளிவு சுழிவுகளை வைத்து உண்மை எது பொய் எது என்பதைப் பெத்த தாய் தகப்பனே கண்டுபிடிக்க முடியாது. செட்டியாருக்குத் தெரியவா போகுது? அப்படியே ஆகட்டும் என்று பொட்டலம் போட்டுக் கொடுத்தார்.

ஆச்சு! கோழிபுடிக்க இரை சேத்தாச்சு. இனி மனுசனக்கு இரை சேக்கணும் அந்தி மசங்கினாத்தான களவாணிக்கு அமிர்தயோகம்? அதுவரைக்கும் என்ன பண்றது? 'யாராச்சும் வாங்கப்பா பயமாயிருக்கு' என்று ஊருக்கு வெளியேயிருந்து கூப்பிடும் பிள்ளையார் கோவிலில் வேட்டி விரித்து நீட்டிப்படுத்து சிரமபரிகாரம் செய்து கொண்டான். வெயிலில் வந்த களைப்பு- வேப்பமரக் காத்து- அசந்து தூங்கிட்டான். எந்திரிச்சுப் பாத்தா இருட்டிருச்சு.

இருட்டு, தொட்டா ஒட்டிக்கிடறமாதிரி இருட்டு. கட்டிவச்சு அடிச்சாலும் போகாத இருட்டு. நின்று நிதானமாக நடந்துபோனான் சின்னு. நடையில் ரெண்டு விதம் இருக்கு. உள்ளூர் நடை; வெளியூர் நடை. தள்ளிவிட்டாலும்ட விழுக மாட்டேன்னு நம்பிக்கையோட நடக்கிறது உள்ளூர் நடை. எது தடுக்கி எப்ப விழுகப்போறோன்னு நடக்கிறது வெளியூர்நடை. சின்னு நாலுந்தெரிஞ்ச நரிகுளிப்பாட்டி என்பதனால் உள்ளூர் நடையை வெளியூரில் நடந்தான்.

சல்லிபட்டியில் ஆடுமாடுகள் அதிகம்; கோழி சமூகம் குறைவு. மோப்பம் பிடித்து மோப்பம்பிடித்து ஒரு வீட்டில் திண்ணையில் கவிழ்த்திருந்த பஞ்சாரத்தைப் பார்த்து விட்டான்.

பஞ்சாரத்தை அணைத்தபடி சர்வ சுதந்திரமாய்ப் படுத்திருந்தாள் ஒரு கிழவி. மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைப் பிடித்துக் கிடந்தது மாதிரி தெரிந்தது அவனுக்கு. அவள் முந்தானையின் ஒரு பாகம் பஞ்சாரத்தின்மேல் படர்ந்து கிடந்தது. கோழிகளின் வாசனையைச் சகித்துக் கொள்வதால் அவள் பொறுமைசாலியா அவள் முந்தானை வாசனையைச் சகித்துக் கொள்வதால் கோழி பொறுமைசாலியா என்பதெல்லாம் கடவுள் மாதிரி; முடிவு செய்யப்பட முடியாத விசயம்.

விடியும் வரைக்கும் என் ஆத்மா தாங்காது என்று மினுக் மினுக் கென்று மினுக்கிக் கொண்டிருந்தது ஒரு சிம்னி.

இருள் மறைவுப் பிரசேத்தில் நின்று நின்று யோசித்தான் சின்னு. வேண்டிய இடவசதி-தனிமை-இருட்டு போன்ற 'தொழில் சுத்தம்' இங்கு போல் வேறெங்கும் வாய்க்கவில்லை, கிழவியைத் தவிர.

பஞ்சாரத்தில் கவுக்கப்பட்ட கோழி பிடிப்பது கொஞ்சம் கஷ்டம். கவுக்கப்படாத கோழியாயிருந்தால் களவாணிக்கு நல்லது. சத்தங்கித்தம் இல்லாமல் பக்கத்திலே போய்க் கோழியின் பின்பக்கம் ஒரு 'சைஸா நைஸா' தட்டிக்கொடுத்தால் அது புலன்கள் மயங்குகிற நேரம் பொசுக்கென்று அமுக்கி வந்து விடலாம். மேய்ச்சல் தேடும் கோழியாயிருந்தால் இன்னும் லேசு. போதிய தூரத்தில் நின்று "பா... வக் வக் வக்" என்று கோழிபாஷை பேசிக் கையிலிருக்கும் அரிசியை வெள்ளிக்காசை எறிவது மாதிரி ஒவ்வொன்றாய் ஒரே நேர்கோட்டில் சுண்டிக்கொண்டே வந்தால் அதேநேர்கோட்டில் அரிசியைக் கொத்திக்கொண்டே கோழி கூடவே வரும். லட்சுமணன் கோட்டுக்கு வெளியே இராவணன் சீதையை இழுத்தது மாதிரி, கோழியை வேலிக்கு வெளியே இழுத்து 'லபக்' கென்று அமுக்கிக் கழுத்தைத் திருகிவிட்டால் காரியம் முடிந்துவிடும்.

ஆனால் சின்னுவுக்குத் தென்பட்டது பஞ்சாரத்துக்கோழி. சுற்றும் முற்றும் பார்த்தான். மாடு தண்ணி குடிக்கும் தொட்டி ஒன்று படலோரம் தட்டுப்பட்டது. அவன் நல்ல நேரம்-கோழிக்குப் புடிச்ச கெட்டநேரம் தொட்டியில் கொஞ்சம் தண்ணி கிடந்தது. தலையில் கட்டியிருந்த அழுக்குத் துண்டை அவிழ்த்து நனைத்தான். தண்ணீர் முற்றிலும் வடியாத மாதிரி செல்லமாய்ப் பிழிந்தான். கொண்ட கொள்கையை நெஞ்சில் தாங்கிக் கோழியை நோக்கி நடந்தான். "கிழவி முழிச்சுக் கத்திக்கித்தி ஊரக் கூட்டாம இருந்தா ஈரத்துணி கோழிக்கு. இல்லேன்னா அது கெழவிக்கு. யாருக்கு விதிச்சிருக்கோ? பாப்பம்".

உள்வீட்டில் ஒரு பெண்ணும் சில குழந்தைகளும் உறங்குவது தெரிந்தது. லேசாய் அரவம் செய்து பார்த்தான். கிட்டத்தட்ட அவள் சாவு மாதிரி தூங்கிக் கொண்டிருந்தாள். ஒழச்சுக் களைச்ச கிழவி! பாவம்!

பஞ்சாரத்தில் கிடந்த முந்தானையை எடுத்து ஓரமாய் ஒதுக்கிவிட்டு, பஞ்சாரத்தை அவளிடமிருந்து நகர்த்தி நகர்த்தி நாலடி தள்ளி ஒருபக்கஞ் சாய்த்து உயரத் தூக்கி ஒரு கை உள்ளே நுழைய மட்டும் சந்துசெய்து, வீசினான் தன் பாசக்கயிறாகிய ஈரத்துணியை. கொஞ்சம் முனகிவிட்டு அதிர்ச்சியில் சத்தமிடச் சக்தியற்றுப்போன கோழிகளை ஈரத் துணியோடு சேர்த்துச் சுருட்டிக் கொண்டு, "இந்த ஊர்ல என்னால எந்த அசம்பாவிதமும் நடக்கல" என்பவனைப் போல இயல்பாக நடந்து இருட்டில் மறைந்து ஊர்கடந்தான்.


ராத்திரியெல்லாம் தூக்கத்தில் செத்துக் கிடந்து விடிய உயிர்த்தெழுந்த கிழவி 'அய்யோ! என் ஆஸ்தி போச்சே!' என்று அலறினாள். "என் கோழிய எந்த நாய் தூக்குச்சோ, நரி தூக்குச்சோ? இல்ல எவன் வந்து தூக்கிட்டுப் போனானோ?"

தொண்டத் தண்ணி வத்தக் கத்தி, கிழவி ஊரை எழுப்பிக் கொண்டிருந்த போது வெள்ளைக் கரட்டடியில் சட்டியில் கொதிக்கும் கோழிக் குழம்பை அகப்பையில் எடுத்து உள்ளங்கையில் ஊற்றி உப்புப் பார்த்துக் கொண்டிருந்தான் சின்னு. பரவாயில்லை! கோழிக்குச் சொந்தக்காரிதான் கெழவி; கோழி குமரிதான்.

நாளடைவில் கருது களவாண ஆரம்பித்தான். ஒரு சாக்கைத் தோளில் போட்டுக்கொண்டு போவது, சோளமோ - கம்போ - சாமையோ கிடைச்ச கருதை அறுத்துக்கொண்டு வந்து கேட்ட விலைக்கு விற்பது.

ஒருநாள் நல்ல நிலா வெளிச்சம். சும்மா வெள்ளியை உருக்கி வீதியில் விட்டது மாதிரி இருந்தது. கருவாயன் காட்டுக்குள் புகுந்து சோளக்கருது அறுக்க ஆரம்பித்தான் சின்னு. வெளஞ்ச கருது - வெளையாத கருது - சிக்கியதைச் சிரச்சேதம் செய்தான். காலால் மிதிச்சு மிதிச்சுக் கருது நிரப்பிய கனமூட்டையைத் தூக்கித் தெடையேற்றி, தொடையை ஒரு எம்பு எம்பித் தோளேற்றி, தோளிலிருந்து தலைக்கு மாற்றி, காவற்காரன் குடிசை தாண்டி நடந்த போது வள்ளென்று வந்துவிழுந்து வழிமறித்தது அது.

(வளரும்)





# பதின்னான்காவது ஆண்டில் மாதாந்த மலர் 'ஞானச்சுடர்'

'ஞானச்சுடர்' என்ற மலர், ஆன்மீக வரலாற்றைப் பின்புலமாகக் கொண்டு மாதா, மாதம் தொடர்ச்சியாக வெளிவருவதுடன் இந்த வருடம் பதின்னான்காவது ஆண்டில் தடம் பதிக்கின்றது.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் இயங்கிவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல்துறை சார்ந்த பணிகள், செயற்பாடுகளின் வரிசையில் ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமை தோறும் இந்த ஞானச்சுடர் மலர் வெளியிடப்பட்டு வருகின்றது.

துரை கணேசமூர்த்தி
ஆசிரியர், யாழ்பபாணக் கல்லூரி

யாழ்ப்பாணத்து சமூகச் சூழலின் கல்விப் பாரம்பரியத்தையும் உலகம் தழுவிய சைவ மக்களின் ஆன்மீக வளர்ச்சியையும் பின்னணிகளாகக் கொண்டு, சந்நிதி வேலவனுடைய அருட்பார்வைப் பொலிவு பெற்று 1998ஆம் ஆண்டு தை மாதத்தில் இருந்து ஞானச்சுடர் வெளிவந்து கொண்டிருக்கிறது.

சமய, சமூக நிறுவனமாக பரிணமித்து வருகின்ற சந்நிதியான் ஆச்சிரமத்தினுடைய பணிகளில் மிகவும் காத்திரமான தொன்றாக இந்த ஞானச்சுடரின் வெளியீடு அமைந்திருப்பதுடன், இலங்கையில் மட்டுமல்லாது புலம்பெயர் நாடுகளடங்கலாக 2200 பிரதிகள் வரையில் ஒவ்வொரு மாதமும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் ஒவ்வொரு மாதமும் நடைபெற்று வரும் ஞானச்சுடர் வெளியீடு கூட வெறுமனேயமைந்த விநியோகமாக அல்லாது ஒவ்வொரு மாத மலருக்கும் தனித்தனியாக அறிஞர்கள், ஆன்மீக வியலாளர்கள் மூலம் நடாத்தப்படும் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைகள் என்பனவும் செவ்வனே ஆற்றப்பட்டு பக்திச் சூழல் மிக்க சபையோர் மத்தியிலேயே ஞானச்சுடர் வெளிவருகின்றது.

இவ்வகையில் வெளிவரும் இம்மலரில், புராண இதிகாசக் கருத்துகளை மையப் படுத்தி தற்கால சமூக ஒழுங்கமைப்புக்கு ஏற்றதான அடிப்படைகளுடன் எழுதப்படும் பலவிதமான தனித்தனிக் கட்டுரைகளும் தொடர் கட்டுரைகளும், இடம்பெற்று வருகின் றன. அத்துடன் சந்நிதியான் மீது இயற்றப்பட்ட கவிதைகளும், சந்திதியான் என்ற தொடரில் தெய்வபக்தி, இறைஅனுபவங்கள், கடவுள் நம்பிக்கையுடன் கூடிய வாழ்க்கை என்பன போன்ற கருத்துக்களும் யதார்த்த பூர்வமாக எழுதப்பட்டு வருகின்றன.



மலரின் தொடக்கத்தில் இடம் பெறும் குறல்வழி, நற்சிந்தனை, சுடர்தரும் தகவல் என்ற அம்சங்கள் மனிட வாழ்வை நெறிப் படுத்துபவைகளாக அமைந்துள் ளன.

இவ்விதம் வெளிவரும் 'ஞானச்சுடர்' ஆனது ஒவ்வொரு மாதமும் பொலிவிலும், கருத்திலும் ஒவ்வொரு உள்ளங்களிலும் மலர்ச்சியை உண்டாக்குகின்றது.

'ஞானச்சுடர்' சைவத்தமிழ் மக்களுடைய அறிவுப்பாரம் பரியத்திற்கு ஒரு அடையாளமாக அமைக்கின்றது.

இதன் வடிவமைப்பைப் பொறுத்தமட்டில் ஆரம்பங்காலங்களில் பிற அச்சங்கள் மூலமாக அச்சிடப்பட்டுவந்து, தற்போது ஆச்சிரமத்திலேயே நிர்மாணிக் கப்பட்டுள்ள நவீன் கணனி அச்சு இயந்திரப்பொறிகள் மூலமாக மிகவும் நேர்த்தியான முறையில் தொழில் சார் பணியாளர்களின் கைவண்ணத்தில் வெளிவருகின்றது.

இத்தகைய சிறப்புக்களை உள்ளடக்கி வெளிவரும் இம்மலரின் வெளியிடுதலுக்கான அனுசரணைப் பணிகளை வழங்குவதில், ஆச்சிரமத்தின் பணிகளை நிறை வேற்றி வரும் மோகன் சுவாமிகளின் விடாமுயற்சியும், செயற்திறன் மிக்க சேவை யும் மூல காரணமாக அமைகின்றது என்பதோடு அவரை நெறிப்படுத்தி வரும் சந்நிதியானுடைய அருளாற்றலும் அற்புதமானதே.

# அன்னை பராசக்தியை அபிராமிப்பட்டர் அபிராமிஅந்தாதி பாடிப் பணிந்த நாள்

இறைஅருளாளர்கள் தம் குறைகளை இறைவனிடம் பாடிப்போற்றிப் பணிந்து முறையிட்டுத் தம் துயர்களைத் தீர்த்துக் கொண்ட வரலாறுகள் பல எமது புராணங்களிற் சிறப்பாக கூறப்பட்டுள்ளன. தமிழ் மறைகள் எனப்போற்றப்படும் திருமுறைகளிலும்இதனை நாம் நன்கு அறியக் கூடியதாகவுள்ளது.

இவ்விதத்திலே வருடந்தோறும் வரும் தை அமாவாசை தினமும் அம்பிகையின் மெய்யடியவரான அபிரா மிப்பட்டர் தம்துயர்போக்க அபிராமி அந்தாதியை பாடிப் பணிந்து அன்னை பராசக்தியின் அருளை உலகிற்கு உணர்த்திய புனிதமான நன்னாளாக போற்றி வழிபடப்படுகிறது.



திருக்கடவூரிலே பிறந்த சுப்பிரமணியபாரதி அவ்வூர் அபிராமியம்மை மேல் ஆறாத பெரும் பக்தி கொண்டவராக விளங்கியமையால் அபிராமிப்பட்டர் என்று போற்றப்படலாயினார். அபிராமி அம்மையின் அருள் கொண்ட சக்தி உபாசகராக விளங்கிய இவர் பிறர் கண்களுக்குப் பித்தனாகத் தெரிந்தமையால் அபிராமிப் பட்டரின் உள்ளன்பையும் பக்திப் பிரவாகத்தையும் தவறாக எண்ணினார்கள்.

அப்போது தஞ்சையை ஆண்டுவந்த சரபோஜி மன்னர், தைஅமாவாசையை முன்னிட்டுக் காவிரிப்பூம் பட்டினத்திற்கு நீராட வந்து திருக்கடவூர் அம்பிகையையும் தரிசிக்க விரும்பினார். மன் னர் அங்கு நீராடி விட்டு அபிராமி அம் மையை வழிபடுவதற்குச் சந்நிதியைத் தேடிச் சென்றார்.

அங்கே அவர்கண்ட காட்சி, தன்னயையும் தன்சூழலையும் மறந்த நிலையில் அபிராமிப் பட்டர் அம்பிகையைக் கண்டு ஆனந்தப் பரவசத்தில் திளைத்திருந்த காட்சியாகும். மன்னர் தம்மையும் மதியாது அபிராமிப் பட்டர் இருந்த நிலை கண்டு அவரைப்பற்றி வினாவினார். இச்சந்தர்பப்த்தை எதிர்பார்த்திருந்த சிலபொய் வேடதாரிகள், மன்னனிடம்இவர் நெறிகெட்டவர், போலிவேடதாரி, மதிமயக்கத்தில் உ ழலுகின்றார் எனக்கூறவும், மன்னர் ,எது உண்மை என்பதையறிய விரும்பினவராகப் பட்டரை நோக்கி "இன்று என்ன திதி எவ்வளவு நாழிகை இருக்கின்றது" என வினாவினார். அம்பிகையின் அருள் ஒளியில் திளைத்து மயங்கிக் கிடந்த பட்டர் "இன்று பௌர்ணமி" என்று கூறவும் அதுகேட்ட மன்னன் மற்றயவர்கள் சொல்வது போல் இவர் மதிமயக்கம் உடையவர் தான் என எண்ணிப் பட்டரை நோக்கி அவர் சொல்வது போல் இன்று இரவு பூரண நிலவு உதிக்காவிட்டால் அவரைச் சிரச்சேதம் செய்வதாக ஆணையிட்டார்.

மன்னனின் ஆணையின் ஆராவாரத்தில்தம்சுயநினைவு பெற்ற பட்ர், நடந்ததனை அறிந்து 'அபிராமிஅம்மையின் மேல் உதிக்கின்ற செங்கதிர்' எனத்தொடங்கும் அபிராமியந்தாதி பாடலை பாடத்தொடங்கினார். அன்னையின் திருவருட் துணை கிடைக்க வேண்டுமெனும் மனத்திடத்துடன் தனது பாடலில் "விழிக்கே அருளுண்டு" என்னும் எழுபத்தொன்பதாவது பாடல் படித்து முடித்தவுடன் தேவி பிரசன்னமாகி அருள் புரிந்து தனது ஒரு திருத்தோட்டைக் கழற்றி விண்ணகத்தே வீசி "அன்பனே ! அரசனுக்கு நீ கொடுத்த வாக்கை நிறைவேற்றினோம் கவலைப்படாதே" என அருளினாள். அப்பொழுது சரபோஜி மகாராஜாவும் மற்றும் மக்களும் "என்னே! அதிசயம் பூர்வபட்சத்து அமாவாசை இருளிற் சந்திரோதயப்பிரகாசம்." என அதசயித்து அம்பிகையைப் பணிந்து அபிராமிப் பட்டரின் பாதங்களில் வீழ்ந்து அவரின் பக்தியின் தூய்மையைப் போற்றிக் கண்ணீர் மல்கினர்.

அபிராமிப்பட்டரின் தூய பக்தியினால் அவர் எங்கும் நிறைந்த அன்னை அபிராமியையே நம்பிவழிபட்டமையும் அவர் பக்திக்கு எல்லாம்வல்ல அருள் சக்தி நல்லருள் பாலித்ததும் மக்களுக்கு நல்லதொரு தெய்வீக அனுபவமாக என்றும் விளங்குகின்றது. எனவேதான் இன்றும் தை அமாவாசை நன்னாளில் மக்கள் அபிராமியந்தாதியை ஓதி அம்பிகையை வழிபட்டு விழாக்களும் நடத்துகின்றார்கள்.

நீர்வைமணி
கு.தியாகராஜக் குருக்கள்

நாமும் இந்நாளில் "அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்" என்னும் நம்பிக்கையுடன்எல்லாம்வல்ல உலக மகா சக்தியாகிய அனை பராசக்தியைப் போற்றி வழிபட்டு நற்பேறுகாண்போம்.

# தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர் அகஸ்ற் கொம்ற்



அகஸ்ற் கொம்ற் 1798-1857

சமூகவியல் என்ற புதிய அறிவியலின் தோற்றக்காரணாகி, சமூகவியலின்தந்தை எனும் பெருமை பெற்ற அகஸ்ற் கொம்ற் 1798 ஆம்ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி பிரான்ஸில் மொன்ற் பொலியர் என்னும் இடத்தில் பிறந்தார்.

இளவயதில் சிறியவனாகப் பல நோய்கட்கு உட்பட்டிருந்தாலும் தனித்துவமான ஆர்வமும் சிறப்பும் பொருந்திய புரட்சி மனப்பாங்கு கொண்டவராகத் திகழ்ந்தார். இன்றைய உலகின் ஏனைய அறிவியல்களை எல்லாம்தன்னுள் அடக்கிச்சமூகம்பற்றிய இயக்க, நிலை இயல்களை அறிவியற் கண்ணோட்டத்தில் ஆராயும் சமூகவியலின் (Sociology) கோட்பாட்டு எண்ணக்கரு உருவாக்கத்திற்கு கொம்ற் அவர்களின் பங்களிப்புக்கள் காத்திரமானதும் குறிப்பிடத்தக்கதுமாகும்.

சமூகம் தொடர்பான இயற்கைவழி விஞ்ஞானம் ஒன்றினைக் காண்பதே கொம்ற் அவர்களின் பிரதான இலக்காகும். அதாவது சமூகத்தை விஞ்ஞான முறையில் கற்கவேண்டும் என்றார். இதற்கான ஒரு முறையியலாகவே Positivism என்பதனை இயற்கை விஞ்ஞான நுட்பங்களின் மாதிரிகளிலிருந்து உருவாக்கினார். தமிழில் நேர்க்காட்சி வாதம், புறமெய்மை வாதம், புலனறி வாதம், நிச்சய வாதம் எனும் பெயர்களால் சமூகவியற் புலங்களில் இது வழங்கப்படுகின்றது.

சமூக முன்னேற்றம், சமூக ஒழுங்கு என்பவற்றிற்கான விதிகளை விளக்க அவதானம் (Observation), பரிசோதனை (Experiment), ஒப்பியலாய்வு (Comparative Method) போன்ற முறையியல்களினைச் சமூகவியல் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு மேலாக வரலாற்று முறையியலின் (Historical Method) இன்றியமையாமையையும் கொம்ற் பெரிதும் அழுத்தினார்.

இவற்றினைவிட சமூகத்தின் படிமலர்ச்சி, மாறாத சில விதிகளுக்கமைவாக இருக்கிறது

> அன்பின்வழி மற்றவர்களுக்காக வாழுதல் எனும் பொதுநல நோக்கே மனித இனத்தின் எல்லையாகும் - அகஸ்ற் கொம்ற் -

எனும் அவரது இவ்விதியானது சமூக உலகம் பற்றிய கோட்பாட்டு உருவாக்கத்தில் இருந்தும் அதன்மேல் உருவாக்கப்படும் ஆய்விலிருந்தும் தருவிக்கப்படுவதாக அமைகின்றது. எனவே ஆய்வென்பது அனுபவத்தால் பெறப்படும் ஆய்வாக அமைய வேண்டும் என்கின்றார் கொம்ற். இங்கு ஆய்வினையும் அதன்வழிப் பெறப்படும் கோட்பாட்டு உருவாக்கத்தின் முக்கியத்துவத்தினையும் இவர் மிகவும் அழுத்தினார்.

இவ்விதமாகப் பிரான்சிய நாட்டுத் தத்துவ ஞானியும் சிறந்த சமூகவியலாளருமான கொம்ற்றின் சமூகவியலுக்கான பங்களிப்பு, இன்று சமூகவியல் என்ற அறிவியற் துறை உலகின் பல இடங்களிலும் பல மொழிகளிலும் வளர்ந்து சமூகத்தின் அனைத்துச்செயற் பாடுகள், நடவடிக்கைளை ஆய்வு செய்து மேம்பட்ட சமூக உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் ஒரு துறையாகத் திகழ்கிறது. நாம் ஒவ் வொருவரும் சமூகவியற் துறையின் மூலவேருமான தொல்சீர் சமூகவியல் சிந்தனையா ளருமான அகஸ்ற் கொம்ற் இன் சமூக அறிவியற் சிந்தனைகள், சமூகம் பற்றிய விஞ்ஞானபூர்வமான ஆய்வு நோக்கும் தேடல் ஆர்வமும் கொண்டவர்களுக்கு மிகச்சிறந்த பயனுடையதாக அமையும்.

அ.நிசாந்தி
சமூகவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்

# விதியை மாற்றும் விருட்ச தானம்




பூர்வ ஜென்ம கர்மாக்களை தீர்க்கவும், இந்தப் பிறவியில் ஏற்படும் எதிர்பாராத பிரச்சினைகளில் இருந்து மீண்டு வரவும், தர்ம சாஸ்திரங்கள் நமக்கு பலவிதமான தானங்களைப் பற்றி சொல்கிறது.

கோ தானமோ, பூமி தானமோ, குதிரை தானமோ, யானை தானமோ செய்வது எல்லாவித பிரச்சினைக்குரிய பலன்களை விலக்கி, உயர்ந்த இராஜயோகத்தை கொடுக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால், பெரும் பொருள் செலவு செய்து செய்யப்படும் இந்தத் தானங்கள் சாமானியர்களைச் சென்று அடைந்தாலும், அந்த சாதாரணமானவர்கள் இந்த வகை தானம் செய்ய அவர்களது பொருளாதாரம் இடம்கொடுக்கவில்லை. மேலும், ஒவ்வொரு தானத்திற்கும், ஒவ்வொரு விதமான சட்டதிட்டங்கள் உண்டு.

**எளிய முறை தானம்**

இவை அனைத்தையும் மீறி, எளிய முறையில் செய்யக்கூடிய ஒருதானம் தான் விருட்சம் நடுவதாகும். இந்த விருட்சம் நடுவதைப்பற்றி பிருகு முனிவரும், மரீசி முனிவரும்பலவாறுகூறியுள்ளனர்.

கிராம மத்தியிலும், கிராம எல்லையிலும் எவ்வித மரங்கள் நடலாம் என்பது குறித்து அவர்கள் கூறியிருப்பதாவது,

மரத்தை, ஆலயத்திலோ, தர்ம ஸ்தாபனங்களிலோ, ஆற்று இடங்களிலோ நடுவது நன்மை தரும். இங்கு தானம் தருவது என்ற வார்த்தை, மரத்தை பூமிக்கு அர்ப்பணிப்பதை குறிக்கும். விருட்ச பரிகாரத்தை அவரவர் நட்சத்திரப்படி நடலாம்.

**தவிர்க்க வேண்டிய அக்னி நட்சத்திர காலம்**

சூரியன் உதயமாகி, மறைவதற்குள் இடைப்பட்ட நேரத்தில் மரம் நடுவது விசேடமாகும். பொதுவாக அக்னி நட்சத்திர காலம் தவிர இதர காலங்களில் விருட்ச பரிகாரத்தைச் செய்யலாம்.இவ்வாறு அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பஞ்சாங்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது மட்டுமின்றி விருட்ச நூல்களிலும் இது பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

இந்த வகை தானம் செய்யும் போது, சிலவற்றிற்கு தானியங்களை ஊற வைத்து நீரைச் சேர்க்கவும், இன்னும் சிலவற்றிற்கு அப்படியே நடவும் சொல்லப்பட்டுள்ளது.

அந்தக் காலங்களில் பொதுவாக திருமணத்திற்கு முன் அரச மரமும், திருமணம் முடிந்த பின் ஒதிய மரமும் வைப்பது பாரம்பரியமாக இருந்து வந்துள்ளது.

ஒவ்வொரு வரும் அவரவர் பிறந்த தமிழ் மாதம், பிறந்த நட்சத்திரம் அன்று அவர்களுக்குரிய மரங்களை நடுவது சிறப்பானதாகும்.

இதுதவிர நோய், கடன், எதிர்பாராத இன்னல்கள் இவற்றிற்கும் ஒவ்வொரு விதமான மரங்கள் நட சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் அவற்றில் இருந்து நிவாரணம் பெறலாம்.

பொதுவாக மரக்கன்றுகளை, மரங்கள் வெட்டப்படாத இடங்களில் நடுவதே உயர்ந்த பலன்களை உண்டு பண்ணும். நட்சத்திரம் தெரியாதவர்கள் அவரவர் பெயரின் முதல் எழுத்துக்குரிய நட்சத்திரம் அறிந்து மரங்களை நடலாம். இதைப்பஞ்சாங்கம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இது இரண்டுமே சரியாக அமையாவிட்டால் தெய்வீக மரங்களை நடுவது சிறந்தது. அவை எப்போதும் உயர்ந்த பலன்களையே கொடுக்கும்.

| நட்சத்திரங்கள் | நடவேண்டிய மரங்கள் |
|---|---|
| அச்சுவினி | எட்டி |
| பரணி | நெல்லி |
| கிருத்திகை | அத்தி |
| ரோகிணி | நாவல் |
| மிருகசீரிடம் | கருங்காலி |
| திருவாதிரை | செங்கரு |
| புனர்பூசம் | மூங்கில் |
| பூசம் | அரசு |
| ஆயில்யம் | புன்னை |
| மகம் | ஆல் |
| பூரம் | பலாசு |
| உத்திரம் | அலரி |
| அத்தம் | வேலம் |
| சித்திரை | வில்வம் |
| சுவாதி | மருதம் |
| விசாகம் | விளா |
| அனுசம் | மகிழ் |
| கேட்டை | பிராய் |
| மூலம் | மா மரம் |
| பூராடம் | வஞ்சி |
| உத்தராடம் | பலாசு |
| திருவோணம் | எருக்கு |
| அவிட்டம் | வன்னி |
| சதயம் | கடம்பு |
| பூரட்டாதி | தேமா |
| உத்திரட்டாதி | வேம்பு |
| ரேவதி | இலுப்பை |

## ஜோதிடக் களம்

# சோமாலிய கடற்கொள்ளையர்களால் இரு இலங்கை மீனவர்கள் கொலை

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் இருவர் சோமாலிய கடற்கொள்ளையர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதாக இலங்கை மீன்பிடித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்து மீன்பிடித் திணைக்களத்தின் துணை இயக்குநரான லால் டி சில்வா கூறுகையில்,

கொல்லப்பட்ட மீனவர்களின் படகு கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் அதில் இருந்த மேலும் மூன்று மீனவர்கள் பணயக் கைதிகளாக அவர்களால் பிடித்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் நான்காம் திகதி மிரிசு மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து தொழிலுக்காக தார்ஷன6 என்ற மீன்பிடிப் படகு புறப்பட்டுச் சென்றதாகவும் கடந்த 27ஆம் திகதி அது சர்வதேச கடற்பரப்பில் சோமாலிய கடற்கொள்ளையரின் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

கொல்லப்பட்ட இரு மீனவர்களின் சடலங்களும் கடற்கொள்ளையர்களால் கடலில் வீசப்பட்டதாகவும் இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளுக்காக தாம் இலங்கை வெளியுறவு அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இலங்கையர்கள் எகிப்து செல்ல தற்காலிக தடை

எகிப்தில் ஏற்பட்டு இருக்கும் மிகவும் பதற்றமான சூழ்நிலையில் வேலைவாய்ப்பு தேடி இலங்கையர்கள் அங்கு செல்ல அரசு தற்காலிக தடை விதித்துள்ளது.

எகிப்திய ஜனாதிபதிக்கு எதிராக அந்நாட்டு மக்கள் மாபெரும் போரட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் எகிப்தில் உள்ள இலங்கையர்களின் நலனை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் வெளிநாட்டு அமைச்சு ஈடுபட்டுள்ளது.


எகிப்துக்கு இலங்கையர் வேலைவாய்ப்பு தேடிச் செல்கின்றமைக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திணைக்களம் தற்காலிகமாக தடை விதித்துள்ளது.


வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேராவின் அறிவுறுத்தலின் பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்

வடமராட்சி கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இரண்டாம் மொழி சிங்களக் கற்கை நெறி யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பாட நெறிக்கு விண்ணப்பித்த அனைவரையும் இன்றைய தினம் சமுகமளிக்குமாறும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்காத சிங்கள மொழி கற்க ஆர்வமுள்ளவர்களும் இன்றைய தினம் சமுகமளிக்கலாமென அதிபர் திருமதி எஸ். பாலராணி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)






யாழ்/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் கால்கோள் விழாவில் தேசியக் கொடியேற்றுவதையும் கழுத்துப்பட்டி வழங்கும் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா தவராணி மாணவி ஒருவருக்கு கழுத்துப்பட்டி வழங்குதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சுன்னாகம் செய்தியாளர்)

# வெற்றி கதவைத் தட்டும் நேரம்!

உங்களுடைய ஆசை என்ன? எதைத் தொட்டாலும் வெற்றி கிடைக்க வேண்டும் என்பதுதானே?

மேல்நாட்டு உளவியல் நிபுணர்கள் என்ன சொல்லிக்கொடுக்கிறார்கள்? 'ஜெயிக்கவேண்டும், ஜெயிக்கவேண்டும் என்று உங்களுக்கு நீங்களே அடிக்கடி சொல்லிக் கொள்ளுங்கள். வெற்றியைக் குறிவைத்தே உங்களுடைய ஒவ்வொரு செயலும் இருக்கட்டும்'



என்கிறார்கள்.

பெரும்பாலும் இந்தமுயற்சி உங்கள் ரத்தக்கொதிப்பைத்தான் அதிகரிக்கும். ஏன்? வெற்றியையே நினைத்து உழைத்தால், அது கிடைக்குமா, கிடைக்காதா என்ற சந்தேகத்தில் படபடப்பு, அச்சம், கவலை, மன உளைச்சல் என்று ஏராளமான பிசாசுகள் உங்கள் மீது வந்து ஏறிக்கொள்ளும்.

இலக்கின்மீது ஒரு கண்ணைப் பதித்துக்கொண்டால், அவன் பாதிக் குருடனாகி விடுகின்றான் என்கிறது, ஜென்தத்துவம். மிச்சமிருக்கும் ஒரு கண்ணை வைத்துக் கொண்டு எவ்வளவு தூரம் செயலாற்றமுடியும்?

அப்படி அரைகுறை கவனத்துடன் செயலாற்றாதீர்கள். இந்தக்கணம் செய்யவேண்டியதை இரண்டு கண்களையும் பயன்படுத்தி முழுமையாகச் செய்யுங்கள். எட்டிப்பிடிக்க வேண்டிய அவசியம் இல்லாமல், வெற்றி இலக்கை சுலபமாக தொட்டுவிட முடியும்.

புரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் கவனமாக உழைக்க வேண்டுமேதவிர, கடுமையாக உழைக்கத் தேவையில்லை. இதை விளக்க ஜென்னில் ஓர் அழகான சம்பவம் உண்டு.

சான்ஸூ என்றொரு ஜென் குரு இருந்தார். மிகச் சிறந்த வாள் வீரர். அவரிடம் ஒரு புதிய சீடன் சேர்ந்தான். 'இந்தநாட்டிலேயே முதன்மையான வாள்வீரனாக என்னை ஆக்கமுடியுமா?' என்றான்.

'அதற்கென்ன... பத்து வருடங்களில் உன்னை அப்படித்தயார் செய்துவிடுகிறேன்' என்றார் குரு. 'என்னது, பத்துவருடங்களா? ஐந்தேவருடங்களில் சாதிக்க வேண்டும் குருவே. மற்றவர் களைவிட இரண்டுபங்கு அதிகாமாக உழைக்கத்தயாராக இருக்கிறேன்.'

'அப்படியானால் இருபது வருடங்கள் ஆகும்' என்றார், சான்ஸூ. சீடன் திகைத்தான். 'போதாது என்றால், இன்னும் நான்கு பங்கு கடுமையாக உழைக்கிறேன்' என்றான். 'அப்படிச் செய்தால், நாற்பது வருடங்கள் ஆகுமே' என்றார் குரு. ஆம், உங்களை வருத்திக்கொள்ள வருத்திக்கொள்ள-நீங்கள் நினைத்ததை அடைவதற்கு அதிகக் காலமாகும். இதைத்தான் சான்ஸூ அந்தச்சீடனுக்கு புரியவைத்தார்.

கடுமையாக உழைப்பவர்கள் சில சமையம் வெற்றி பெறலாம் ஆனால் அதன் சந்தோசத்தை அனுபவிக்க முடியாது உழகில் மிக அற்புதமான கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞானிகள் ஓய்வாக இருந்தபோதுதான் நிகழ்ந்திருக்கின்றன.

மரத்தடியில் சும்மா உட்கார்ந்திருந்த போது தான் ஆப்பிள் விழுவதை கவனித்தார் நியூட்டன். புவியீர்ப்புப்பற்றிய விதியைக்கண்டுபிடித்தார்.

'பாத்டப்'பில் ஓய்வாக குளித்துக் கோண்டு இருந்தபோதுதான் மிதப்பது பற்றிய விதிகளை கண்டுணர்தார் ஆக்கிமிடீஸ். டென்ஷனில்லாமல், ரசித்து முளுஈடுபாட்டுடன் பணிகளைச்செய்யும் போதுதான், மூளை அதன் உச்சத்திறனுடன் செயலாற்றும்.

கவனித்துப்பாருங்கள், விளையாட்டில் கூட, வெற்றியைநினைத்து அதிகப்படபடப்புடன் விளையாடும் குழுதான் பெரும்பாலும் தோற்கிறது. விளையாட்டை அனுபவித்து ஆடுபவர்கள் வெற்றிபெறுகிறார்கள்.

வெற்றி... வெற்றி... என்று உங்களை நீங்களே வருத்திக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் உடலளவிலும், மனதளவிலும் நீங்கள் பலவீனமாகிப் போவீர்கள். வெற்றியைப்பற்றிய அச்சத்தை விட்டுவிட்டு, மனதை அமைதியாக வைத்திருங்கள் உடல் தானாக வேகமாக உழைக்கும்.

ஆனால், உங்களில் பெரும்பாலானவர்கள் நேரெதிராக அல்லவா இருக்கிறீர்கள்? உங்கள் மனம் நிலையில்லாமல் வேகமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனால், உடலின்வேகம் குறைந்து விடுகிறது. இப்படித்தான் சங்கரன்பிள்ளையின் வாழ்க்கையில் ஒரு வேடிக்கை நடந்தது.

'ஒரு வேலையை, மாலையில் வீட்டுக்குப்போனதும் மறக்காமல் செய்ய வேண்டும்' என்று கைக்குட்டையில் அவர் முடிச்சுப்போட்டுக்கொண்டார்.

ஆனால், வீட்டுக்குப்போனதும் எதற்காக அந்த முடிச்சைப் போட்டோம் என்பது சுத்தமாக மறந்துவிட்டது.

படபடப்பானார் மூளையைக் கசக்கினார் மொட்டைமாடியில் உலாத்தினார். நெற்றியில் தட்டிக்கொண்டார். நோட்டில் என்னன்னவோ கிறுக்கினார். ஊஹூம்... நினைவிற்கு வரவேயில்லை.

'பேசாமல் படுத்துத்தூங்குங்கள் எதுவாயிருந்தாலும் நாளைக்புகுப் பார்த்துக் கொள்ளலாம்' என்று அவரது மனைவி அறிவுரைசொன்னார்.



## ஆன்மீகம் 06

'மாட்டேன். ஏதோ முக்கியமான விஷயமாயிருக்கும். அதைக்கண்டு பிடிக்காமல் எப்படித்தூங்குவது?' என்று படுக்கையில் உட்கார்ந்தே இருந்தார்.

இதுவா... அதுவா... என மண்டைக்குள் நூறாயிரம் யோசனைகள் பூச்சிகள் போல் பறந்தன கடைசியில் இரவு இரண்டுமணிக்கு சலித்துப்போய் கைக்குட்டையைத் தூர எறிந்தார் சடக்கென்று ஞாபகம் வந்தது.

'இன்றைக்கு ஒன்பது மணிக்கே தூங்கப்போக வேண்டும்' என்று நினைவுபடுதிக்கொள்ள போடப்பட்ட முடிச்சு அது!

படபடப்பாக மூளையை இயங்கவிட்டால், சங்கரன் பிள்ளைக்கு நேர்ந்ததுதான் உங்களுக்கும் நேரும். முடிவைப்பற்றிய கவலையை விடுங்கள் ஒவ்வொரு முறையும் முளுமையான ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள். வெற்றி தானாக உங்கள் கதவை வந்து தட்டும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஆத்திசூடி: ஔவையார் - பாரதி - முருகையன்

# ஒரு கருத்தியல் ரீதியான ஒப்பாய்வு 05

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத் தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

அவ்வாறே ஔவையார் "முனை முகத்து நில்லேல்" என்று கூறும் கருத்தினைப் பாரதியார் "முனையிலே முகத்து நில்" என்று மறுதலிக்கின்றார். ஔவையார் "போர்த் தொழில் புரியேல்" என்றார். பாரதியாரோ மிக ஆவேசமாகப் "போர்த் தொழில் பழகு" என்று கூறியுள்ளார்.

முருகையனிடம் பாரதியைப் போலவே வீறாப்பான சிந்தனைகள் தோன்றின.

"வருந்துதல் தவிர்க்க
வீண்பயம் நீக்கு
வெற்றிமேல் வெற்றி கொள்"

என்றெல்லாம் பாடுகின்ற முருகையன் மேகத்தின் மேலே உலாவி வருவதற்கான வழியாக வீரத்தினை விளம்புகின்றார். அதாவது,

"சேவகஞ் செய்யேல்
தொல்லைகள் நீக்கு
துரைகளுக்கு அஞ்சேல்
தோல்விக்கு இணங்கேல்
பீடைகள் நொருக்கு
மேன்மையைத் தழுவு
மேகமேல் உலாவி வா"

என்று பாடுவதைக் குறிப்பிடலாம்.

**ஆத்திசூடியில் பழமைவாத எதிர்ப்பு**

மூன்று கவிஞர்களையும் ஒப்பீடு செய்யும் போது பழமைவாத எதிர்ப்பு என்ற விடயத்தில் ஔவையாரை மறுதலிப்பவர்களாக மற்றைய இருவரையும் காணுவது பொது நிலை உண்மையே. பாரதியார் பழமையை நிராகரித்த ஒருவரல்ல என்பது குறிப்பிடத்த க்கது. எனினும்,

"தொன்மைக்கு அஞ்சேல்
புதியன விரும்பு
வேதம் புதுமை செய்
பெரிதினும் பெரிது கேள்"

என்ற நான்கு வரிகளையும் ஒருங்கே வைத்துப் படிக்கும் போது பழமை தொடர்பான இவரின் கருத்தியல் புலனாகும். பழைய வேதங்களால் புதிய உலகை அளக்க முனைந்தால் பெரியதிலும் பெரியது என்று ஒன்று இல்லாது போய்விடும் என்று பாரதியார் எண்ணுகின்றார்.

பாரதிக்குப் பின் வந்தவர் என்றாலும்கூடப் பாரதியிடம் இருந்த இந்தத் தெளிவின் வீச்சு முருகையனின் ஆத்திசூடியை விட "இரண்டாயிரம் ஆண்டுப்பழமைசுமைஎங்களுக்கு" என்ற கவிதை யில்தான் சிறப்பாக வெளிவந்தது. எனினும் முருகையனின் "எழுபத்தாறு" இல்,

"மேன்மையைத் தழுவு
முந்திய துயர் விடு
மாற்றுக உலகை"

என்று வரும் வரிகள் சிந்திக் கத்தக்கவை. பாரதி, முருகையன் இருவரும் கூடப் பழமையின் மாண்பினைப் பாடாதவர்களல்லர், பழம்பெரும் பண்பாட்டு வாழ்வின் உயர்வெல்லாம் அவர்களது ஏனைய பாடல்களில் அதிகம் இடம்பெற்றுள்ளன. ஆனால் ஔவையார்,

"தையல் சொற் கேளேல்"

என்று பாடுவதனை மறுதலித்துப் பாரதி,

"தையலை உயர்வு செய்"

என்றும் முருகையன்,

"பெண்மையை உயர்வு செய்" என்றும் பாடியிருந்ததனைக் குறிப்பிடல் வேண்டும்.

**ஆத்திசூடியில் தேசப்பற்று**

தேசப்பற்றினைப் பாரதி போல் ஏனைய இருவரும் பாடியிருக்க முடியாது என்பது பொதுப்புத்திக்குத் தெரிந்ததே. எனினும் முருகையனும் பாரதியும் தமது ஆத்திசூடிகளில் தேசப்பற்றுத் தொடர்பில் கொண்ட கருத்தியல்களை ஒப்பிடுதல் பொருத்தம். பாரதி,

"தேசத்தைக் காதல் செய்
பூமி இழந்திடேல்
மானம் போற்று"

என்றெல்லாம் தேசியப்பற்றினை வலியுறுத்துவதனைப் போலவே முருகையனும்,

"ஈழம் எம் அன்னை
தாயகம் போற்று"

என்று அதேகுரலில் பேசுவதைக் காணலாம்.

**ஆத்திசூடியில் கலைநாட்டம்**

ஒரு மனிதனின் வளமான இருப்புக்கு அவனது கலாரசனை முக்கிய வழியாகின்றது. இதனை ஔவையார் தனது ஆத்திசூடியில்,

"அழகலாதன செய்யேல்" என்று கூறியுள்ளார். எதனையும் அழகியல் நாட்டத்துடன் செய்பவன் உயிரூட்டம் மற்றும் உணர்வூட்டம் பெறுவான் என்பதை ஔவையார் நன்கு உணர்ந்திருந்தார். இதனைப் பாரதியார் தனது புதிய ஆத்திசூடியில்,


"ரஸத்திலே தேர்ச்சி கொள்
ரூபம் செம்மை செய்
ருசிபல வென்றுணர்"

என்று பாடுவதைக் காணலாம். முருகையன் இதனைப் பாடும் போது,

"ஓசை நயம் உணர்
மகிழ்ந்திட வழிவகு
மீட்டுக வீணைகள்
மொட்டுகள் மோந்து பார்"

என்ற வரிகளில் வெளிப்படுத்தினார். ஓசை நயம், இசை, வாசனை என்பவற்றால் வாழ்வை மகிழ்ச்சிக்குரியதாக்குமாறு முருகையன் கூறுகின்றார்.


**முடிவுரை**



ஔவையார், பாரதி, முருகையன் ஆகிய மூவரும் கவிஞர்கள் என்ற வகையில் அவர்களின் பாடுபொருட்கள், பாடல் வடிவங்கள், கருத்தியல்கள் ஏராளமாய் விரவிக் கிடக்கின்றன. ஆயினும் முதன்முதலில் ஒரு அறநூல் பாரம்பரியத்தில் ஆத்திசூடியை ஔவையார் அருளினார். ஔவையாரின் செல்வாக்குக்கு உட்படாமல் பாரதி புதிய ஆத்திசூடியைத் தந்திருக்க முடியாது. பாரதியின் வரிகளில் இதனை நன்கு உணர முடியும். இவர்கள் இருவரின் செல்வாக்கும் முருகையனிடத்தில் உள்ளதை மறுதலிக்க முடியாது. ஆனால் மேலே கருத்தாடப்பட்ட விடயங்களின் பிரகாரம் காலத்தோடு அண்டிய கருத்தியல் நெறி மாற்றத்தில் பாரதியிடமும் முருகையனிடமும்ஔவையின்மனப்போக்கை மறுதலிக்கும் போக்கும் வீறார்ந்த கருத்தியல் வீச்சும் அதிகம் உள்ளதை அவதானிக்கலாம். இதற்கு இவர்களின் மொழியிலுள்ள சாதாரண வாழ்வியலுடனான சிநேகிதப் போக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். இது எவ்வாறாயினும் ஔவையாரின் ஆத்திசூடியின் பதிய பரிமாணங்களாகப் பாரதியின் புதிய ஆத்திசூடியும் முருகையனின் எழுபத்தாறும் அமைந்துள்ளன எனலாம். (முற்றும்)

இ.இராஜேஸ்கண்ணன்
விரிவுரையாளர், சமூகவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.





யாழ்.வட்டு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இல்லங்களுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டியில் மாணவர்கள் பங்கேற்பதையும் சுழிபுரம் வலி. மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# புலிகளின் தாக்குதலுக்கு வெடிபொருட்கள் விநியோகித்தவர் விளக்கமறியலில்

## இரகசிய பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு வெடி பொருட்களை விநியோகித்த குற்றச்சாட்டில் ஸ்ரீரங்கன் என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலி ஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

இரகசிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கடந்த 18ஆம் திகதி இவர் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர். பளை வீதி சங்கானை எனும் முகவரியில் வசிக்கும் பிரஸ் தாப நபர் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் விடு தலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கான வெடிபொருட்களை விநியோகித்தவர் என்பதை விசாரணைகளின் போது ஒப்புக்கொண்டிருப் பதாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

அவரை வெளியில் சுதந்திரமாக நடமாட விடுவது தேசிய பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் என்று பொலிஸார் தெரிவித்த வாதத்தை ஏற்றுக்கொண்ட கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் சந்தேக நபரை விளக்க மறியலில் வைத்து விசாரிக்க இரகசியப் பொலிஸாருக்கு அனுமதியை வழங்கி யுள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமாக பணம் கடத்தியவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து 79 இலட்சம் ரூபா வெளிநாட்டுப்பணம் கடத்திய நபர் சுங்க அதிகாரிகளினால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்த வெளிநாட்டு பணத்தில் சுவிஸ்பிராங் 1600 ஆயிரமும் யூரோ 39 ஆயிரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

50 வயது மதிக்கத்தக்க இந்திய நபர் ஒருவரே சிங்கப்பூருக்கு இப் பணத்தைக் கடத்த முயன்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் எதிர்கால முன்னேற்ற நிலை தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியிலுள்ள கலா சாலைக் கட்டடத்தில் நடைபெறும்.

இதில் பழைய மாணவர்களையும் சமூக நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் எம். இக்னேசியஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை முதலாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறையிலும் காலை 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்புத் துறையிலும் வைத்து வழங்கப்படும்.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய் களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள் ளார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.02. 02

★ 1509 - போர்த்துக்கலுக்கும் துருக்கிக்கும் இடையில் இந்தியாவின் தியூ என்ற இடத்தில் கடற்சமர் மூண்டது.

★ 1790 - வீரபாண்டிய கட்டபொம்மன் 47 ஆவது பாளையக்காரராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

★ 1812 - கலிபோர்னியாவின் கரையோரங்க ளில் ஃபோர்ட் ரொஸ் என்ற இடத் தில் தோல் வர்த்தக குடியேற்ற மொன்றை ரஷ்யா அமைத்தது.

★ 1822 - இலங்கையின் ஆளுநராக சேர் எட் வேர்ட் பஜெட் நியமிக்கப்பட்டார்.

★ 1848 - மெக்சிக்கோவுக்கும் ஐக்கிய அமெ ரிக்காவுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1848 - கலிபோர்னியாவில் தங்கம் தேடு வதற்காக சீனர்கள் கப்பலில் சான் பிரான்சிஸ்கோ வந்திறங்கினார்கள்.

★ 1878 - துருக்கியின் மீது கிரேக்கம் போரை அறிவித்தது.

★ 1880 - முதலாவது மின்சார வீதி விளக்கு கள் இந்தியானாவில் நிறுவப்பட் டன.

★ 1897 - பென்சில்வேனியாவின் தலைநகர் ஹரிஸ்பேர்க் தீயினால் அழிந்தது.

★ 1899 - அவுஸ்திரேலியாவின் தலைநகரை சிட்னிக்கும் மெல்போர்னிற்கும் இடை யில் கன்பராவில் அமைப்பதென முத லமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மா னிக்கப்பட்டது.

★ 1901 - விக்டோரியா மகாராணியின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

★ 1920 - எஸ்தோனியாவுக்கும் ரஷ்யாவுக் கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1933 - ஜேர்மனியின் நாடாளுமன்றத்தை ஹிட்லர் கலைத்தார்.

★ 1943 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின் கிராட் போரின் பின்னர் கடைசி ஜேர்மனியப் படைகள் சோவியத் ஒன்றியத்திடம் சரணடைந்தன. 91ஆயிரம் பேர் உயிருடன் பிடிக்கப் பட்டனர்.

★ 1946 - ஹங்கேரியக் குடியரசு அமைக்கப் பட்டது.

★ 1971 - உகாண்டாவில் ஒரு வாரத்தின் முன்னர் இடம்பெற்ற புரட்சியின் பின்னர் இடியமீன் உகாண்டாவின் ஜனாதிபதியாகத் தன்னை அறிவித் தார்.

★ 1972 - டப்ளினில் பிரித்தானிய தூதரகம் தேசியவாதிகளால் தாக்கி அழிக் கப்பட்டது.

★ 1982 - சிரியாவின் ஹமா நகரில் சிரிய அரசு மேற்கொண்ட தாக்குதல்க ளில் கிட்டத்தட்ட 10ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1989 - ஒன்பது ஆண்டு கால முற்றுகை யின் பின்னர் கடைசி ரஷ்யத் துருப் புக்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறின.

★ 1989 - செய்மதித் தொலைக்காட்சிச் சேவை ஸ்கை தொலைக்காட்சி ஆரம்பிக் கப்பட்டது.

## பிறப்புகள்

★ 1522 - லியூஜி ஃபெறாரி, இத்தாலியக் கணித ஆய்வாளர் (இ.1565)

★ 1871 - பா.வே.மாணிக்க நாயக்கர், அறிவி யல் தமிழ் வளர்த்த தமிழறிஞர் (இ.1931)

★ 1882 - ஜேம்ஸ் ஜோய்ஸ், ஐரிய எழுத் தாளர் (இ.1941)

★ 1924 - வி.வி. வைரமுத்து ஈழத்து நாடகத் துறையின் முன்னோடி, நடிகமணி (இ.1989)

★ 1977 - ஷக்கீரா, கொலம்பியப் பாடகி

★ 1985 - உபுல் தரங்க, இலங்கை துடுப் பாட்ட வீரர்

## இறப்புகள்

★ 1907 - திமீத்ரி மென்டெலீவ், ரஷ்ய வேதி யியலாளர் (பி.1834)

★ 1970 - பேட்ரண்ட் ரசல், நோபல் பரிசு பெற் றவர் (பி.1872)

★ 1980 - வில்லியம் ஸ்டெயின், நோபல் பரிசு பெற்றவர் (பி.1911)

★ 1987 - அலிஸ்ரர் மக்லின், ஆங்கில எழுத் தாளர் (பி.1922)

**1998 - பிலிப்பைன்சில் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 104 பேர் உயிரிழந்தனர்.**

## 450 ஆண்டுகளுக்கு முந்திய ஓவியம் 74 கோடிக்கு ஏலம்



450 ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலியில் வரையப்பட்ட குழந்தை இயேசுவின் ஓவியம் நியூயோர்க் நகரில் ரூ.74கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் 1560களில் ஓவியர் டைட்டனால் இந்த அற்புதமான ஓவியம் வரையப்பட்டது.மடோனா என்றழைக்கப்படும் தேவ மாதா குழந்தை இயேசு செயின்ட்ஸ் லூக் கேதரின் அலெக்சாண்டிரியா ஆகியோரை சித்திரித்து இந்த ஓவியம் அற்புதமாக வரையப்பட்டுள்ளது.

நியூயோர்க் நகரில் உள்ள சோத்பை என்ற ஏல நிறுவனம் அரிய ஓவியங்களை கடந்த 27 ஆம் திகதி ஏலம் விட்டது.இதில் எசேக்ரா கன்வர்சேஷன் என்ற மிகவும் அரிய ஓவியம் 74 கோடிக்கு ஏலம் எடுக்ககப்பட்டது. இந்த ஓவியத்தை இவ்வளவு தொகைக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த ஒருவர் ஏலத்தில் எடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# எகிப்தில் கலவரம் தீவிரம்; தலைநகரில் பாரிய பேரணி

## ஜனாதிபதியின் மனைவி தப்பியோட்டம்

ஆபிரிக்க நாடான எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் (82) பதவி விலக வலியுறுத்தி அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வன்முறைச் சம்பவம் காரணமாக போராட்டம் கலவரமாக மாறியது. நேற்று 8 ஆவது நாளாகவும் கலவரம் நீடித்தது. தீவைப்பு சம்பவங்கள், அரசு சொத்துக்களை சூறையாடுதல் போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. கலவரத்தை அடக்க இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தலைநகர் கெய்ரோ மட்டுமன்றி அலெக்சாண்டிரியா உட்பட நாடுமுழுவதும் கலவரம் பரவியுள்ளது.கலவரத்தில் இதுவரை 150 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இருந்தும் கலவரம் ஓய்ந்தபாடில்லை. மக்களை அமைதிப்படுத்த ஏற்கனவே இருந்த மந்திரி சபையை ஜனாதிபதி முபாரக் கலைத்து விட்டார்.

புதிய இடைக்கால மந்திரிசபையை அமைத்துள்ளார். இருந்தும் மக்கள் அமைதியாகவில்லை.முபாரக் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.ஆனால் அவர் மறுத்து வருகிறார். இதற்கிடையே நேற்று முன்தினம் நாடு முழுவதும் வேலை நிறுத்தம் அறிவித்து பிரமாண்ட பேரணி நடத்தப்பட்டது.

தலைநகர் கெய்ரோ மற்றும் அலெக் சாண்டிரியாவில் நடந்த பேரணிகளில் சுமார் 10 இலட்சம் பேர் பங்கேற்றனர். இதில் ஏழை முதல் பணக்காரர் வரை அனைவரும் பங்கேற்றனர். மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

ஒட்டுமொத்தமாக ஜனாதிபதி முபாரக் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர்.போராட்டம் கட்டுக்கடங்காமல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் மனைவி சுஷானே (69) லண்டன் தப்பி ஓடிவிட்டதாக கூறப்படுகிறது.

லண்டனில் இவர்களுக்கு சொந்தமான ஆடம்பர பங்களா உள்ளது. இது ரூ 60 கோடி மதிப்புடையது. மனைவி சுஷானேயை தொடர்ந்து ஜனாதிபதி முபாரக்கும் திடீரென லண்டன் தப்பி செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வெள்ளத்தில் பஸ் சிக்கியதில் 34 பேர் உயிரிழப்பு

(லாபாஸ்)



பொலிவியா நாட்டில் ஆற்றின் கரை உடைந்து ஏற்பட்ட வெள்ளத்தில் பஸ், லொறி என்பன அடித்துச் செல்லப்பட்டன. இந்த விபத்தில் 34 பேர் பலியாகினர்.


பொலிவியா நாட்டின் லாபாஸ் நகரில் இருந்து 700 கி.மீ தொலைவில் உள்ள பாம்பாசி என்ற இடத்தில் மொல்லேபங்கு என்ற ஆறு ஓடுகிறது. அதன் கரையை ஒட்டி நெடுஞ்சாலை உள்ளது. கடந்த சில நாட்களாக அந்தப் பகுதியில் விடாமல் மழை பெய்தது. அதில் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கரை உடைந்தது. நெடுஞ்சாலையை தாண்டி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஆற்றின் கரை உடைந்து திடீரென வெள்ளம் பெருக் கெடுத்தபோது வீதியில் சென்று கொண்டிருந் ந பஸ்ஸும் லொறியும் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

பஸ்ஸுல் அப்போது 39 பேரும் லொறியில் 2 பேரும் இருந்தனர். வெள்ளத்தில் பல கி.மீ தூரத்துக்கு பஸ்ஸும் லொறியும் உருண்டு சென்றன. தகவல் அறிந்து மீட்புப் படையினர் அந்தப் பகுதிக்கு விரைந்தனர். வெள்ள நீர் மட்டம் அதிகமாக இருந்ததால் பஸ்ஸை நெருங்குவது கடினமாக இருந்தது. மீட்புப் பணியில் 34 பேரின் சடலங்களை மட்டுமே மீட்க முடிந்தது. மீதுள்ள 7 பேரின் நிலை தெரியவில்லை. பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் 32 பேரும் லொறியில் இருந்த 2 பேரும் பலியானதாக மண்டல பொலிஸ் அதிகாரி இவார் மார்க்கஸ் தெரிவித்தார். (ஸ்ரீ)




# விக்கிலீக்ஸை முடக்க நேரிட்டால் இரகசிய தகவல்கள் வெளிவரும்

## அசேஞ்ச் மிரட்டல்



(நியூயோர்க்)

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை நிரந்தரமாக முடக்க நேரிட்டால் அதிலுள்ள அளவற்ற தகவல்களின் இரகசியக் குறியீடுகளைத் திறக்கும் விதங்களை வெளியிட வேண்டி வரும் என்று விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவனர் ஜுலியன் அசேஞ்ச் எச்சரித்துள்ளார்.

விக்கிலீக்ஸ் நிறுவுனர் அசேஞ்ச் இது குறித்து நேற்று முன்தினம் சி.பி.எஸ். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் அடங்கியுள்ள வெளிவராத அளவற்ற இரகசிய தகவல்களின் ஆதார நகல்கள் ஒரு இலட்சம் பேரிடம் அளிக்கப்பட்டுள்ளது. அந்தத் தகவல்களுக்கான இரகசியக் குறியீடுகளும் அவர்களுக்குத் தெரியும்.

விக்கிலீக்ஸ் தொடர்பாக பலர் கைது செய்யப்படுவதோ தாக்கப்படுவதோ தொடர்ந்தால் நாங்கள் சும்மா இருக்க மாட்டோம். அந்தக் குறியீடுகளை மாற்றி தகவல்களை வெளிக் கொண்டு வருவது எப்படி என்பதையும் வெளியிட வேண்டி வரும். நாங்கள் இல்லாவிட்டாலும் வேறு சிலர் இந்தப் பணியை மேற்கொண்டு தொடர்ந்து செய்வர். இவ்வாறு அசேஞ்ச் தெரிவித்தார். (ஸ்ரீ)

# இந்தியாவை விட பாகிஸ்தானிடம் அதிகளவு அணுவாயுதங்கள்

## அமெரிக்கா தகவல்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானிடம் இந்தியாவிடம் உள்ளதை விட அதிகளவு அணுஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அதனிடம் 110 அணு ஆயுதங்கள் இருப்பதாகவும் அது கூறியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவில் இருந்து வெளிவரும் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை இது தொடர்பாக வெளியிட்டிருப்பதாவது,

பாகிஸ்தானிடம் 4 ஆண்டுகளுக்கு முன்பு 30 முதல் 80 வரையிலான அணு ஆயுதங்கள் இருந்தன. அதன் பின் பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரிப்பு திறனை வேகமாக விரிவுபடுத்தியது என்று சர்வதேச அமைதிக்கான அறிவு மையத்தின் தலைவர் டேவிட் ஆல்பி ரைட் தெரிவித்துள்ளார்.


இதன் காரணமாக அணுகுண்டு தயாரிப்பதற்கு தேவைப்படும் யுரேனியம் மற்றும் புளுடேனிய உற்பத்தியை அது வேகப்படுத்தியது. அதன் அடிப்படையில் யுரேனியத்தை செறிவூட்டுவதும் அதிகரிக்கப்பட்டது. இதனால் இப்போது பாகிஸ்தானிடம் 110 அணு ஆயுதங்கள் இருக்கும் என்றும் டேவிட் ஆல்பிரைட் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள 2 இடங்களில் இருந்து ஆயுதத்தரத்திலான யுரேனியத்தை பாகிஸ்தான் தொடர்ந்து தயாரித்து வருகிறது. புளுடோனிய உற்பத்தியையும் அது அதிகரித்து உள்ளது. மேலும் தயாரிப்பில் உள்ள அணு ஆயுதங்களும் விரைவில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன. இதனால் இப்போது இருப்பதை விட இன்னும் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் இந்தியா எல்லை நெடுகிலும் நிறத்தப்பட்டு உள்ளன என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்து உள்ளது.

பாகிஸ்தானிடம் இருக்கும் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை இந்தியாவிடம் இருப்பதை விட அதிகம் ஆகும்.பாகிஸ்தான் பொருளாதார சீரழிவில் சிக்கி உள்ள போதிலும் உலகின் வேறு எந்த நாட்டையும் விட அதிக அளவு அணு ஆயுதங்களை மிக அதிகமான வேகத்தில் தயாரித்து வருகிறது என்று கடந்த 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒரு பத்திரிகையில் அமெரிக்க உளவுத்துறை அதிகாரி பீட்டர் லவோயிஸ் எழுதி இருந்தார். இவ்வாறு வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் எழுதப்பட்டு உள்ளது. (ஸ்ரீ)

# மியன்மார் வரலாற்றில் 20 ஆண்டுகளுக்கு பின் முதன்முறையாக பாராளுமன்றம் கூடியது



(நேபீட்டா)

மியன்மார் வரலாற்றில் 20 ஆண்டுகளுக்குப் பின் நேற்று முன்தினம் முதன் முறையாக பாராளுமன்றின் இரு அவைகளும் கூடின. இந்த முதல் கூட்டத்தில் நாட்டின் புதிய அரசியல் சாசனம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 50 ஆண்டுகளாக நாட்டில் நிலவி வந்த இராணுவ ஆட்சி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது. அதேநேரம் நாடு முழுவதும் நேற்று முன்தினம் 14 மாகாண சட்ட சபைகளும் முதன் முறையாகக் கூடின.

மியன்மாரில் 1962 இல் இருந்து இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. கடந்தாண்டு நவம்பர் 7 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடந்தது. இதில் ஆங்சாங் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி கலந்து கொள்ளவில்லை. தேர்தல் முடிவுகளில் இராணுவத் தலைமையினால் இயக்கப்படும் ஐக்கிய ஒற்றுமை மற்றும் மேம்பாட்டுக் கட்சி பெரும்பான்மை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து கடந்த 20 ஆண்டுகளுக்குப்பின் நேற்று முன்தினம் முதன் முதலாக அந் நாட்டு பாராளுமன்ற கூட்டம் ஆரம்பமானது.மொத்தம் 440 இடங்கள் கொண்ட கீழவையும் 224 இடங்கள் கொண்ட மேலவையும் ஒரே நேரத்தில் நேற்று காலை தொடங்கின.

பெரும்பான்மையான இடங்களில் யு.எஸ்.டி.பி., கட்சி உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர்.

ஆங்சாங்சூகியின் கட்சி தேர்தலில் பங்கேற்காததால் அதன் உறுப்பினர்கள் யாரும் இடம் பெறவில்லை. கூட்ட நடவடிக்கைகளைப் பார்வையிட பத்திரிகையாளர்கள், அரசியல் நிபுணர்கள், பொது மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. (ஸ்ரீ)

# இலங்கையில் ஊடக சுதந்திரம் நிலை நாட்டப்பட வேண்டும்

## ஐ.நா.வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் ஊடக சுதந்திரம் நிலை நாட்டப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஊடகவியலாளர்கள் எந்தவிதமான அச்சமுமின்றி தமது பணிகளை தொடர்வதற்கான ஓர் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அடக்கு முறைக்கு உட்படுத்தப்படுவோம் அல்லது தாக்கப்படுவோம் என்ற அச்சம் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் அச்சமின்றி செயற்படக்கூடிய சூழ்நிலை மிகவும் அவசியமானது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மோசடியாளர்களுக்கு மக்கள் வாக்களிக்கக்கூடாது

## அமைச்சர் டியுகுணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

மோசடியாளர்களுக்கு மக்கள் வாக்களிக்கக்கூடாது என சிரேஷ்ட அமைச்சர் டியு குணசேகர தெரிவித்துள்ளார்.

மாதாந்தம் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை உழைக்கக் கூடிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவிக்காக ஏன் சிலர் மில்லியன் கணக்கான ரூபாவை செலவிடுகின்



றனர் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மகரகம பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அதிகளவில் பிரசாரத்திற்காக செலவு செய்வோர் அதிகாரத்தை கைப்பற்றுவதனை விடவும் களவாடுவதற்கு முயற்சி செய்கின்றமை புலனாவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மோசடி செய்வார்கள் என எதிர்பார்க்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கும் மக்கள் வாக்களிக்கக் கூடாது என் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் 5 பிரதான கட்சிகள் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை சம்பந்தமாக 5 பிரதான அரசியல் கட்சிகள் இந்த வாரம் வழக்குகளை தாக்கல் செய்யவுள்ளன.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி .தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளே இவ்வாறு வழக்குகளை தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்புமனுக்களை சமர்ப்பிப்பதற்கான காலம் கடந்த மாதம் 27ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 36 வேட்புமனுக்களும் ஐக்கிய தேசியக்கட்சியின் 9 வேட்புமனுக்களும் ஜே.வி.பியின் இரண்டு வேட்புமனுக்களும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் இரண்டு வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டதுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்த 6 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இக் கட்சிகள் தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் தமது சட்டத்தரணிகளுடன் விரிவாக ஆராய்ந்துள்ளன.

இதனடிப்படையில் தெரிவத்தாட்சி அதிகாரிகளின் தீர்மானத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வார இறுதிக்குள் வழக்குகளை தாக்கல் செய்வது எனவும் மேற்கூறிய அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன. (ஸ்ரீ-2)

# பாஸ் நடைமுறையால் மன்னார் மீனவர்கள் அசௌகரியம்

மன்னார் மாவட்டத்தில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கடற்படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாஸ் நடைமுறையினால் தொடர்ந்து பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக மீனவர்கள் தெரிவிக்கையில்,

தொழிலுக்குச் செல்வதற்கு கடற்படையினர் பல நிபந்தனைகளை விதித்துள்ளனர். கடற்படையினரால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை நிரப்பி 10 அதிகாரிகள் அதில் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அதன் பின் கடற்படையினரின் அடையாள அட்டையினை பெற்றதன் பின்னரே கடலுக்குச் செல்ல முடியும்.

இவ் அடையாள அட்டையினைப் பெற சுமார் 2 மாதங்கள் செல்லும் எனவும் கடந்த வருடம் வழங்கப்பட்ட கடற்றொழில் பாஸ் காலாவதியாகிவிட்ட நிலையில் மீண்டும் பாஸ் பெற வேண்டும் என மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு சென்ற புகையிரதம் தடம் புரண்டது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு எரிபொருள் ஏற்றிச் சென்ற புகையிரதம் ஒன்று மன்னம்பிட்டியில் வைத்து நேற்று முன்தினம் தடம் புரண்டுள்ளது.

புகையிரதத்தின் 8 தாங்கிகள் தடம் புரண்டதாகவும் அவற்றில் இரு தாங்கிகள் கவிழ்ந்ததாகவும் புகையிரத திணைக்கள திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க கூறினார்.

இதனால் நேற்று முன்தினம் இரவு கொழும்பு, மட்டக்களப்பு புகையிரத சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)



தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. யுனிசெப் நிதி உதவியுடன் அமைக்கப்படும் இக் கட்டடத்திற்கான அனுட்டானத்தில் பங்குத்தந்தை ஜேம்ஸ்நாதன் அடிகளார் ஈடுபடுவதையும் அருகில் மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி மற்றும் பாடசாலை அதிபர் நா. கண்ணதாசன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# கொழும்பில் பாதாள உலக தலைவர்கள் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பு நகரில் செயற்பட்டு வரும் இரண்டு பிரதான பாதாள உலக தலைவர்களான முகத்துவாரம் இந்திரா, மாளிகாவத்தை மல்லா ஆகியோர் அடையாளம் தெரியாத இரண்டு ஆயுத குழுவினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் எங்கு யாரால் கடத்திச் செல்லப்பட்டனர் என்ற தகவல் இதுவரை தெரியவில்லை. கிம்பலாஹெல குணா என்ற பாதாள உலக குழுத்தலைவரின் பிரதான சகாவான இந்திரா கொலைகள், போதைப் பொருள் விற்பனை உள்ளிட்ட பல குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர் என பொலிஸார் கூறியுள்ளனர். மீதொட்ட முல்லை பிரதேசத்தில் இருந்த போது இவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அதேவேளை மாளிகாவத்தை பிரதேசத்தில் செயற்பட்டு வந்த மல்லா என்ற பாதாள உலக குழுத்தலைவர் கொலை குற்றங்களுடன் சம்பந்தப்பட்டவர் எனவும் கொலை குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்தவர் எனவும் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில் மாளிகாவத்தை பிரதேசத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

கொழும்பில் செயற்பட்ட பிரபலமான பாதாள உலக குழுத்தலைவரான பிரின்ஸ் கொலம் என்பவரின் சகாவாக செயற்பட்டு வந்த மல்லா, பின்னர் தனியான குழுவொன்றை வழிநடத்தி வந்ததுடன் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் 700 ரூபாவாக உயர்த்தப்படவேண்டும்

## சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் 700 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டுமென அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் ஒன்றியத்தின் தலைவர் இராம லிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட மக்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் பாரிய தொழிற் சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பள உயர்வை வலியுறுத்தி நடைபெறும் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு ஏனைய தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் தற்போதைய கூட்டு ஒப்பந்தம் காலாவதியாவதாகவும் புதிய கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களின் சம்பளத்தை 700 ரூபாவாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொருட்கள் சேவைகளின் விலை உயர்வடைந்துள்ளதாகவும் அதற்கு நிகராக சம்பளம் உயர்த்தப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில தொழிற்சங்கத் தலைவர்கள் அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்டு ஒதுங்கிக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழினத்திற்கு உண்மையாக இருப்பதால் எதிரிகள் என்னை கொல்லத் துடிக்கின்றனர்

## சீமான் தெரிவிப்பு

ஜெயலலிதாவை நான் ஆதரிக்கவில்லை; ஈழத்தில் தமிழ் இனத்தை அழிக்க காரணமாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கு பாடம் புகட்ட வேண்டும் என்பதே என் நிலைப்பாடு என சீமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக போர் நடந்த போது ஈழத்தமிழர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கக் கோரி தீக் குளித்து தற்கொலை செய்து கொண்ட முத்துக்குமாருக்கு வீரவணக்கம் செலுத்தும் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் ஆகியவை நாம் தமிழர் கட்சி சார்பில் நாகையில் இடம்பெற்றது.

பொதுக்கூட்டத்தில் நாம் தமிழர் கட்சி தலைவரும் திரைப்பட இயக்குநருமான சீமான் உரையாற்றுகையில்,

இலங்கையில் நடந்த ஈழத்தமிழர்களுக்கு எதிரான போரில் 1.75 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். 538 தமிழக மீனவர்கள் தாக்கி படுகொலை செய்யப்பட்டனர். போராடியே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தமிழ் இனம் தள்ளப்பட்டுள்ளது.

அடக்கு முறைகளால் இங்குள்ள ஆட்சியாளர்கள் நம்மை அடக்கி விட முயற்சிக்கின்றனர். அடக்குமுறை அதன் வாசலை பெரிதாக்குமே தவிர அடைத்து விடாது. எல்லா துன்ப பூட்டுகளுக்குமான திறவுகோல் ஆட்சி அதிகாரம் என்று அம்பேத்கார் கூறியுள்ளார்.

அந்த ஆட்சி அதிகாரத்தை நாம் கைப்பற்றுவது தவிர நம் இன விடுதலைக்கு வேறு வாய்ப்பு இல்லை. ஈழச் சொந்தங்கள் மாண்டு மடிந்த போது இங்குள்ளவர்கள் யாராவது கண்ணீர் வடித்ததுண்டா? இந்தியா விரும்பிய போரைத்தான் இலங்கை நடத்தி முடித்திருக்கிறது என்று இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ கூறுகிறார்.


இதற்கு இங்கு மறுமொழி ஏதாவது உண்டா? தமிழ் இனத்திற்கு சீமான் உண்மையாக இருக்கின்றான் என்பதால் என் எதிரிகள் என்னை கொல்லத் துடிக்கின்றனர். நான் இருந்தால் ஒரு சீமான், செத்தால் இந்த மண்ணில் ஒரு இலட்சம் சீமான் உருவாகுவார்கள் என்பதை என் எதிரிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தில் நம் தமிழ்ச் சொந்தங்களும் இங்கே மீனவ மக்களும் சிந்திய கண்ணீருக்கும் இரத்தத்திற்கும் சிங்களவர்கள் பதில் சொல்லும் காலம் நெருங்கி கொண்டிருக் கிறது. சீமான் என்னென்ன வித்தைகள் காட்ட போகிறேன் என்பதை ஐந்து வருடம் பொருத்திருந்து பாருங்கள்.

எந்த இலட்சியத்திற்காக முத்துக்குமார் தன் உடலில் நெருப்பை பற்ற வைத்துக் கொண்டானோ அந்த இலட்சியத்தை நிறைவேற்றும் வரை நான் ஓயப்போவதில்லை.

அ.தி.மு.க.வை சீமான் ஆதரிப்பதாக பதறி துடிக்கிறார்கள். அ.தி.மு.க.வை ஆதரிப்பதாக நான் சொல்லவில்லை. ஈழத்தமிழர் விடுதலைக்காக போராடிய பிரபாகரனை தூக்கில் போட சொன்ன ஜெயலலிதாவை நான் ஆதரிக்கவில்லை. என் இனத்தை கொன்று குவிக்க காரணமாக அமைந்த காங்கிரஸ் கட்சியை தான் எதிர்க்கிறேன்.

தந்தை பெரியார், அம்பேத்கார், முத்துராமலிங்கதேவர் உள்ளிட்டவர்கள் எந்த காங்கிரஸ் கட்சியை ஒழிக்க நினைத்தார்களோ என் தமிழ் இனத்தின் விடுதலையை வீழ்த்திய அந்த காங்கிரசை ஒழிப்பது தான் என் இரத்தத்தில் ஊறிய யுத்தமும் நாம் தமிழர் கட்சியின் கொள்கை முடிவும் ஆகும். ஆந்திராவில் தனி தெலுங்கானா கோரி போராடும் சந்திரசேகரராவ் போல் தமிழகத்தில் தன்மான தமிழர்கள் அப்போது இருந்திருந்தால் நம்மிடம் இருந்து கச்சதீவு பறிபோயிருக்காது.



கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்பது மட்டுமே நம் மீனவ சொந்தங்களை பாதுகாப்பதற்கான வழி. இதற்காக தமிழர்கள் ஒன்று திரண்டு போராட வேண்டும் .நாம் அளிக்கும் வாக்கு நம்மை ஆளவா? நம்மை நாமே ஆளவா? என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

சட்டமன்றத்தேர்தல் மக்களின் அறிவாயுதம். வாக்கு அதற்கான கருவி. எனவே தேர்தலின் போது விழிப்போடு இருக்க வேண்டும்.2011 இலிருந்து 2016 வரை நாம் தமிழர் கட்சி பதுங்கும் புலியாக இருக்கும். இடையில் இடைத்தேர்தல் நடைபெறும் சூழல் உண்டாகும் பட்சத்தில் நாம் தமிழர் கட்சி அப்போது களம் காணும். அதுவரை பொறுத்திருக்கும். 2016இல் தி.மு.க., அ.தி.மு.கவிற்கு மாற்றுச் சக்தியாக நாம் தமிழர் கட்சி தமிழகத்தில் அசைக்க முடியாத அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று சீமான் பேசினார். (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்


# சபரிமலையில் "மகரஜோதி" மனிதர்களால்தான் ஏற்றப்படுகிறது

## திருவாங்கூர் தேவசம் போர்டு அறிவிப்பு

சபரிமலையில் மகரஜோதி மனிதர்களால் தான் ஏற்றப்படுகிறது என்று திருவாங்கூர் தேவசம்போர்டு அறிவித்துள்ளது.

சபரிமலையில் கடந்தமாதம் 14 ஆம்திகதி புல்லுமேடு பகுதியில் ஏற்பட்ட விபத்தில், மகரஜோதியை தரிசித்துவிட்டு ஊர் திரும்பிய ஐயப்ப பக்தர்கள் 102 பேர் நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர்.

இது தொடர்பான வழக்கை கேரளா மேல் நீதிமன்றம் விசாரித்து வருகிறது. சமீபத்தில் நடந்த விசாரணையின்போது, பொன்னம்பல மேட்டில் மகரஜோதி மனிதர்களால் ஏற்றப்



படுகிறதா? அல்லது வானத்தில் தோன்றும் நட்சத்திரமா? என்பதை திருவாங்கூர்தே வசம் போர்டு விளக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில், திருவாங்கூர் தேவசம் போர்டின் கூட்டம் அதன் தலைவர் எம்.ராஜ கோபாலன் நாயர் தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது.சபரிமலை ஐயப்பன் கோவில் மேல் சாந்தி கண்டரரு, ராஜீவரு, பிரபல வாஸ்து நிபுணர் கன்னிபையூர் நாராயணன் நம்பூதிரி மற்றும் பல உயர் பூசாரிகள், திருவாங்கூர் தேசவம்போர்டு உறுப்பினர்கள், பந்தளம் அரச குடும்பத்தினர், ஐயப்பன் கோவில் நிர்வாகிகள், கட்டடக்கலை வல்லுநர்கள்ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் தேவசம் போர்டு தலைவர் ராஜகோபாலன் நாயர் நிருபர்களிடம் கூறியதாவது,

பொன்னம்பலம் மேட்டில் மகர ஜோதியை மனிதர்கள் தான் ஏற்றுகிறார்கள். இது எல்லோருக்கும் தெரியும். அதை திருவாங்கூர் தேவசம் போர்டும் அங்கீகரித்துள்ளது. மகர ஜோதி ஏற்றப்படும் விடயத்தில் இந்துக்களிடையே ஒரு நம்பிக்கையுள்ளது.

அந்த நம்பிக்கையில் தேவசம் போர்டு தலையிட விரும்பவில்லை. மனிதர்களால் தான் மகரஜோதி ஏற்றப்படுகிறது என்று பிரசாரம் செய்யவும் தேவசம் போர்டு விரும்பவில்லை.

மகரஜோதி பிரச்சனைப் பற்றி விவாதிக்க மட்டும் இன்றைய கூட்டம் கூட்டப்படவில்லை. மண்டல பூஜை மற்றும் மகர விளக்கு பூஜை காலங்களான நவம்பர் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலத்தில் ஐயப்ப சுவாமியை தரிசிக்க வரும் பக்தர்களின் கூட்டம் அளவுக்கு அதிகமாக உள்ளது.

ஆகவே கூட்ட நெரிசலை தவிர்க்க, வருடம் முழுவதும் கோவிலை திறந்து பக்தர்களை தரிசனத்துக்கு அனுமதிக்கலாமா என்பது பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

வருடம் முழுவதும் கோவிலை திறந்து வைப்பது சம்பிரதாயத்துக்கும், வழக்கத்துக்கும் மாறானது. ஆகவே ஆண்டு முழுவதும் கோவிலை திறக்க வேண்டாம் என்று ஏகமனதாக கூட்டத்தில் முடிபு எடுக்கப்பட்டது.

அதேபோல், பக்தர்களின் நெரிசலைக் குறைப்பதற்காக புனிதமான 18ஆம் படியை அகலப்படுத்தலாம் என்ற யோசனைக்கும் அனைத்து தரப்பினரும் பலத்த எதிர்ப்பு தெரிவித்தனர். புனித 18ஆம் படியை அகலப்படுத்துவது, கோவில் கட்டப்பட்ட ஆகம விதிக்கு விரோதமானது.

அத்துடன் 18ஆம் படி சந்நிதானத்துடன் புனிதம் வாய்ந்ததும் ஆகும். ஆகவே 18ஆம் படியை அகலப்படுத்துவது சரியல்ல என்றும் கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டது என அவர் தெரிவித்தார்.

இந்த விபவரங்களை பதில் மனுவாக மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## இலங்கைக் கடற்படையை கண்டித்து பழனியில் ஆர்ப்பாட்டம்

தமிழக மீனவர்கள் 539 பேரை சுட்டுப் படுகொலை செய்த இலங்கைக் கடற்படையினரைக் கண்டித்து பழனியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பழனி பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ் மாணவர் பேரவையினர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர்,பா.ம.க.வினர், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் இலங்கை கடற்படையினரைக் கண்டித்தும் மத்திய அரசை நடவடிக்கை எடுக்கக் கோரியும் கோஷமிட்டனர். (ஸ்ரீ-2)

# புதுவை தமிழ் சங்கத்தினால் இலங்கை மாணவர்கள் கௌரவிப்பு

புதுவை தமிழ்ச் சங்கத்தின் சார்பில் சென்னை தரமணியில் உள்ள தேசிய ஆசிரியர் பயிற்சி பயிலும் இலங்கை தமிழர் மாணவர்களுக்கு பாராட்டு விழா புதுவை தமிழ் சங்க வளாகத்தில் நடைபெற்றது.

தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் முத்து தலைமை தாங்கி பரிசுகளை வழங்கி பேசுகையில்,

இது போல் பாராட்டு விழா நடத்துவது தமிழர்களாகிய நம்முன் ஒற்றுமையை வளர்க்கிறது,

தொடர்ந்து 7 ஆண்டுகளாக இது போல் இலங்கை தமிழ் மாணவர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டு வருகிறது. இது வரும் காலங்களிலும் தொடரும் என்றார்.

விழாவில் இலங்கை தமிழ் மாணவர்கள் யோகேஸ்வரன், யோகேஸ்வரி, தமிழ் செல்வன், தமிழ்ச்செல்வி, திருச்செல்வம், ஹமிதா பேகம், அந்தோணி, கிளாரண்ட் உட்பட 23 பேருக்கு பரிசு வழங்கி பாராட்டு அளிக்கப்பட்டது.

அப்போது இலங்கை மாணவர்கள் சார்பில் பேசிய இலங்கை தமிழ் மாணவி தமிழ் செல்வி கூறும் போது, இலங்கை தமிழ் மாணவர்களாகிய எங்கள் மீது மிகுந்த அன்பு காட்டி எங்களை பாராட்டி கௌரவிப்பது மனத்திற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றார். ஸ்ரீ

மனிதனுள் இருக்கும் தெய்வத்தை
உணர்ந்து வாழ்வதுதான் நமது இலட்சியம்.
-ஜெயகாந்தன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரசியல் அஞ்ஞானமாக இருந்தால் மாயை எங்களை அழித்துவிடும்

மானிட வாழ்வு நிரந்தரமானதன்று. நிலையில்லா இவ்வுடலை நிலையானதென எண்ணுவது மனித இயல்பு. இதன் காரணமாகவே இந்த மண்ணில் மனிதப் பாவங்கள் நடந்தேறுகின்றன.

பாவம்-புண்ணியம் என்ற இரண்டு பதங்களே மனித வாழ்வை ஒழுங்கு படுத்துவனவாகும்.

நான் செய்வதெல்லாம் சரியானதென எவர் நியாயப்படுத்துகிறாரோ அவர் தன்னை அறியத் தலைப்படுவதில்லை.

'உன்னையே நீ அறிவாய்' என்ற வாக்கியப் பொருளே தன்னை அறியத் தலைப்படுதலாகும். ஒருவர் தன்னை அறிந்தால் அவருக்கும் பிறருக்கும் தீங்கு ஏற்படா.

எனினும் துரதிர்ஷ்டவசமாக, நம்மை நாம் அறியத் தலைப்படாது, பிறரை அறிய முற்படுகின்றோம். இங்குதான் முரண்பாடு கருக்கட்டுகின்றது. இந்த அவல நிலை எம்நாட்டு அரசியலில் தாராளம்.

ஆட்சியில் இருப்பவர்கள் தொடக்கம் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் அரசியல்வாதிகள்வரை தங்களை அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

இதைவிட பெருங்கேடு தமக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பு. இந்த இரண்டு மனநிலைகளும் நீங்க வேண்டுமாயின், அரசியல்வாதிகள் தங்களை சுயமதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டும்.

உதாரணமாக மேர்வின் சில்வாவின் செயல்களை விமர்சிக்கின்றோம். ஆனால் எங்களிலும் மேர்வின் சில்வாக்கள் இருக்கின்றனர்.

அவர்கள்ளை நாம் இனங்காணவில்லை என்பதற்காக அப்படியானவர் இல்லை என்ற முடிவுக்கு வந்து விடுவது நல்லதல்ல.

எதுவாயினும் மக்கள் விழிப்படைய வேண்டும். மக்கள் விழிப்படையாவிட்டால் அரசியல் வாதிகள் எங்களை ஏமாற்றி விடுவார்கள். இந்த ஏமாற்று நாடகமே தமிழினத்தில் நடந்து வருகிறது.

தமக்குத் தமக்கு பிடித்தமானவர்களை அரசியலில் புகுத்துவது, தமது அலுவல்களுக்காக அரசுடன் தொடர்புகளை கொண்டிருப்பது, அந்த தொடர்புகள் வலுவானதாக-மற்றவர்களுக்கு வெளிப்படாமல் இருப்பதற்காக தமிழ் இனத்திற்கு பாதகமான செயல்களை மறைமுகமாகச் செய்து முடிப்பதென எங்கள் அரசியல் புலத்தில் பலதும் நடந்தேறுகின்றது.

என்ன செய்வது! தமிழ்மக்கள் அரசியலை வெறுக்கின்றனர்.

அரசியல்வாதிகளை நேர்மையற்றவர்கள் என்றே முடிவெடுத்து விட்டனர். இவர்களை விமர்சிப்பது, அவர்களிடம் கேள்வி கேட்பது அனைத்தும் நேர விரயம் என்று கருதுகின்றனர்.

தமிழ் மக்களின் முடிவு இதுவாக இருந்தாலும், அரசியலும் அதனால் ஆதாயமும் எட்டக்கூடிய கூட்டம் மக்களின் நிலைப்பாட்டை அலட்சியம் செய்து விட்டு தங்கள் காரியத்தை கனகச்சிதமாக செய்து முடிக்கின்றது.

ஆகையால் தமிழ் மக்கள் விரும்பியோ, விரும்பாமலோ அரசியல் ஞானத்தை தேட வேண்டும். அரசியல் அஞ்ஞானமாக இருந்தால் மாயை எங்கள் வாழ்வை நாசம் செய்து விடும்.

### டில்லியில் நேற்று முதலமைச்சர் மாநாட்டு

# தமிழக மீனவர் படுகொலை முதல்வர் கருணாநிதி குமுறல்



(புதுடில்லி)

இலங்கை கடற்படையினரால் அண்மையில் இரு தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டதை அனைத்து மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழக முதல் அமைச்சர் கருணாநிதி வன்மையாக கண்டித்துள்ளார்.

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பாக விவாதிப்பதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் அனைத்து மாநில முதலமைச்சர்கள் மாநாடு புதுடில்லியில் நேற்று நடைபெற்றது.

இம் மாநாட்டில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி மத்திய அமைச்சர்களான பா.சிதம்பரம், ஏ.கே.அந்தோனி, பிரணாப்முகர்ஜி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இம் மாநாட்டில் உரையாற்றிய தமிழக முதலமைச்சர் கருணாநிதி, இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது உட்பட தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகும் அவலத்தையும் தனது உரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்தமாதம் 12ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து கடந்த 22ஆம் திகதி மேலும் ஒரு மீனவரும் கொல்லப்பட்ட கோரச்சம்பவம் நடந்துள்ளது. இவை வன்மையாகக் கண்டிக்கத்தக்கவையாகும்.

இந்திய மீனவர்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகம் உட்பட அவர்கள் மீது எந்தவிதத்திலும் தாக்குதல்கள் நடத்தப்படமாட்டாது என 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி இந்தியாவும் இலங்கையும் இணைந்து புதுடில்லியில் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி இலங்கை அரசாங்கம் நடந்துகொள்ளவேண்டும்.


சர்வதேச கடல் எல்லைப்பகுதிகளில் மீனவர்கள் வழிதவறி அண்டை நாட்டின் எல்லைக்குள் நுழைய நேர்ந்தால் மேலை நாடுகளோ அல்லது கீழை நாடுகளோ அவர்களை கைது செய்வதைத் தவிர உடல் அளவில் அவர்களுக்கு எந்த விதத்திலும் தீங்கிழைப்பதில்லை.

ஆனால் இந்திய மீனவர்கள் சர்வதேச எல்லைக் கோட்டை கடந்து இலங்கைக் கடற்பகுதிக்குச் சென்றால் இலங்கைக்கடற்படையினர் இந்திய மீனவர்களை தாக்குவதுடன் அவர்களைகொல்லும் கொடுமைகளும் அடிக்கடி நிகழ்கின்றன.

இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பகுதிக்குள் நுழைந்தால் நமது நாடு அவர்கள் மீது எடுக்கும் நடவடிக்கைகளை போல இலங்கை அரசாங்கமும் எல்லையைக் கடக்கும் இந்திய மீனவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை இந்திய மத்திய அரசு கேட்டுக்கொள்ள வேண்டும் என அவர் தனது உரையில் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை புதுடில்லியில் உள்ள தமிழக முதலமைச்சர் கருணாநிதியை மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மற்றும் வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் ஆகியோர் நேற்று சந்தித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து விளக்கம் அளித்துள்ளனர். (ந-5)

# தமிழ் வளர்த்த தீரர் பண்டிதர் கா.பொ.இரத்தினம்



'இவர் செய்வார் அவர் செய்வார்
எமக்கென்ன என்றிருந்தால்
எவர் செய்வார் தமிழ்ப் பணிகள்'
-என்று நம்மைத் தட்டி எழுப்பி
"...பைந்தமிழை அரியணையில்
ஏற்றி முதல் இடம் அளிக்க எல்லோரும்
இயன்றபணி
ஆற்றிடுதற்கு உறுதி கொண்டால்
அவனியிலே தலைநிமிர்ந்து மானமுள்ள
இனத்தினராய் மங்காத புகழுடனே ஊன
மின்றி வாழ்ந்திடலாம் உய்ந்து"

என்று நாம் ஒவ்வொருவரும் நம்மாலியன்ற அளவு தமிழ்ப்பணியைச் செயலிற்காட்டி அருந்தமிழன்னையை அரியாசனம் ஏறச் செய்ய வேண்டு மென்ற பெருவிருப்பினர். எனவேதான்,

"தேசிழந்து சோர்வடைந்து தேய்ந்த உள்ளம்
திட்பமுடன் உயர்வதற்குத் திறமை மிக்க
மாசிணையாப் பெருமருந்து மனத்துக் கென்றே
மாண்புடைய வள்ளுவனார் மதித்துத் தந்த
ஆசிணையாத் தமிழ் மறையே அவனி காணா
அரு மருந்தாம்"

என்று தமிழ் மறைக் கழகத்தை 1952லேயே நிறுவி உலகெங்கும் குறள் நெறி பரவும் வகை செய்தசெயல் வீரர்.

தமிழ் வழங்கும் நாடனைத்திலும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடச் செய்து, திருவள்ளுவர் தொடர் ஆண்டை முதன் முதலில் வழங்கச் செய்து செந்தமிழ்த் தொண்டைசெயற்படுத்திசெகமெங்கும் தமிழ்கொடி பறக்கச் செய்த செயல் மறவர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலணையிற் பிறந்து 18ஆண்டுகள் தொடர்ந்து இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராய் தமிழ் உரிமைக்குக் குரல் கொடுத்து உறவுக்குக் கைகொடுத்த பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள்தான், வான்புகழ்வள்ளுவன் தோன்றியவண்டமிழ் நாட்டில் மயிலாப்பூரில் திருவள்ளுவர் திருக்கோயிலில் ஆண்டு தோறும் திருக்குறள் முற்றோதலுக்கு அறக்கட்டளை நிறுவிய தீரர்.

பன்னிரெண்டு ஆண்டு கல்லூரி ஆசிரியப் பணிக்குப்பின் இலங்கை அரச கரும மொழித் திணைக்களத்தில் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராய்ப் பணியாற்றி பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட ஆட்சிச் சொற்களை வெளியிடுவதற்கு பொறுப்பாய் இருந்து செயலில் காட்டிய செந்தமிழ் சூரர். இருப்பத்திரண்டு உரைநடை நூல்களும் மூன்று கவிதை நூல்களும் எழுதிய இவருடைய கட்டுரைகளும் கவிதைகளும் இடம்பெறாத உலக ஏடுகளே இல்லை எனலாம்.

இவர் ஆற்றிய ஆய்வுரைகளும் தமிழ் முழக்கம் செய்து திரும்பிய நாடுகளும் செய்து முடித்த அரும்பெரும் பணிகளும் பெற்ற விருதுகளும் கணக்கிட்டுக் காட்ட முடியாதன;

ஆம், எண்ணமுடியாதஏற்றமிகுதொண்டாற்றியவர் உலகெங்கிலும் உள்ளதமிழர்களுடன் தொடர்புகொண்டு 1963 லேயே கோலாலம்பூரில் உலக தமிழ் மன்றத்தை நிறுவிய இவர்தம் தண்டமிழ்பணிக்குநாம் என்ன சொல்லி பாராட்டிவிடமுடியும்.

சென்னை
கம்பன் கழகம்

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### நாம் ஏன் ஒத்துப் போவதில்லை?

காலம் காலமாக இருந்து வரும் கஷ்டம் இதுதான். நான் இந்து. நான் என் சிறிய கிணற்றுக்குள் இருந்து கொண்டு என் சிறு கிணறு தான் முழுவுலகம் என்று நினைக்கின்றேன். [illegible] தன் இக்கிணறுதான் முழுவுலகம் என்று நினைக்கிறான். அவ்வாறே முகம்மதியனும் தன் சிறு கிணற்றில் உட்கார்ந்து கொண்டு, அதுதான் முழுவுலகம் என்று நினைக்கின்றான். நமது இந்த சிறிய உலகின் எல்லைகளைத் தகர்த்தெறிய, அமெரிக்கர்களாகிய நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பெரிய முயற்சிக்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்தவேண்டும். வருங்காலத்தில், உங்கள் விருப்பம் நிறைவேற இறை வன் அருள்புரிவான் என்று நம்புகிறேன்.

# யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றம் தாமதமாக இடம்பெற்று வருகின்றது

## பிரித்தானிய பிரதிநிதிகளிடம் யாழ்.பிரதிநிதிகள் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றம் தாமதமாக இடம்பெற்று வருவதாக பிரித்தானிய உயர் அதிகாரிகள் குழுவினருக்கு யாழ். பிரதிநிதிகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஆயர் இல்லத்தில் பிரித்தானிய உயர் அதிகாரிகள் குழுவினருக்கும் யாழ்ப்பாண பிரதிநிதிகள் குழுவினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேற்படி கலந்துரையாடலில் பிரித்தானிய உயர் அதிகாரிகள் குழுவில் அபிவிருத்திக்கும் அரசியலுக்குமான இரண்டாம் கட்ட செயலாளர் டொமினிக் வில்லியம்ஸ், அபிவிருத்திக்கான ஆலோசகர் டேவிட் அஸ்லி, அரசியல் அலுவலர் திருமதி அஸ்மா எட்ரிஸ் மற்றும் சுவிற்ஸர்லாந்து பிரமுகர் திருமதி சஸ்மா மூலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு யாழ். பிரதிநிதிகளாக யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ. பால சுந்தரம்பிள்ளை, அருட்தந்தை எஸ்.பி. நேச குமார், முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை எஸ்.ஜெ.செல்வராசா, ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம், வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரன், வர்த்தக சந்தைத் தலைவர் எஸ். பூரணச்சந்திரன், டாக்டர் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இந்த கலந்துரையாடலில் யாழ். சமூகப் பிரதி நிதிகளால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. யுத்தம் முடிந்து பல மாதங்கள் ஆகியும் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் மீள் குடியேற்றம் செய்யப்படாமல் உள்ளது. குறிப்பாக வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, எழுதுமட்டுவாள் போன்ற பகுதிகளில் மீள் குடியேற்றம் தாமதமாகவே இடம்பெற்று வருகின்றது.

அத்தோடு அரசியல் யாப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்கள், தமிழ் மொழி அமுலாக்கல் போன்ற பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவை தவிர தற்பொழுது இயங்குகின்ற மாகாண சபைகள் பூரணமாக இயங்குவதற்கு வலுவுள்ளதானதும் அதிகார முள்ளதாகவும் ஆக்கப்பட வேண்டும்.

மேலும் யாழ்ப் பாணத்தில் பிரித்தானிய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அத்தோடு இலங்கை அரசாங்கம் தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவித்து வருகின்ற நிலையில் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி பிரித்தானிய பல்கலைக்கழகங்கள் இங்குள்ள பல்கலைக்கழகங்களுடன் இணைந்தோ தனித்தோ இங்கு இயங்க முன்வர வேண்டும்.

ஆங்கில அறிவை முன்னெடுப்பதற்கு ஆங்கில கல்வியை வழங்க பிரித்தானிய அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் சிறு குடில் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

அத்தோடு யாழ். மாவட்டத்தில் பிரித்தானிய அரசாங்கத்தினால் முன்னெடுத்து வரும் அபிவிருத்திக்கும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சுவிற்ஸர்லாந்து அரசாங்கத்தால் வீடுகள் மறவன் புலோ பிரதேசத் தில் தலா 6 இலட்சம் ரூபா பெறுமதியில் 350 வீடுகள் அமைக்கப்பட்டதோடு அந்தப் பகுதியில் பாடசாலை ஒன்றும் நவீன முறையில் அமைக்கப்பட்டது. இத்தகைய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தனர்.

மேலும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் குழுவினர் கருத்துரைக்கையில்,

யாழ். மாவட் டத்தில் பிரித்தானிய அலுவலகம் அமைப்பது மற்றும் பல்கலைக்கழகம் அமைப்பது மேலும் ஆங்கில கல்வி தொடர்பாகவும் தாம் சாதகமான முடிபுகள் எடுப்பதாக தெரிவித்தனர்.

அத்தோடு இலங்கை நடுத்தர நாடாக உலக நாடுகளால் கருதப்படுவதால் உதவிகள் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் பொருளாதார உதவிகள் வழங்க முயற்சிப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ஸ்ரீ-6)

# ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க அரசு முன் வரவேண்டும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

வருடத்தில் ஜனவரி மாதமே ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர். லங்கா ஈ நியூஸ் அலுவலகம் நேற்று முன்தினம் தாக்கப்பட்டது.

இந்நாளானது அரசாங்கத்தால் ஏற் படுத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான மர்மமான நாளாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

ஊடகங்கள் மீதான தாக்குதல் மற்றும் அடக்கு முறைக்கு எதிராக கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் ஊடகவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கருத்துத் தெரிவித்த போதே தயாசிறி எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது ஊடகவியலாளர்கள் கடத்தப்படுவதோடு தாக்குதலுக்கும் உள்ளாகின்றனர்.

இதேவேளை ஊடக நிறுவனங்கள் மீதும் தாக்குதல்மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால் இவற்றை யார் மேற்கொள்கிறார்கள் எனத் தெரியவில்லை.

இதேவேளை ஊடக நிறுவனங்களில் போதைப் பொருட்களும் முறைகேடான செயல்களும் இடம்பெறுவதாலேயே இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என அரசாங்கம் கூறுகின்றது.

ஆனால் போதைப்பொருள் கடத்துபவர்கள் அரசாங்க பாதுகாப்பில் இருப்பதோடு அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பையும் வழங்கி வருகின்றது.

இதனைத் தவிர்த்து ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பை வழங்க அரசாங்கம் முன் வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# வவுனியாவில் பெய்துவரும் அடைமழையால் திருநாவற்குளம் பிரதேசம் மோசமாக பாதிப்பு

## 200 குடும்பங்கள் இடப்பெயர்வு

(கொழும்பு)

வவுனியாவில் பெய்துவரும் அடை மழையினால் திருநாவற்குளம் பிரதேசம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடியேற்றத்திட்டத்தின் தாழ்ந்த பகுதி நீரில் மூழ்கியதுடன் அங்கு வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் சுமார் 200 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

வீடுகள் பலவற்றில் நீர்புகுந்துள்ளதானால் வீடுகளைவிட்டு பலர் வெளியேறியுள்ளனர். அக் குடும்பங்களை சேர்ந்தோர் திருநாவற்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் சமைத்த உணவு வழங்கி உதவியுள்ளன. ஐ.சி. ஆர்.சி. கூடாரங்களை வழங்கியுள்ளது.

பெரும் மழை காரணமாக குளங்கள் நிரம்பி வழிவதோடு பாவற்குளத்தில் பாதுகாப்பு நீர் மட்டத்திற்கு மேல் ஒரு அடி நீர் பாய்வதனால் அந்தக் குளத்தின் வான்கதவுகள் 20 அங்குலம் திறக்கப்பட்டுள்ளன.

பாவற்குளம் நீர் பாய்வதனால் நெளுக்குளம், நேரியகுளம் ஊடான செட்டிக் குளத்துக்கான வீதிப்போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று பூவரசங்குளம், செட்டிக்குளம் வீதியிலும் வெள்ளம் பாய்வதனால் அந்த வீதியின் ஊடான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாற்றுவழியாக வவுனியா பறையனாலங்குளம் வீதியும், வவுனியா- பூனாவை செட்டிக்குளம் வீதியும் பாகனக்காரர்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன..,

பெரும் மழை காரணமாக ஆயிரக் கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. அண்மையில் பெய்த அடை மழைகாரணமாக அழிவுக்குள்ளாகி எஞ்சியிருந்த உழுந்து, பயறு, கௌபி போன்ற தானிய அவரைச் செய்கைகளும் பெருமளவிலான வாழை, பப்பாசி போன்ற பழப் பயிர்களும் அழிவுக்குள்ளாகியிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

புழுதியாக நெல்லை விதைத்த விவசாயிகளின் பயிர்நிலங்களில் அறுவடை இடம் பெற்று வரும் வேளையில் இந்த மழை பெய்யத் தொடங்கியிருப்பதனால் அறுவடை செய்யப்பட்ட கணிசமான வயற்காணிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மழை காரணமாக சிறு குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

வெள்ளம் சூழ்ந்துள்ள பூந்தோட்டம் திருநாவற்குளம், தாண்டிக்குளம் போன்ற பகுதிகளை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என் .சிவசக்தி ஆனந்தன் நேரில் சென்று நேற்று முன்தினம் பார்வை யிட்டார்.

திருநாவற்குளத்தில் நூற்றுக் கணக்கான வீடுகள் நீரால் சூழப் பட்டுள்ளன. மழை நீர், கிணற்று நீர், மலசலகூட நீர் ஆகியவை ஒன்றாகக் கலந் துள்ளதால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது என்றும்அவர்கூறினார். திருநாவற்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் தஞ்சமடைந்துள்ள பொது மக்களையும் சந்தித்து ஆறுதல் கூறினார். (ஸ்ரீ-2)

கண்ணீர் அஞ்சலி

அமரர்

கமலேஸ்வரி இரத்தினசிங்கம்

யா/சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய ஆசிரியர், திருமதி உமையாள் மணிவண்ணன் அவர்களின் அன்பு மாமியார் மரணமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை நலன்புரிச் சங்கம்

(3620)

# தேசிய தமிழ்மொழித்தினப் போட்டி பரிசளிப்பு விழா யூலை 19இல்

(யாழ்ப்பாணம்)

2011ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகளின் பரிசளிப்புவிழா யூலை 19ஆம் திகதி விபுலானந்தர் நினைவு தினத்தில் நடத்தப்படுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வடக்குமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தகவல் தருகையில்,

2011ஆம் ஆண்டுக்கான தமிழ்த் தினப் போட்டிகளை நடத்துவது தொடர்பில் கல்வியமைச்சின் தமிழ்மொழி பிரிவு நேற்றுமுன்தினம் விசேட கூட்டம் ஒன்றை நடத்தியது.

இதில் இந்த ஆண்டிற்கான தேசிய மட்ட தமிழ் மொழித்தின போட்டிகளின் பரிசளிப்புவிழாவை விபுலானந்தர் நினைவு தினமான ஜூலை 19ஆம் திகதி நடத்தப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பாடசாலை மட்டத்திலான போட்டிகளை மார்ச் 10 ஆம் திக திக்கு முன்னரும் வலய மட்டப் போட்டிகளை மார்ச் 25ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மாகாண மட்ட தமிழ் மொழித் தினப்போட்டிகளையூன் 5 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட்டு கல்வி அமைச்சுக்கு தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

எனவே 2011ஆம் ஆண்டு தமிழ் மொழித்தினப் போட்டிகள் தொடர்பிலான 2009/05 சுற்று நிருபத்தின் பிரகாரம் பின்இணைப்புகள் அடங்கிய சுற்று நிருபம் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும்.

இவ்வாறு வடக்குமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ந-5)

# மூலிகைக்கருத்தரங்கு

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையினால் நடத்தப்படும் மூலிகைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று முற்பகல் 11.30 மணிக்கு அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இக்கருத்தரங்கை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி திருமதிவிவியன்சத்தியசீலன்மற்றும்உதவி விரிவுரையாளர்கள் நடத்துவர். (ந)

# வட. மாகாணக் கல்வி அபிவிருத்திக்கு 310 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்கு இவ் ஆண்டு 310 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,

இவ் ஆண்டிற்கான கல்வி அபிவிருத்திப் பணிகளுக்கு 310.5மில்லியன் ரூபாய் நிதி வடக்கு மாகாண சபையினால்வடக்கு மாகாணக்கல்வி அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 200மில்லியன் ரூபாயும், நவோதயா திட்டத்தில் 30மில்லியன் ரூபாயும், உலக வங்கியின் வருடார்ந்த நிதி வழங்கலில் 80.5 மில்லியன் ரூபாயும் அடங்குகின்றன.

இதனைவிட அறிவுசார் கல்வி செயற் திட்டத்தில் (EKSP) 335 பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு 2ஆயிரத்து 500 கணனிகளும், 10ஆயிரம் மாணவர்களுக்குரிய மேசை, கதிரைகளும் ஆயிரம் ஆசிரியர்களுக்குரிய மேசை, கதிரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 65வீதமான தளபாடங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப் பட்டுள்ளன.

அத்துடன் யுனி செவ் நிறுவனத்தினால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கும், இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும் வழங்குவதற்குரிய கல்வி உபகரணங்கள் அடங்கிய பொதி வழங்கப்பட்டுள்ளது. இவை விரைவில் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

மேலும் யுனிசெவ் நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் புதிய கட்டிடத் தொகுதியை அமைத்துக் கொடுப்பதுடன் இன்னும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தயாராகவுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாணக்கல்விப்பணிப்பாளர்ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ந)

# ஊடகம்...

லகம் மீதான அண்மைய தாக்குதல் குறித்து நாம் ஆழ்ந்த கவலையடைகிறோம்.

இச்சம்பவத்திற்கு யார் பொறுப்பாக இருந்தாலும் ஊடக நிறுவனங்களுக்கு எதிரான இத்தகைய வன்முறைகள்கருத்துசுதந்திரத்தை மேலும் அச்சுறுத்துவதுடன் நாட்டில் ஜனநாயகத்தையும்பலவீனப்படுத்துகிறது. இச்சம்பவம் குறித்த விசாரணைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளதை நாம் புரிந்துகொண்டுள்ளோம். இவ்விசாரணைவிரைவாகவும் முறையாகவும் நடைபெறுவதுடன் குற்றம்புரிந் தவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# சிறிசாந்த் புதிய அவதாரம் இசைக்குழுவை ஆரம்பித்துள்ளார்

இந்திய கிரிக்கெட் வீரர் சிறிசாந்த் புதிய அவதாரம் எடுத்துள்ளார். உலகக் கிண்ண அணியில் இடம்பெறாத சிறிசாந்த் எஸ்-36 இசைக்குழுவை ஆரம்பித்துள்ளார்.

இந்திய அணியின் இளம் வீரர் சிறிசாந்த் சமீபத்திய தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயல்பட்ட போதிலும் உலகக் கிண்ண அணியில் இடம் கிடைக்கவில்லை. இதனால் சோர்ந்து இருந்த அவர் தற்போது எஸ்-36 என்ற இசைக் குழுவை ஆரம்பித்துள்ளார்.

இதில் எஸ் என்பது சிறிசாந்த் என்பதையும் 36 என்பது இவரது ராசியான ரீசேட்டையும் குறிக்கும். இந்த குழுவில் பின்னணி பாடகர் மது பாலகிருஷ்ணன், தீபக் வாரியர் உள்ளிட்ட பலர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக்குழுவின் முதல் நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொச்சியில் நடந்தது. இதில் உலகக் கிண்ண தொடரில் பங்கேற்கும் இந்திய அணியை உற்சாகப்படுத்தும் விதத்தில் இவர் எழுதிய ஹலோ ஷேர் பங்கே... என ஆரம்பிக்கும் இந்தி பாடலை மேடையில் பாடி அசத்தினார்.

தவிர அன்புள்ள அழகே என்ற பாடல் உட்பட பல தமிழ்ப் பாடலையும் பாடினார். காமினி என்ற இந்திப்படத்தின் பாடலுக்கு நடனமாடி ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். இது குறித்து சிறிசாந்த் கூறுகையில்,

இந்தக்குழுவில் இணைந்து பாடல்கள் எழுதுவது, பாடுவது, நடனம் ஆடுவது பியானோ உள்ளிட்ட இசைக் கருவிகளை வாசிப்பது என அனைத்தையும் சிறிது சிறிதாக செய்யவுள்ளேன். ஏனெனில் என்னைவிட சிறந்தவர்கள் இதில் உள்ளனர். நான் அவர்களுக்கு ஆதரவாக மட்டும் இருப்பேன் என்றார்.

# தமிழக...

வடிக்கைகள் குறித்தும் மத்திய அமைச்சர் கிருஷ்ணா தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கு விளக்கியுள்ளதாக இவ் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை இந்தியக் கடல் எல்லைக்குள் வந்து மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் 300க்கும் அதிகமானோரை சிறைப்பிடித்துள்ளதாகவும் அவர்கள் வந்த 60 மீன்பிடிப் படகுகளை கைப்பற்றியுள்ளதாகவும் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். (ந-5)

# விடுதலைப் புலிகளை...

யுத்த ரீதியாக தோற்கடிக்க முடியாது என பலர் கருதிய போதிலும் அந்த எண்ணக்கரு பிழையானது என இலங்கை அரசாங்கம் நிரூபித்தது. எனினும் அதற்காக அதிகளவு பொதுமக்களின் உயிர்கள் இழக்கப் பட்டது.

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் ஆகியனவே தற்போதைய இன்றியமையாத தேவையாகவுள்ளது.

யுத்த வலயத்திலிருந்த பொது மக்களை பாதுகாப்பாக விடுதலை செய்வதற்கு புலிகள் தவறினர். இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச சட்டங்களை மீறி செயல்பட்டுள்ளனர்.

பொது மக்களை தெற்கு நோக்கி நகர்வதற்கு புலிகள் அனுமதித்திருந்தால் பாரியளவு உயிர்ச் சேதங் களைத் தவிர்த்திருக்க முடியும்.

பொதுமக்கள் நிலைகளிலிருந்து படையினர் மீது தாக்குதல் நடத்தி பதில் தாக்குதல்கள் மூலம் பொது மக்களுக்கு இழப்புக்களை ஏற்படுத்த புலிகள் திட்டமிட்டு செயற்பட்டனர்.

பொதுமக்கள் இழப்புக்களை காரணம் காட்டி சர்வதேச சமூகத் தைக் கொண்டு அரசாங்கப் படையினரின் முன் நகர்வுகளை தடுத்து நிறுத்த புலிகள் முயற்சித்தனர்.

பயங்கரவாதம் இல்லாதொழிக் கப்படவேண்டிய அதேவேளை பொதுமக்கள் உயிர்ச் சேதங்களை அடையக் கூடாது என்பதே மேற்கு லகநாடுகளின் அப்போதைய நிலைப்பாடாக அமைந்திருந்தது.

இரண்டு தரப்பினரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர். இதனால் பொது மக்களின் உயிரிழப்புகளுக்கு இரு தரப்பினரும் பொறுப்புச் சொல்ல வேண்டும். பொதுமக்களின் உயிரிழப்புக்களுக்குப்பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டும். வடக்கில் தேர்தல்கள் நடத்தப்பட்டு ஜனநாயக சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என அமெரிக்காவின் முன்னாள் இலங்கைக்கான தூதுவரும் தெற்காசிய நாடுகளின் தற்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலாளருமான றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார். (ந-5)

# வவுனியா...

தலையடுத்து குளத்தின் 10 கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

வரலாற்று பிரசித்திபெற்ற சோமா வதி சைத்திய வெள்ளத்தில் மூழ்கியதால் குடிநீர் உலர் உணவுப்பொருட்கள் என்பன கடற்படைப் படகுகள் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளன. (ந-5)

# 400 கிராம்...

ருக்கு தெரிவித்துள்ளோம்.

விலை அதிகரிப்பை அனுமதிக்காவிட்டால் பால்மா கம்பனிகள் வியாபாரத்தை கைவிட வேண்டிய நிலைவரும்.

16 ரூபாய் இறக்குமதி வரி நீக்கம் பெரிய தாக்கம் எதனையும் விளைவிக்க போவதில்லை. தேசத்தை கட்டியெழுப்பும் மற்றும் வியாபார புரள்வுவரி ஆகிய வரிகள் தொடர்கின்றது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அநேகமான வெளிநாட்டு பால்மா கம்பனிகள் விலை அதிகரிப்புக்கான அனுமதியை கோருகின்றன. நாம் எமது நடவடிக்கை பற்றி யோசித்து வருகின்றோம். இது தொடர்பில் விரைவில் அறவிப்போம் என வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். (ந-5)

# 1983 ஜூலை கலவரத்திற்காக...

கொழும்பில் நடைபெற்ற கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக் குழுவின் அமர்பில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது,

யாழ்ப்பாண மண் மிகவும் செழிப்பானது. அங்குள்ள மக்களும் சிறந்த முறையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். 1980களில் யாழ்ப்பாணத்தில் விவசாய உற்பத்தி அதிகளவில் காணப்பட்டது. ஆனால் தற்போது மிகவும் குறைந்து விட்டது. அங்கு விவசாய உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் அந்தமக்களின் உற்பத்திகளை நாம் விலைக்கு வாங்க வேண்டும்.

1983ஆம் ஆண்டு நாம் பாரிய தவறு ஒன்றைச் செய்தோம். அந்த ஆண்டின் கறுப்பு ஜூலைச் சம்பவமே புலிகள் பாரிய அளவில் பலம் அடைவதற்கான முக்கிய காரணம் ஆகும். யாழ்ப்பாணத்தில் அன்று 13 படைவீரர்கள் உயிரிழந்ததும் அவர்களின் சொந்த இடங்களில் நல்லடக்கம்செய்திருக்கலாம். ஆனால் இறந்தவர்களின் உடல்களை கொழும்புக்குக் கொண்டுவந்து அன்று வன்முறை இடம்பெறுவதற்கு சிலர் வழி வகுத்தனர். சர்வதேச மட்டத்தில் எமக்கு பாரிய அபகீர்த்தி ஏற்பட்டது. புலிகளும் பலம்அடைந்தனர். பலர் நாட்டை விட்டு வெளியேறினர். நான் எனது பகுதியில் தமிழ் மக்களைபாதுகாத்தேன் என்பதனை இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும்.

இதேவேளை இந்தியாவை நாம் சகோதரனாகவும் தமிழகத்தை உறவினராகவும் பார்க்கவேண்டும். இந்தியாவை எமது பாதுகாவலனாக வைத்துக் கொள்வதுடன் அந்த நாட்டை மீறி எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது. எமது வெளிவிவகாரக் கொள்கையை உருவாக்கும் போதும் இந்தியா குறித்து அதிகளவில் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

தமிழகத்தில் 8கோடி தமிழ் மக்கள் உள்ளனர். எனவே தமிழகத்துடன் நாங்கள் சிறந்த உறவைப் பேணவேண்டும். எமது நாட்டின் எதிர்காலம்சிறப்பாக அமைய நாம் தமிழகத்துடன்சிறந்த உறவைப்பேண வேண்டும். தமிழகத்தை கோபமூட்டினால் எதிர்காலத்தில் எமக்குப் பிரச்சினைகள் வரலாம். இந்தியாவுக்கு விரோதமான எந்தவொரு நடவடிக்கையிலும் நாங்கள் ஈடுபடக் கூடாது. அந்த நாட்டை எமது பாதுகாவலனாகப் பார்க்கவேண்டியது அவசியமாகும். உண்மையில் இந்தியா எமது பாதுகாவலனாகவே செயற்படும். இலங்கையில் பிரிவினை ஏற்படுவதற்கோ, தனி நாடு அமைவதற்கோ இந்தியா ஒருபோதும் இடம் அளிக்காது.

தனி நாடு ஒன்று அமைந்தால் இந்தியாவுக்குப் பிரச்சினை ஏற்படும் என்பது அந்த நாட்டிற்குத் தெரியும். எனவே சீனாவிடம் மாட்டுவண்டியை வாங்கினால் இந்தியாவிடம் மாடுகளையாவது பெறவேண்டும். எந்தவொரு வகையிலும் இந்தியாவைப் புறக்கணிக்கவோ, பகைத்துக் கொள்ளவோ கூடாது. இந்தியாவில் தேர்தல் நடத்தப்பட்டபோது நாங்கள் இலங்கையில் கனரக ஆயுதப் பாவனையை நிறுத்தியிருந்தோம். இது உண்மையில் சிறந்த நகர்வாகும்.

வடக்கில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். யாழ்ப்பாண மக்கள் சிறந்த முறையில் கல்வி கற்பவர்கள். முன்னர் அரச சேவையில் அதிகமான அளவில் வடக்கு மக்களே இருந்தனர். மேலும் அவர்கள் கல்வியை ஒருபோதும் கைவிடவில்லை. எனது ஆசிரியராக இருந்தவர் ஆனந்த சங்கரி என்பதனை இந்த இடத்தில் தெரிவிக்கின்றேன். 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ் மக்களுக்கு பாரிய அநீதி ஏற்பட்டதாக நான் கருதவில்லை. அப்போதைய அரசியல்வாதிகள் சுயநல அரசியலுக்காக பிரிவினையை முன் வைத்தனர்.

தனி நாட்டுப் பிரகடனத்தை வெளியிட்டனர். வடக்கு மக்கள் ஜனநாயகத்தை எதிர்த்தனர் என்று நான் ஒருபோ தும் கூறமாட்டேன். ஆனால் புலிகள் அவர்களுக்கு பாரிய தடையாக இருந்தனர். மேலும் பொன்னம்பலம் மற்றும் இராமநாதன் போன்ற தலைவர்களுக் குப் பின்னர் அவர்களைப் போன்ற தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் உருவாகவில்லை.

எமது அரசாங்கம் மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொண்டு மக்களை மீட்டெடுத்தது. அந்த வேலைத் திட்டத்தின் போது இராணுவத்தினர் சிறப்பாகச் செயல்பட்டனர்.

எங்களுக்கு முப்படையினருடன் சிறந்த தொடர்புகள் உள்ளன. படையினருக்கு உணவு வழங்கும் நிறுவனம் ஒன்றை எனது மனைவி நடத்தி வருகின்றார். எனவே அவர்களைப் பற்றித் தெரியும். இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படவில்லை.

மாறாக பயங்கர வாதத்திற்கு எதிராகவே நடத்தப்பட்டது. அத்துடன் இன ரீதியிலோ, மத ரீதியிலோ நாட்டில் அரசியல் கட்சிகள் இருக்கக் கூடாது என்று நான் எண்ணுகின்றேன். அதனைத் தடுப்பதற்கு அரசியல் அமைப்பில் திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்றார். (ந-5)

# நெல்லியடியில்...

குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை- நெல்லியடி பிரதான வீதியில் துவிச்சக்கர வண்டியில் கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் கனரக வாகனத்துடன் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந் நிலையில் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.எனினும்சிகிச்சைபயனளிக்காத நிலையில்பிரஸ்தாபக்குடும்பஸ்தர் நேற்றுப் பிற்பகல் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-10,51,24)


நேற்றைய வலம்புரி

ஒன்பது வயதில் கம்ப்யூட்டர் மேதாவியாக திகழும் சிறுமி



Closing Date 02.01.2010

மைக்ரோசொப்ற் பரீட்சை நிலையம்

நீங்களும் சர்வதேச தகைமையை பெறுங்கள்

SMS your name & course to 772 395 895 & Get Schol.

324,Palaly Road,Parameswara Junction

www.mcsitcampus.org

MCS

Supported By UNDP/JRRP


## வட மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட உதவியாளருக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு தயார்படுத்தும் பயிற்சியரங்கு

இம்மாதம் (பெப்ரவரி 2011 இல்) நடைபெற இருக்கும் மேற்கண்ட பரீட்சைக்கு பரீட்சார்த்திகளைத் தயார்ப்படுத்துவதற்கான *நான்கு முழு நாள் பயிற்சியரங்கு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி* சனிக்கிழமையிலிருந்து நலலூர் மங்கையற்கரசி வித்தியாலயம் (நல்லூர் பின் வீதியில்) 8 மணிககு ஆரம்பமாகின்றது.

அலுவலக நிர்வாகம், நிதிப்பிரமாணங்கள் மற்றும் அபிவிருத்தி திட்டமிடல் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சிறந்த தகுதியும், நீண்டகால தொழில் அனுபவமும், கற்பித்தல் அனுபவமும் கொண்ட வளவாளர்களான

| | |
|---|---|
| V. வீரபத்திரபிள்ளை | ஓய்வுபெற்ற AGA,தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம |
| A. சத்தியமூர்த்தி | AO, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் |
| M. சத்தியசீலன் | செயலாளர், பிரதேச சபை, நல்லூர் |
| S. நாகராஜா | ஓய்வுபெற்ற கணக்காளர், கச்சேரி, யாழ்ப்பாணம் |
| K. மகேஸ்வரன | உதவி இயக்குனர், திட்டமிடல், கச்சேரி, யாழ்ப்பாணம் |

ஆகியோரால் வழிகாட்டலும் பயிற்சிகளும் வழங்கப்படும். பரீட்சார்த்திகள் தங்கள் பெயர்களை உடன் பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு – K.சிவகுமா

0750395065, 0777184410

(சி-2328)

# கோத்தபாயவுக்கு...

பினர் பதவியைப் பெற்றுக் கொடுப்பதற்காக பெரும்பாலும் கமலா ரணதுங்கவின் பதவி பறி போகலாம் என்பதாகவும் தெரியவருகின்றது.

கமலா ரணதுங்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் அணித் தலைவியாக இருந்து கட்சிக்கு ஆற்றிய பணிகளைக் கௌரவிக்கும் பொருட்டு கடந்த பொதுத் தேர்தலின் போது தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

இதற்கிடையே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் அரசியலுக்கு வருவதில் அதிக ஆர்வம்இல்லை எனவும், ஆயினும் ஜனாதிபதியின் வற்புறுத்தலை தட்டமுடியாத நிலையில் அவர் நாடாளுமன்ற நியமனத்தை ஏற்றுக்கொள்ளலாம் எனத் தெரியவருகின்றது. (ந-5)

## அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதியுயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சைக்கு தயார்படுத்தல் பயிற்சியரங்கு

மேற்கண்ட பரீட்சையை எதிர்நோக்கியிருக்கும் விண்ணப்பதாரிகளைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் பொருட்டு *5 முழுநாள் பயிற்சியரங்கு 2011 பெப்ரவரி 5 ஆம் திகதி காலை 8 மணி* முதல் ஆரம்பமாகின்றது.

அலுவலக முகாமை, அலுவலக முறைமை, தாபன நடைமுறை, அரச நிதிமுகாமை மற்றும் பொது வினாத் தாளுக்கான அரசியல், பொது நிர்வாகம், மனித உரிமைகள் தொடர்பில் பொது அறிவுசார் பயிற்சிகளையும், வழிகாட்டலகளையும் சிறப்பாக வழங்க அத்துறைகளில் நீண்ட அனுபவமும், போதனை பயிற்சியும் மிக்க

| | |
|---|---|
| V.வீரபத்திரபிள்ளை | ஓய்வுபெற்ற AGA, தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம |
| A.சத்தியமூர்த்தி | AO, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் |
| M.சத்தியசீலன | செயலாளர், பிரதேச சபை, நல்லூர் |
| K.T.கணேசலிங்கம | சிரேஷ்ட விரிவுரையாளர், அரசியல்துறை,யாழ் பல்கலைக்கழகம் |
| F.X.விஜயகுமார் | சட்டத்தரணி, சட்டபீட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம் |

ஆகியோரைக் கொண்ட வளவாளர் குழுவினரைக் கொணடு இப்பயிற்சியரங்கு நடைபெறும்.


விண்ணப்பதாரிகள் தங்கள் பெயர்களை உடன் பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு – K.சிவகுமார்

0750395065, 0777184410

(சி-2328)

# மரண அறிவித்தல்



கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் இலக்கம் 21 றக்கா லேன் சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு குணசேகரம் 30.01.2011 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் அமரர்கள் கதிரவேலு ஆச்சிமுத்து தம்பதிகளின் புதல்வனும், பராசக்தியின் (பெற்றியின்) அன்புக் கணவரும், சுபாசினி (சுவிஸ்), பிரணவன் (பிரதி), (AMT ரான்ஸ்போர்ட் சேவீஸ்), பிரபாகினி (சோபா-லண்டன்), தனுசாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றமேஸ் (சுவிஸ்), சேகர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின், அபினாஸ், அஸ்வினியா ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் குணம், குணரத்தினம், குணசீலன், குணபாலன் (பபா), குணபாலசிங்கம் (குஞ்சுக்கிளி-லெபனான்), சந்திரசேகரம் (பிரான்ஸ்), இராஜசேகரம் (ஹொலன்ட்), செயக்குமார் (மோகன்-ஹொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.02.2011 நாளை வியாழக்கிழமை காலை 8.30 தொடக்கம் 10.30 மணி வரை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

(3623)

**கதிரவேலு குணசேகரம் (பேபி)**

21, றக்கா லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மனைவி-பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது